1433

Reg. No. M. 2911.

ஸ்ரீமுக-புரட்டாசி
1933ஞு செப்டம்பர்-அக்டோபர்மீ

# பாரதி




மாலை 5· மணி 6.

## ஓர் செந்தமிழ்
## மாதப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF C.
18 DEC 1933
MADRAS

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

2211, 4249.34
N33 . 5 . 6
197894

__நமது புதிய பிரசுரங்கள்__

வெளிவந்துவிட்டன!　　வெளிவந்துவிட்டன!!

# சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்
நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.

*"தமிழ் நாடு" ஆசிரியர்*

டாக்டர் P. வரதராஜலு நாயுடு அவர்களின்
*முகவுரையுடன் கூடியது.*

*தோட்டியும் தொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்*
*ஏற்றத் தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற*

சோவியத் ருஷியாவை அறிய இதுவே முதல் சந்தர்ப்பம்.

*விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஆப்டோன்*
*படங்களுடன் கூடிய*

*ஆர்ட் & கிளேஸ் பதிப்பு* **விலை ரூ. *1—4—0.***

*தபால் செலவு வேறு*

---

# *ராட்டூர்-வீரன்-* துர்க்கா தாஸ்.

*(சரித்திர சம்பந்தமான ஓர் தேசிய நாடகம்)*

*வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்*
*எழுதியது.*

*அவரது நாடகங்களத்தனையிலும்*

__இத் துர்க்கா தாஸே முதன்மையானது.__

ஆரம்ப முதல் இறுதி வரை
அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! அலங்கார பாஷை!!
மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!

*கிரௌன் 1/8 சைஸ்*

380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. **1—4—0.**

*தபால் செலவு வேறு.*

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.

OFFICE OF THE
18 D
M A

197854
சென்னை

# ஈழ கேசரி.

## வட இலங்கையிலிருந்து
## ஞாயிற்றுக்கிழமை தோறும்
## 12 பக்கங்களுடன் வெளிவருவதோர்
## சிறந்த வாரப் பத்திரிகை.

(நான்காவதாண்டு)

**இலங்கை, இந்தியா, பர்மா, மலாய்நாடு முதலிய விடங்களில் ஏராளமான சந்தாதாரர்களையுடையது.**

சிறந்த பேரறிஞர்களால் எழுதப்பெறும் இலக்கண இலக்கிய சம்பந்தமான அரிய கட்டுரைகளும், வரலாற்று ஆராய்ச்சி, அரசியல், பொருளாதார நிலை, சமயம், கல்வி, மாதர் பகுதி, சிறுவர் பகுதி, சமூக முன்னேற்றம் முதலிய பொது விஷயங்களும், வர்த்தமானங்களும் சிறப்பாக வெளிவருகின்றன.

தமிழன்பர்கள் யாவரையும் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**ஆண்டுச் சந்தா:**

இலங்கை, இந்தியா, பர்மா ரூபா **4.**
மலாய் நாட்டுக்கு வெள்ளி **4.**

மாதிரிப் பிரதி இனம்! உடனே எழுதுங்கள்!!

விலாசம்:
"ஈழ கேசரி" அதிபர்
சுன்னாகம், இலங்கை.



# தமிழரசு.

ஓர் சிறந்த மாதப் பத்திரிகை.

ஆசிரியர்: டாக்டர். மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்.

அறிவை விரிவடையச் செய்யும் வியாசங்கள், நல்ல நல்ல கதைகள், நகைச் சுவை ததும்பும் கட்டுரைகள், சரித்திரங்கள் முதலியவைகள் அடங்கியிருக்கின்றன. சித்திரப் படங்களால் இது அலங்கரிக்கப்பட்டு வெளிவருகிறது.

சந்தா விபரம்:

வருடம் 1-க்கு ரூ. 1—0—0. தனிப் பிரதி 1 அணா.
அயல் நாடுகளுக்கு ரூ. 2—0—0. ,, 2 ,,

விலாசம்:
மானேஜர், "தமிழரசு ஆபீஸ்,"
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# சன்மார்க்கன்.

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

நாவலூற்று சாமி சிவநேசம் அவர்களை ஆசிரியராகப் பெற்றுச் "சன்மார்க்கன்" பகுத்தறிவுக் கேற்றவாறு மக்கட் பிறப்பில் உயர்வு தாழ்வாகிய சாதி, சமய வேற்றுமைப் பிணக்குகளைக் களைந்து, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரத்துவமான உரிமைகளைப் பெறும் வழிகளும், உயரிய கட்டுரைகளும் நிரம்பப் பெற்று வெளிவருவது.

சந்தா விபரம்:

வருடம் 1-க்கு ரூ. 1—0—0. தனிப் பிரதி 2 அணா.
அயல் நாடு ,, 1—8—0.

விலாசம்:
மானேஜர், "சன்மார்க்கன்."
திண்டுக்கல்.

# “ பா ர தி ”

## சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

ஸ்ரீமுக சித்திரை முதல் 5-ம் ஆண்டு ஆரம்பம்.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் ஜாதி, மத, கட்சி பேதங்களற்று
இந்தியரனைவரும் பாரத மாதாவின் மக்க
ளென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாஸிகை

**“பாரதி” ஒன்றே யாகும்.**

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

**சந்தா விபரம்:**

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2/=** அல்லது **3** ஷிலிங்
வெளி நாடுகளுக்கு ,, ரூ **3/=** ,, **5** ,,

போஷக சந்தா குறைந்தது ரூ **100/=**

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.

இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,
“பாரதி” ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா, S. இந்தியா.



# குமார விகடன்.

ஹாஸ்ய ரசம் ததும்பும் அற்புதப் பத்திரிகை.

வேடிக்கை! விநோதம்! விசித்திரம்! விகடம்!

**வீரமான வேடிப்புரைகள்! காரமான கட்டுரைகள்!**

சாரமான பேச்சு! சத்தியத்தின் வாள் வீச்சு!

கதை, கவிதை, கலை, களிப்பு, கண்டனம், புகழ்
யாவும் பொதிந்து, அழகிய பல சித்திரப் படங்களோடு
மாதா மாதம் வெளியிடப்பெறும் ஓர்

## விகடப் பத்திரிகை.

தூக்கத்தில் ஆழ்ந்துள்ள தமிழருக்குப் பெரும் ஊக்கம்
கொடுத்து, உயர்வடையச் செய்யவேண்டும் என்னும்
உயர்ந்த நோக்கத்தோடுதான் நமது பத்திரிகை
வெளியிடப்படுகிறது.

**சந்தா விவரம்.**

உள் நாடு ... ... ரூ. 1—4—0
வெளி நாடு ... ... ரூ. 2—0—0

தனிப் பிரதிகள் எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகளிடம்
கிடைக்கும். விலை அணா 0—2—0.

விலாசம்:

**“குமார விகடன்,”**

காஞ்சீபுரம்.

## நம்மிடம் கிடைக்கும் இதர நூல்கள்.

| | | |
|---|---|---|
| 1. | நெப்போலியன் போனபார்ட் | 0—4—0 |
| 2. | முத்தண்ணா (ஓர் துப்பறி கற்பிதம்) | 1—12—0 |
| 3. | அறநூல் மூலம் | 0—3—0 |
| 4. | ஷை பதவுரையுடன் | 0—12—0 |
| 5. | ஸ்ரீ அரவிந்த யோக விளக்கம் | 0—4—0 |
| 6. | வீர சிவாஜி விஜயம் | 0—3—0 |
| 7. | ஸ்ரீ ராமகிருஷ்ணாமிருதம் | 0—6—0 |
| 8. | அன்னை (ஸ்ரீ அரவிந்தர் அருளியது) | 0—4—0 |
| 9. | கீதை காட்டும் பாதை | 0—10—0 |
| 10. | புது யுகப் பாட்டு | 0—5—0 |
| 11. | ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம் | 0—12—0 |
| 12. | தென் இந்தியா விவசாய நூல் | 1—4—0 |
| 13. | பனத சங்கரி (ஓர் துப்பறியும் நவீனம்) | 1—0—0 |
| 14. | ஜான்ஸி மஹாராணி லக்ஷ்மீபாய் சரித்திரம் | 0—2—0 |
| 15. | போலந்து நாட்டின் சுதந்திரம் | 0—1—0 |

தபாற் செலவு பிரத்தியேகம்.

**பாரதிப் புத்தகாலயம்,**

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

---

### "பாரதி"யில் விளம்பரஞ் செய்ய விகிதம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாரண | பக்கம் | 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, | | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, | | 3—0—0 |
| கவர் | ,, | 2 & 3 | ,, | | 15—0—0 |
| ,, | ,, | 4 | ,, | | 20—0—0 |

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.
நீண்டகாலம் விளம்பரந் தருவோர் மானேஜருக்கு எழுதவும்.

---

# சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

## தமிழ் நாட்டின் தேசிய கவி.

(ஓர் அரிய ஆராய்ச்சி நூல்.)

திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள் எழுதியது.

"பாரதி" ஆசிரியர்

திரு. ப. நாராயணஸ்வாமி அவர்கள் பதிப்பித்தது.

கவிச் சக்ரவர்த்தி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, கவிதா விலாசம், தேசாவேசம், இயற்கை ரசனை இவைகளை யறிய இதைவிட வேறு சந்தர்ப்பம் வாய்க்கப்போகிறதா?

கிரௌன் ⅛ சைஸ் கிளேஸ் பதிப்பு.

**240** பக்கங் கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. *1*.

தபாற் செலவு வேறு.

---

# "பாரதி"

## பைண்ட் வால்யம்

'தமிழ் நாட்டு மாடென் ரேவியூ' வெனப் புகழப்பெற்று, சென்ற 1929-ம் ஆண்டு முதல் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இந்த பைண்ட் வால்யங்களில் பல பெரியோர்கள் சரிதைகளும், தேசாபிமானச் செல்வர்களின் ஜீவியக் குறிப்புகளும், அவர்தம் படங்களும் நிறைந்திருக்கின்றன.

நேர்த்தியான காலிகோ- கில்ட் பிரிண்ட்.


| | | | | |
|---|---|---|---|---|
| 1-ம் | வருட வால்யம் | 1-க்கு விலை | ரூ. | 3—0—0. |
| 2-ம் | ,, | ,, | ரூ. | 2—8—0. |
| 3-ம் | ,, | ,, | ரூ | 2—8—0. |
| 4-ம் | ,, | ,, | ரூ. | 2—8—0. |
| 3-ம் | வருட அனுபந்தம் | | ரூ. | 0—4—0. |

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர்க்குத் தபாற் செலவுடன் வால்யம் 1-க்கு ரூ. 3½ அல்லது 5½ ஷிலிங்.

**'பாரதி' ஆலயம்,**

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



சிறந்த செந்தமிழ் மாஸிகை.


## பொருள் அடக்கம்.

மாலை 5. ஸ்ரீமுகஸு புரட்டாசிமீ மணி 6.


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | விவசாயக் கைத்தொழில்—ஆசிரியர், "பாரதி" ... | 409 |
| 2. | ருக்மணியின் தேச பக்தி—திரு. ரெ. சீனிவாஸன் அவர்கள் | 415 |
| 3. | ஊன்றி உணர்தற்குரிய உண்மைகள்— பண்டித திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் ... | 419 |
| 4. | மகாத்மா காந்திஜியும் தற்கால நாகரீகமும்— தீனபந்து ஸி. எப். ஆண்ட்ரூஸ் அவர்கள் ... | 420 |
| 5. | கலியாணம் காதலுக்கா—கலகத்துக்கா?— திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் ... | 427 |
| 6. | ஓர் கீழ்நாட்டு சர்வகலாசாலை— திரு. E. பரமசிவம் அவர்கள், B. A. ... | 429 |
| 7. | பெண் கல்வி —திரு. செல்லப்பநாயஞர் அவர்கள் ... | 439 |
| 8. | ஜட்ஜ் முத்துசாமி ஐயர்—ஜனுப் M. K. M. மீரான் அவர்கள் | 441 |
| 9. | ஆனந்தப் பூங்காவனம்—"கலை விநோதன்" ... | 337 |
| 10. | பத்திரிகைகளை ஆதரிக்க வேண்டியவர்கள் யார்?— திரு. R. S. ஸ்ரீகண்டன் அவர்கள் ... | 450 |
| 11. | ஜஹாங்கீரின் முதல் காதல்—திரு. வ. வெ. சு. ஐயர் அவர்கள் | 454 |
| 12. | ராஜா தேசிங்கு—திரு. O. P. தேசிகன் அவர்கள் ... | 465 |
| 13. | ஆராய்ச்சி மேடை ... ... ... | 476 |
| 14. | ஆசிரியக் குறிப்புகள் ... ... ... | 479 |


படம்:

தலைவர். வி. ஜே. படேல்.



தலைவர் வி. ஜே. படேல்.

OFFICE ... BOOKS
13 DEC 1933
MADRAS

# பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

| மாலை 5 | ஸ்ரீமுக-புரட்டாசி<br>1933-௵ செப்டம்பர்-அக்டோபர் ௴ | மணி 6 |
|---|---|---|

## விவசாயக் கைத்தொழில். *

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர் "பாரதி."

"இந்தியாவின் தொழில்களை அபிவிருத்தி செய்ய நாம் உத்தேசித்தால், இந்தியாவின் நன்மையையே முக்காலும் மூன்று தடவை நாம் கவனிக்க வேண்டும் என்பது என்னுடைய உறுதியான அபிப்பிராயம். இந்தியாவில் கிடைக்கும் மூலப்பொருள்களை உபயோகிக்கவேண்டியது என்னுடைய அபிப்பிராயத்திற்கு முதல் காரணம். தொழில்களை ஏற்படுத்த வேண்டியது இரண்டாவது காரணம். தொழில்களால் உண்டாகக்கூடிய லாபம் இந்தியாவிலேயே தங்கி இருக்க வேண்டுமென்பது மூன்றாவது காரணம்."

—ஸர் பிரிடிரிக் நிக்கல்ஸன்

* "தனவணிகன்" சங்க மலரில் வெளிவந்தது.

விவசாயமும், கைத்தொழிலும், வியாபாரமுமே ஒரு நாட்டின் சிறப்பிற்கு அத்யாவஸ்ய சாதனங்கள். தேசத்திற்கு வேண்டும் பொருள்களுக்காக தேசத்தின் விளை பொருள்களைக் கொண்டு உற்பத்தி செய்வதே தொழிலாம். இத்தொழிலின் அபிவிருத்திக்கு முக்கியமாக விளை பொருள்களாகிய மூலப்பொருள்களுடன் மூலதனம், தொழிற் கல்வி, பொதுஜன ஆதரவு, அரசாங்கத்தின் உதவி, வியாபார சுதந்திரம், உழைப்பு முதலியவைகள் சேர்ந்தாலன்றி, கைத்தொழில் அபிவிருத்தியடையாது. விவசாயமே இந் நாட்டில் முதன்மையான தொழிலாயிருக்கிறது. உலகில் உயர்ந்த மூலப்பொருள்கள் விளைவதில் அனாதி காலம் முதற்கொண்டு இந் நாடே கீர்த்திபெற்றிருக்கிறது. இத்தேசத்தில் சீதோஷ்ண ஸ்திதி தக்கவாறிருப்பதால் கைத்தொழிலுக்கு வேண்டிய புல், பூண்டுகளும், எண்ணெய் வித்துக்களும், மருந்திற்காக வேண்டிய பற்பல செடி, வேர் வகைகளும், இன்னுமனேக சாமான்களும் இங்கு ஏராளமாக் உண்டாகின்றன.

ஆதிகால முதற்கொண்டு இந்தியா தன் கைத்தொழிலில் நல்ல பெயர் பெற்று வந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு 2,000 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து தேசத்தில் கோரிகளில் அடக்கம் செய்யப்பட்ட சவங்களின் மீது இந்தியாவில் நெய்யப்பட்ட அதி நேர்த்தியான சல்லாக்கள் சுற்றப்பட்டிருந்ததற்கும் அத்தாட்சிகளிருக்கின்றன. எவ்வளவோ காலத்திற்கு முன்னிருந்து இந்தியா ஆடைகள் நெய்யும் தொழிலில் நிகரற்று விளங்கியதென்பதற்கு எவ்வித சந்தேகமும் கிடையாது. பெரிய கஷ்டங்களையும், அபாயங்களையும் தாங்கிக்கொண்டு, அயல்நாட்டு வியாபாரிகளை இந் நாட்டுக்கு வரும்படி கவர்ச்சித்தது இந்தியத் துணிகளின் நேர்த்தியே யென்று சரித்திராசிரியர் **மர்ரே** சொல்லுகிறார். மொகலாய சக்கிரவர்த்தி ஒளரங்கசீப், தனது ஆஸ்தான மண்டபத்தில் அமர்ந்திருக்கும் தருணத்தில் அவருடைய புத்திரி உடம்பு தெரியும்படியாக உடுத்திக்கொண்டு அங்கு வந்ததற்காக அவர் கோபிக்கவே, தான் ஆடையின் மீது ஆடையாக ஏழு உடைகள் உடுத்தியிருப்பதாகச் சொல்லித் தன் தகப்பனாரைச் சாந்தப்படுத்தினளாம். அக்காலத்து டெக்கா மஸ்லின் மிகவும் பேர் பெற்றது. இந்தியாவில் செய்யப்பட்ட சாமான்கள் ரோம் நகரில் தாராளமாக விற்கப்பட்டு, ரோம் ராஜ்யத்தின் செல்வம் வருஷா வருஷம் ஏராளமாக வடிகட்டப்பட்டதென **பிளினி** என்பவர் கூறி வருந்துகிறார்.



டேரியஸ், அலெக்சாந்தர் முதலிய அரசர்களுக்கு அநேகம் கப்பல்கள் இந்தியாவிலேயே கட்டப்பட்டன. இந்தியக் கப்பல்கள் ஆப்பிரிக்காவிற்கும் அமெரிக்காவிற்குங்கூடப் போய்விட்டு வந்தன. சுமத்திரா, ஜாவா, போர்னியோ, பாலி முதலான தீவுகளுக்கு இந் நாட்டுக் கப்பல்கள் சென்றுவந்தன. அத் தீவுகளில் இந்தியர்கள் குடியேறி இருந்ததால், கப்பல் போக்கு வரவு அடிக்கடி நடந்தது. அங்கு இந்திய நாகரீகம் அடியோடு அழியாது, இன்று மிருக்கிறதாகச் சமீபத்தில் அங்கு சென்று ஆராய்ச்சி செய்து வந்த அறிஞர் காளிதாஸ் நாக் சொல்லுகிறார். கி. மு. 2,000 வருடங்களுக்கு முன்னிருந்தே உலகின் முக்கிய தேசங்களுடன் கப்பல்களில் இந்தியா வியாபாரம் செய்ததென்று ஆசிரியர் **மாக்ஸ் டங்கன்** அறிவிக்கிறார்.

இரும்புத் தொழிலிலும் இந்தியா பிரசித்தி பெற்றிருந்தது. டில்லி நகருக்குச் சமீபத்திலிருக்கும் **குட்டப் மினார்** என்ற 1500 வருடங்களுக்கு முன் செய்து வைக்கப்பட்ட கம்பமும், புரியிலுள்ள பிர்மாண்டமான இருப்பு உத்திரங்களும், **சோமநாதபுரத்திலிருக்கும்** விசித்திரத் தலைவாசல்களும், **நர்வார்** என்ற இடத்திலுள்ள 24 அடி நீளமுள்ள இரும்புப் பீரங்கியும் இந்தியாவின் பண்டை எஃகுத் தொழிலுக்கு இன்று சாட்சிகளாகவிருக்கின்றன. மிக்கப் பேர் போன டமாஸ்கஸ் கத்திகளைச் செய்வதற்கு இந்தியாவிலிருந்துதான் எஃகு கொண்டுபோகப்பட்டது. எஃகுத் தொழில் சமீபத்தி லிருந்துதான் இங்கிலாந்தில் உண்டாயிருக்கிறது. ஆனால் இந்தியாவிலோ புராதன காலத்திலிருந்து இந்தியர்களுக்கு இத் தொழில் தெரியும். உள்நாட்டுத் தேவைகளுக்குக் கொடுத்ததுமன்றி, அயல் நாடுகளுக்கும் இரும்பை இந்தியா ஏற்றுமதி செய்தது.

இன்னும் கண்ணாடி செய்தல், சாயம் போடுதல், சிற்ப வேலை, தச்சு வேலை, பொன் வேலை முதலிய வேறு பல தொழில்களுக்கும் பாத கண்டம் பிரசித்தி பெற்றதா யிருந்தது. அநேக அந்நிய நாட்டார்களைப் பாரத தேசத்திற்கு இழுத்தது இந் நாட்டு வாசனைத் திரவியங்களும் கைத்தொழிலுமே என்று கூறுவதில் எவ்வித எதிர்ப்புமில்லை.

லண்டனில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார்கள் இந்தியாவுடன் வியாபாரம் செய்யுமாறு சாசனமொன்று எலிஜபெத் ராணி அவர்களிடம் 1600ஆண்டில் பெற்றார்கள். அவர்கள் இந்தியாவிற்கு வந்து பண்டகசாலைகள் கட்டி, வியாபாரம் செய்துகொண்டு சுதேச மன்னர்களுடன் சேர்ந்து உள்நாட்டுக் கலகங்களில் பிரவேசித்த பிறகு,

எந்த நாளிலிருந்து இவர்கள் வரி வசூலிக்க ஆரம்பித்தார்களோ அந்நாள் முதல் இந்தியக் கைத்தொழில்கள் க்ஷீணிக்க ஆரம்பித்தன. கம்பெனிக்குப் புதிதாகக் கிடைத்துள்ள அதிகாரத்தின் மூலமாக இந்தியாவின் கைத்தொழில்களை நசித்துப்போகும்படி செய்ய ஆரம்பித்தார்கள். நமது மூலப்பொருள்களெல்லாம் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இங்கிருந்து மூலப்பொருள்கள் அங்கு கொண்டுபோகப்பட்டு மறுபடியும் அவைகள் அங்கிருந்து பல்வேறு ரூபங்களாகச் செய்யப்பட்டு இரட்டிப்புக் கடல் தீர்வையோடு பலவித செலவுகளுடன் இந்தியாவிற்கு வந்ததால், வருகிறதால், இந்தியாவின் கைத்தொழில்கள் நசுக்குண்டு போனதுமன்றி, பிரிட்டிஷ் சாமான்களின் இறக்குமதியும், இந்தியாவின் மூலப்பொருள்களின் ஏற்றுமதியுமே இந்தியாவில் வறுமை வருவதற்குக் காரணம்.

தொழில்கள் கெடவே தொழிலாளிகளும் விவசாயத்தில் இறங்கியதால், விவசாயிகள் அதிகமாகப் பெருகினார்கள். தேசத்தில் அதிகமான ஜனங்கள் விவசாயம் ஒன்றையே நம்பிக்கொண்டிருந்தபடியால், பஞ்சங்கள் அடிக்கடி தோன்ற ஆரம்பித்தன. இங்கு 1800-ம் வருஷத்திலிருந்து 1825-ம் வருஷத்திற்குள் 5 பஞ்சங்கள் உண்டாயின. 1826௵ முதல் 1850௵ வரை 2 பஞ்சங்கள் வந்தன. 1851௵ முதல் 1875௵ வரை 6 பஞ்சங்கள் தோன்றின. 1876௵ முதல் 1901௵த்திற்குள் 18 பஞ்சங்கள் வந்தன. இவைகளெல்லாவற்றிலும் தாது௵ உண்டான பஞ்சமே மகா கொடிது. 1854௵ முதல் 1901௵ வரையில் 2 கோடியே 88 லட்சம் பிரஜைகள் இந்தியாவில் க்ஷாமத்தால் இறந்துபோனார்களென்று ஸ்ரீமான் டிக்பி அறிவிக்கிறார்.

1877—78௵த்திய பஞ்சத்திற்குப் பின்பு பஞ்சத்தைப்பற்றி விசாரித்து அறிவிக்கும்படி ஒரு சபையைச் சர்க்கார் நியமித்தார்கள். அக் கமிஷனர்கள் தங்கள் அறிக்கையில் ஓரிடத்தில் அறிவிக்கிறார்கள்:—

"ஜனங்கள் அநேகமாக விவசாயத்தையே நம்பியிருப்பதாலும், வேறு தொழில் எதுவும் இல்லையாகையாலும், பஞ்சம் உண்டானால் ஜனங்களுடைய கஷ்டத்தை நிவர்த்திசெய்வது வெகு சிரமமாக இருக்கிறது. வழக்கப்படி மழை பெய்யாவிட்டால் ஜனங்கள் கொடுக்கக்கூடிய விலைக்கு அவர்களுக்கு வேண்டிய சாமான்கள் அகப்படாமல் போவதுடன் அவர்களுக்கு வேலையும் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகையால் விவசாயம் தவிர வேறு தொழில்களை விருத்தி செய்வதுதான் இந் நிலைமைக்குப் பரிகாரமாகும்."



இந்தியாவிலுள்ள ஜனங்கள் தரித்திரத்திற்கும் பருவ மழை தவறிப் போய்விட்டால் அவர்கட்கேற்படும் கஷ்டங்களுக்கும் மூல காரணம் என்னவென்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அதாவது விவசாயம் ஒன்றே ஜனங்களின் தொழிலாக இருப்பதுதான். பலவேறு தொழில்களை உண்டுபண்ணினாலொழிய இந் நிலைமைக்குப் பரிகாரம் ஏற்படமாட்டாது. அப்படி உண்டுபண்ணினால், விவசாயம் செய்வதற்கு அவசியமான ஜனங்கள் போக பாக்கி ஜனங்கள் கைத்தொழில்களில் அமர்ந்து ஜீவனம் சம்பாதிக்கும்படி செய்யலாம்.

கிளைவ் இந்தியாவிற்குப் புறப்பட்டுப் போன 1756-ம் வருஷத்தில் 74 கோடிக் கதிகமான பவுன் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குக் கடன் இருந்தது. அதற்கு வட்டி 27 லட்சத்து 53 ஆயிரம் பவுன் கொடுக்கப்பட்டு வந்தது. 1815-ம் வருஷத்தில் இந்தப் பெரிய கடனானது 86 கோடியே 40 லட்சம் பவுனாகிவிட்டது. இந்தியாவிலிருந்து திரண்ட செல்வம் சென்றதின் பயனாக இந்தப் பிர்மாண்டமான கடன் தீர்ந்தது. இச் செல்வ நிலைக்குப் பின்பே இங்கிலாந்தில் தொழிற் புரட்சி ஏற்பட்டது. இங்கிலாந்து உயர உயர இந்தியா கீழே வர ஆரம்பித்தது.

கைத்தொழில்கள் கெட்டுப்போய் இந்தியா வெறும் விவசாயத் தேசமாவதற்குத் தகுந்த காரணங்களிருக்கின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் மூலப்பொருள்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கத்தார் அளிக்கும் ஆதரவும், புதுப் புதுத் தொழில்களைக் கண்டுபிடித்து வேண்டியவைகளைச் செய்து தொழிலபிவிருத்தி செய்வதற்குச் சர்க்கார் முன் வராமலிருப்பதுவும், தொழிற் கல்வி போதிக்காமலிருப்பதுவுமே கவர்ன்மெண்டு செய்திருக்கும் தவறுதல்களென்று எப்படிச் சொல்லாமலிருக்க முடியும்? இது விவசாய தேசமாக மாறிய பின்னரும் விவசாயமும் உற்சாகிக்கப்படவில்லை. இப்பொழுது இந்தியா உலகம் பூராவுக்கும் சணல் கொடுத்து உதவுகிறது. பருத்தி உற்பத்தியில் உலகத்தில் இந்தியா இரண்டாவதாக இருக்கிறது. அயல் நாடுகளுக்கு அதிகமாகவே அனுப்பும்படியாக அவ்வளவு அதிகமாக எண்ணெய் வித்துக்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. உலக விளைவில் 100-க்கு 40 பங்குத் தேயிலை இந்தியாவில் விளைகிறது. கரும்பும் ஏராளமாக விளைகிறது. அவுரி, ரப்பர், சம்பார வர்க்கங்கள், மசாலைச் சாமான்கள் இங்கு ஏதேஷ்டமாக உண்டாகிறது.

இவைகளைத் தவிர்த்து நமது நாட்டில் விவசாயக் கைத்தொழில்கள் (Agricultural Industries) பல செய்வதற்குச் சாதனங்க

இத்தகைய ரமணீகரமான காட்சிகளுக்கிடையில் வயது பதினாறுடைய இளவயது மங்கை ஒருத்தி (மிகவும் பரிதாபமான குரலில்) "அந்தோ! இப் பேதை பிறந்தது எதற்காக? பிறந்த அன்றே இறந்திருப்பினும், இத்தகைய சஞ்சலத்திற் காளாக வேண்டியிராதே! பொது நலத்தின்பொருட்டு காந்தியடிகள் 'உயிரையும் விடுகிறேன்' என்கிறார். அவ்விதப் பெருந் தியாகங்கள் ஒன்றும் செய்வதற் கியலாவிடினும், நம் நாட்டு ஏழைச் சகோதரர்களால் நெய்த கதர்ச் சேலை அணிவதும், ஒழிந்த நேரங்களில் ராட்டைச் சுற்றுவதும் பொருக்கவில்லையே நம் கணவருக்கு? இதனால் ஒரு வார்த்தைகூடச் சந்தோஷமாகப் பேசமாட்டேனென்கிறார். இவ்வளவு நிர்ப்பாக்கிய ஸ்திதியில் வாழ்வதைவிட இக் குளத்தில் விழுந்தாவது இறந்துவிடுவோம்" என்று கூறிக்கொண்டே குளத்திற்கருகே சென்றாள்.

"ருக்மணி! நில். அவசரப்படாதே!" என்று ஒரு கூச்சல் கேட்டது. ருக்மணி திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக அவள் கையைப் பிடித்துக்கொண்டாள் அம்புஜம். ருக்மணிக்கோ பேச நாவெழவில்லை; அப்படியே மரம்போல் நின்றுவிட்டாள்.

அதற்குள்ளாக "என்னடி! நீ படித்ததின் பயன் இதுதானா? 'எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண் புத்தி பின் புத்தி' என ஆடவர்கள் சொல்வதை நீயே நிரூபித்திடுவாய் போலிருக்கிறதே! உன் கணவனுக்குத் தேசப் பற்று இல்லையானால், நீயல்லவோ உன் வழிக்குத் திருப்பவேண்டும். தேசத் தொண்டு செய்ய விரும்பும் நீ, உயிரை விடத் துணிந்தாயானால், தேசத் துரோகமாகும்" என்று அன்புடன் பல தேறுதல் மொழிகள் கூறிவிட்டு, "இனி இத்தகைய முறையில் உயிர்விட முற்படுவதில்லை,' என்று வாக்குறுதி பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்குச் சென்றுவிட்டாள் அம்புஜம்.

* * * * *

தனியே விடப்பட்ட ருக்மணியின் உள்ளத்தைச் சஞ்சலமென்னும் இருள் வந்தடைந்தது "உன் கணவனை நீயன்றோ திருப்ப வேண்டும்" என்ற வார்த்தை அவளது செவியில் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருந்தது. இறுதியாக, 'எவ்விதமேனும் என் காதலனை தேச சேவையில் ஈடுபடச் செய்கிறேன்' என்று வாய்விட்டுக் கூறிக்கொண்டே வீட்டிற்குள் புகுந்தாள்.

காரியாலயத்திலிருந்து நேரே "புட் பால் மேட்ச்" பார்க்கச் சென்றிருந்த இராஜாராமன் வீட்டுக்கு வந்ததும், வழக்கம்போல் வெந்நீரில் குளித்துவிட்டுச் சாய்மான நாற்காலி யொன்றில் சாய்ந்துகொண்டே சிகரெட் பிடித்தான். ருக்மணி பால் கொண்டுவந்தாள். அவள் முகம் சோபையற்றுக் கிள்ளியெறிந்த ரோஜா மலரை யொத்



திருந்தது. ஏறிட்டுப் பார்த்தான் முகத்தை. ஏதோ விசேடம் நடந்திருக்கிறதென் றெண்ணியவனாய் "ருக்மணி! இன்னும் அந்த முரட்டுக் கதர்த் துணி பேரிலும், சர்க்காவின் பேரிலும் உள்ள பிரேமை நீங்கவில்லையா?" என்று விளையாட்டுப்போல—ஆனால் சற்று கோபமாகக் கேட்டான் இராஜாராமன்.

"நாதா! மன்னிப்பீர்களாக. கதர் ஆடை அணிவதும், நூல் நூற்பதும் எனது பிறப்புரிமையா யிருக்கக் கருதுகிறேன். எனவே, அதை எனது உயிருள்ளவரையில் கைவிட விரும்பேன். என்றாலும் அதனால் தங்களுக்கு ஏதேனும் கெடுதி நேரிடுவதாயின் சொல்லுங்கள்! தங்கட்குப் பணிவிடை செய்த நேரம் போக, ஒழிந்த நேரங்களில் நூல் நூற்பதில் என்ன குற்றம் என்பதை எடுத்துக் கூறுவீர்களாயின் விட்டுவிடுகிறேன்" என்று அன்பும், ஆர்வமும் கலந்த மொழிகளால் கெஞ்சினாள்.

'இதேதடா சனியன்!" என்று நினைத்தவனாய் 'எப்படியாவது போய்த் தொலை' என்று கூறிவிட்டு அப்படியே சிந்தனையிலாழ்ந்துவிட்டான் இராஜாராமன்.

இரவு மணி 9 அடித்தது. அக் கிராமத்திலுள்ளவர்கள் அதிகாலையில் எழுந்து வயல்களுக்குப் போகவேண்டியவர்களாதலின், படுக்கைக்குச் சென்றுவிட்டனர். தெருவில் சந்தடியற்று அமைதி நிலவியிருந்தது. இராஜாராமனும் எழுந்து இரவு போஜனம் முடித்துக்கொண்டு வெளியில் சற்று உலவியபின் படுக்கச் சென்றான். ருக்மணியோ மேஜைமீது கிடந்த "பாரதி"யை எடுத்துப் புரட்டினாள். மன அமைதியின்மையால் படிக்க இயலாது அப்படியே போட்டுவிட்டு அவளும் படுக்கைக்குச் சென்றுவிட்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் ஏதோ பேச்சுக் குரல் கேட்டது. ஆம். தேசத் தொண்டைப் பற்றியதுதான்! சந்தேகமில்லை. என்றாலும் காதலர் தனித்து வார்த்தையாடுமிடத்தில் நமக்கென்ன வேலை!

இராஜாராமனது இருப்பிடம் சந்திரப்பாடி என்னும் கிராமம். அவனுக்குப் பொரையார் வைத்தியசாலையில் தலைமை வைத்தியர் உத்தியோகம். அத்துடன் சிறந்த செல்வமிருந்தது. மனைவியும் ஒத்த நலனும், ஒத்த பண்பும் வாய்ந்தவள்தான். மேனாட்டாரின் ஆடம்பர வாழ்க்கை இராஜாராமனின் மனதைக் கவர்ந்துவிட்டது. ஆனால் ருக்மணியின் தேசபக்தி நிரம்பிய உள்ளம் இவ் வாடம்பர வாழ்க்கையை விரும்பவில்லையே! என் செய்வது? சுருங்கக் கூறவேண்டுமாயின் இராஜாராமனின் சந்தோஷத்திற்குத் தடையாய் நின்றது ருக்

மணியின் தேசபக்தியேயாகும். முடிவில் யார் வெற்றியடையப்போகிறார்களோ போகப் போகப் பார்ப்போம்.

காலை 11 மணி இருக்கும். மனச் சோர்வுடன் காணப்பட்டான் இராஜாராமன். ஏன்? ருக்மணியின் அன்புச் சுடர்மொழிகள் அவனது கலங்கா வுள்ளத்தையும் கலக்கிவிட்டனபோலும்! ஒன்றிலும் புத்தி செல்லாது எதிரே நோக்கினான். அன்று வந்த 'ஹிந்து' என்னும் ஆங்கில தினசரிப் பத்திரிகை கிடந்தது. எடுத்துப் புரட்டுவதற்கு முன் கொட்டை எழுத்தில் பின்வரும் செய்தி காணப்பட்டது.

"வட இந்தியாவில் ஆமதாபாத்திற் கருகிலுள்ள கிராம மொன்றிலுள்ள தனவந்தர்க ளெல்லோரும் தாங்கள் ஹரிஜனங்களைப் படுத்திய கொடுமைக்குக் கழுவாய் தேடுவான் வேண்டித் தங்களிடமுள்ள செல்வங்களை யெல்லாம் ஏழைகளுக்கு (ஹரிஜனங்கள்) அளித்துவிட்டு, "கிராம சீர்திருத்தம்" செய்யப் புறப்பட்டுவிட்டனர்" என்பதுதான் அச் செய்தி. அதைக் கண்டதும் மூளையில் குழப்பம் உண்டாயிற்று. தன் கண்களையே நம்பாதவனாய் இது பத்திரிகையா! அல்லது ருக்மணியின் மாறுவேடமா! நன்கு உற்று நோக்கினான்.

முகத்தில் புன்னகை ததும்பிற்று. என்னதான் மேனாட்டு நாகரிகத்தில் மூழ்கித் திளைத்தாலும், அவன் உடலில் ஓடுவது பண்டை இந்தியரின் இரத்தமன்றோ? சூரியன் நீருண்ட கரிய மேகத்தால் மூடப்பெற்றாலும் அடுத்த நிமிடம் முழுப் பிரகாசத்தையும் கொடுப்பது இயல்புதானே!

உடனே ஓர் கடுதாசியை எடுத்துத் தன் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு வீட்டுக்கு வந்தான். வாசற்படி தாண்டுவதற்கு முன்னேயே "ருக்மணி!" என என்றுமில்லாத அன்புடன் அழைத்தான் இராஜாராமன். 'ஏது! நமது காதலன் குரல்போ லிருக்கிறதே! இந்நேரத்தில் வரவேண்டிய காரணமென்ன?" என்று சிந்தித்தவளாய் ருக்மணி ஓடிவந்தாள். இராஜாராமனும் ஓடி அவளைக் கட்டியணைந்து "கண்மணீ! உனது லக்ஷியத்தின் மேன்மையை இன்றே உணர்ந்தேன். இதுகாறும் வன்மொழிகளால் உன் மனதைப் புண்படுத்தியதற்காக மன்னிப்பாயாக! என்றான்.

"நாதா! என்ன நேர்ந்தது?" என்றாள் ருக்மணி.

"கண்மணி! உன் மனோரதம் இன்று நிறைவேறிவிட்டது. இன்று முதல் நம் பாரதிக்கு அடிமை! வாழ்ந்தால், அவளது ஆட்சியில் சகல சுதந்திரத்துடன் வாழ்வோம். இன்றேல் அவளது விடுதலைக்கெனத் தொண்டு செய்வதில் சாவோம். புறப்படு" என்றான் இராஜாராமன்.

# ஊன்றி உணர்தற்குரிய உண்மைகள்.

பண்டித திரு. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள்.

1. நாமே நமக்குத் துணையானால்
    நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்
    சற்று மிதற்கோ ஐயமுண்டோ?

2. நெஞ்சிற் கருணை நிறைந்தவர்க்கு
    நேயம் கொண்ட நெறியோர்க்கு
விஞ்சும் பொறுமை யுடையவர்க்கு
    வெல்லும் படைகள் வேறுளவோ?

3. உள்ளந் தேறிச் செய்வினையில்
    ஊக்கம் பெருக உழைப்போமேல்
பள்ளம் உயர் மேடாகாதோ?
    பாறை பொடியாய்ப் போகாதோ?

4. ஜாதி ஜாதி என்று நிதம்
    சண்டை போட்டு மண்டைகளை
மோதி மோதி யுடைப்பதொரு
    மூடச் செயலென் றுணரீரோ?

5. வாட்டு முலகில் வழுத்தரிய
    வாழ்க்கைத் துணையாம் மங்கையரை
ஆட்டும் பொம்மை அடிமைகளாய்
    ஆக்கி வைப்ப தழகாமோ?

---

இதையே எதிர்பார்த்திருந்த ருக்மணியின் முகம் பொலிவுற்று விளங்கியது. ஆனந்த மேலீட்டால் ஒன்றும் பேசவியலாது இராஜாராமனின் முகத்தை நோக்கினாள். மறு நிமிடம் இருவர் அதரங்களும் இரண்டறக் கலந்தன.

அன்று ருக்மணியின் மனதில் கட்டுப்பட்டிருந்த தேசபக்தி இன்று அவ் வூரெங்கும் பெருக்கெடுத்தோடி அக் கிராம வாசிகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது. அம்புஜமும் அதில் கலந்துகொண்டாளென்று சொல்லவேண்டியதில்லை. அவ்விளங் காதலர்களின் வாழ்க்கையே வாழ்க்கை! ஆம். பெண்மணிகள் மனம் வைத்தால் முடியாத காரியமொன்றுளதோ?

# மகாத்மா காந்திஜியும் தற்கால நாகரீகமும்.

## தீனபந்து ஸீ. எப். ஆண்ட்ரூஸ் அவர்கள்.

(366-ம் பக்கத் தொடர்ச்சி.)

முதலாளி—தொழிலாளி, எஜமானன்—அடிமை, வலியவன்—மெலியவன், பணக்காரன்—ஏழை என்னும் இப் பாகுபாடுகள் உள்ள தற்கால நாகரீகத்தின் தன்மையை நாம் ஆராயுந்தோறும், பண்டைக் காலத்தில் கெட்டொழிந்த அதே நாகரீகத்தையே நாம் கையாண்டு வருகிறோம் என்பது நன்கு புலப்படும். எனவே அறிஞர்கள் பலர் இந்த நாகரீகத்தை வெறுக்கின்றனர். இனிக் கடவுளையே நம்பி அவனருளே தங்களுக்கு ஆற்றலாகும் என்ற நம்பிக்கையுடன் இறைவன் சந்நிதியில் பயபக்தியுடன் இறைஞ்சி, "தந்தையே! என்னுடன் பிறந்த சகோதரர்களில் ஒரு சிலர் வலியோராகவும் மற்றவர்கள் மெலியோர்களாகவும் இருந்ததால், வலியோர்கள் மெலியோரை அடிமைகளாக்கி அலக்கழிவு செய்கிறார்களே! ஐயோ! இவர்கள் அனைவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் போல், ஏற்றத்தாழ்வின்றி என்று ஒன்றுபட்டு வாழப்போகின்றனர்? சகோதரத்வம் என்னும் கொள்கை பேச்சளவில் நிற்பதொழிந்து உண்மையில் எப்போது நடைமுறையில் வருமோ?" என்று மனம் உழன்று மென்மேலும் இதற்கு வழி ஏதேனும் உளதோ என உசாவித் திரிகின்றனர். இறுதியாக இவ்வறிஞர்கள் கண்டுபிடித்த வழி என்ன? மனிதன் தனது தேவைக்கு அதிகமான ஆடம்பரத்தை ஒழிக்க வேண்டும் என்பதே.

* * * * *

---

6\. காலநதியின் கதியதனில்
கடவுளாணை காண்பீரேல்
ஞாலமீது சுகமெல்லா
நாளுமடைந்து வாழ்வீரே.

---



இரண்டு சகோதரர்களை எடுத்துக்கொள்வோம். ஒருவன் முதலாளி என்னும் நிலைமையில் பெரிய பங்களாவில் சகலவிதமான ராஜ போஜனங்களுடன் வாழ்கிறான். மற்றொருவனோ, எளிய உடையுடுத்தி அரை வயிற்றுக் கஞ்சியை அருந்தி ஒட்டுத் திண்ணையில் காலங் கழிக்கிறான். ஏன்? முன்னவன் இவனுடைய பங்கை அபகரித்துக் கொள்ளை யடித்து வைத்துக்கொண்டு குஷாலாய் சுகங்களை அனுபவிக்கிறான். ஆனால் முன்னவன் தன் தேவைக்குப் போதுமானமட்டும் எடுத்துக்கொண்டு எஞ்சியதை தன் சகோதரனுக்கும் கொடுத்தால் அவனும் தன்னைப் போல் சுகமாகக் காலங் கழிக்கலாமல்லவா?

தேவைக்குப் போதுமானதைக் கொண்டு திருப்தியாக வாழ்வதே இயற்கை வாழ்வென்பது. அஃதன்றி தேவைக்கு அதிகமான ஆடம்பரங்களைக் கைக்கொள்வதே செயற்கை வாழ்வு என்பது. தற்கால நாகரீகம் செயற்கை வாழ்வின் மயமாகவே காணப்படுகிறது. இச் செயற்கையை ஒழித்தால் மட்டுமே ஜன சமுதாய முன்னேற்றம் ஏற்படும். ஆதலால் "முன்னேற்றம்" "முன்னேற்றம்" என்று பிரசங்க மேடைகளில் பேசுவதாலும், பத்திரிகைகளில் எழுதுவதாலும் வந்துவிடாது. இயற்கை வாழ்க்கையே முன்னேற்றத்துக்கு ஏணியாகும்.

* * * * *

செயற்கை வாழ்வு மலிந்த மேனாடுகளும் இப்பொழுது இயற்கை வாழ்வொன்றே முன்னேறத் தகுந்த வழி யென்பதை உணர்ந்து வருகிறார்கள். சரித்திர ஆராய்ச்சியாளர்களும், ராஜதந்திரிகளும், மற்றும் அறிஞர்களும் "ஆடம்பரம் ஒழிக" என்று ஆர்ப்பரிக்கிறார்கள்! இவ்வறிஞர்களை அனுசரித்தே மகாத்மாஜியும் எளிய வாழ்க்கையை மக்களுக்கு உபதேசித்து வருவதுமன்றித் தாமே நடத்திக் காட்டியும் வருகிறார். இதனால்தான் இந்தியாவின் ஏழை மக்கள் அவரைத் தெய்வமெனப் போற்றுகிறார்கள்.

பாரத மக்கள் பண்டைக் காலந்தொட்டே இயற்கை வாழ்வில் ஈடுபட்டவர்கள் இயற்கை இன்பத்தை அனுபவித்த அறிஞர்கள் கூறிப்போந்த புனித மொழிகளைப் பொன்னேபோல் போற்றும் தன்மை வாய்ந்தவர்கள். இயற்கையைத் தெய்வமாகக் கொண்டாடினார்கள். இயற்கையைக் காதலித்து இன்பமெய்தினார்கள். செயற்கை வாழ்க்கையைக் கைக்கொண்ட எத்தனையோ அன்னியர்கள் படையெடுத்து வந்தகாலத்தும் தங்களோடு ஊடாடி உறவாடிய போதும் இயற்கையையே சார்ந்து இன்பமெய்தினார்கள். ஒவ்வொரு சிறு நீரோடையும், ஒவ்வொரு நீர்ச்சுனையும், ஒவ்வொரு மலைச்சிகரமும் இயற்கை வனப்பைப் பெருக்கி அவர்கள் மனதைக் கவர்ந்தன.

தாங்கள் பிறந்த பாரதப்பூமி அவர்களுக்கு மகா புனிதமான பொக்கிஷமாகும். எத்தனையோ ஏகாதிபத்தியங்கள் பாரதநாட்டில் அவ்வப்போது கடல் மடை திறந்த வெள்ளம் போல் பாய்ந்து வந்து கொள்ளைகொண்டன. எனினும் பாரத மக்கள் தங்கள் எளிய வாழ்க்கையையும் இயற்கை யின்பத்தையும் கைவிட்டவர்க ளல்லர்.

*     *     *     *     *

காந்திஜியின் சுயராஜ்யத்தைப் பற்றி ஒரு ஆசிரியர் ஒரு பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருப்பதாக இக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தோ மல்லவா? அக் கட்டுரை ஆசிரியர் நாம் மேலே குறிப்பிட்ட எளிய வாழ்க்கையை, அதாவது இயற்கையோடியைந்த வாழ்க்கையை மனிதர் மீண்டும் கைக்கொள்ள வேண்டுமென்று கூறுவதை வெறுக்கிறார். இயற்கையோடியைந்த எளிய வாழ்க்கை அவருக்கு வேம்புபோல் கசப்பா யிருக்கிறது போலும்! மோட்டார் வாகனங்கள், ஆகாயவிமானங்கள், மின்சார வாகனங்கள், இராணுவ அணிவகுப்புகள் முதலிய செயற்கை வசதிகள் நிறைந்த நகர வாழ்க்கையே அவருக்குக் கரும்பெனத் தித்திக்கின்றது போலும்! மகாத்மா காந்தி ஒரு கர்நாடகப் பேர்வழி யென்றும், பிற்போக்காளரென்றும், மக்கள், மிருகங்களைப் போல் வனங்களில் வசிக்குமாறு கூறுகிறாரென்றும் இன்னும் பலவிதமாகவும் அவர் கூறுகிறார்,

மேலும் அவ்வாசிரியர், டால்ஸ்டாயின் மொழிகளில் தீவிரமான சில சொற்றொடர்களை ஒன்றாகக் கூட்டி "டால்ஸ்டாய் குடியாட்சி காந்தீயக் குடியாட்சியே" என்றும் "இக் குடியாட்சியில் மனிதர்கள் காட்டு மிருகங்களைப் போல் இயற்கையோடியைந்து வாழ்வர்" என்றும் கூறுகிறார். இந்த வன வாழ்க்கையை காளிதாச மகாகவி தமது "சகுந்தலை" நாடகத்தில் எத்துணை அருமையாக வர்ணித்திருக்கிறார் என்பதைப் பற்றியும், அவ் வர்ணனையை கோயத் என்ற மேனாட்டு அறிஞர் எவ்வாறு புகழ்ந்து கூறியிருக்கிறார் என்பதைப்பற்றியும் நாம் இங்கு அதிகமாக ஆராயத் தேவையில்லை

இராமாயணம் என்னும் மகா காவியத்தின் கதாநாயகனாகிய ஸ்ரீராமன் சீதாபிராட்டியாரோடும், தம்பி இலக்குமணனோடும் தண்டகாரண்யத்தில் ஓர் பர்ணசாலையில் எத்துணை சந்தோஷமாகக் காலங் கழித்தான் என்பதைக் கவிஞர்கள் நன்கு வர்ணித்திருக்கின்றனர். இந்த வர்ணனைகளால் நாம் அறியக்கூடியதென்ன? இயற்கையோடியைந்த ஆரண்ய வாழ்க்கை நமது பாரத நாட்டில் பண்டைக் காலந் தொட்டு மக்களால் புனிதமாகக் கருதப்பட்டு வருகிறது.



மனித சமுதாய முன்னேற்றத் துறையில் மகாத்மாஜி செய்து வரும் ஆக்கவேலைகள் எண்ணிறந்தன. தமது கொள்கையை நடைமுறையில் அனுஷ்டிக்கப்படும் வரையில் அவர் ஓய்வுகொள்ளாமல் மென்மேலும் முயற்சிக்கும் இயல்பினர். ஆசிரம வாழ்க்கையின் இலக்கணங்களைச் செய்கையில் நடத்திக் காட்டும் சந்தர்ப்பங்கள் அவருடைய வாழ்நாளில் பல தடவைகளில் ஏற்பட்டன. அச் சந்தர்ப்பங்களில் அவருடன் இருந்து அவரது செய்கைகளைக் கவனிப்போர்கள், தற்கால நாகரீகத்தை அவர் கண்டித்து ஒதுக்குவதின் காரணங்களை நன்கு தெரிந்துகொள்வார்கள்.

இயற்கையோடியைந்த வாழ்வு நடத்துவதற்கு மகாத்மா காந்தி பலமுறை பலவிதமாக முயற்சி செய்திருக்கிறார் தென்னாப்பிரிக்காவில் "டால்ஸ்டாய் விடுதி" என ஒரு ஆச்சிரமத்தை முதல் முதல் மகாத்மா காந்தி துவங்கினார். இவ் வாச்சிரமம் ஜோஹன்ஸ்பர்க் நகரத்துக்கு 21 மைல் தூரத்திலுள்ளது. டால்ஸ்டாய் என்ற ருஷ்ய முனிவருடைய எண்ணங்களே இங்குள்ள ஆச்சிரமத்தின் குறிக்கோளாக இருந்தன. இவ் வாச்சிரமத்தின் பெருமையைப்பற்றி நான் திரு. கலென்பர்க்கிடமும், அங்கு வாழ்ந்துவந்த மற்ற ஆச்சிரம வாசிகளிடமுமிருந்து அறிந்துகொண்டேன். உயர்ந்த எண்ணங்களை எண்ணிக்கொண்டு அந்த ஆச்சிரம வாசிகள் எளிய வாழ்க்கையை நடத்தினார்கள். தென்னாப்பிரிக்காவில், இந்த யுகத்திலே முன்னெப்போதாவது இம்மாதிரியான எளிய வாழ்க்கை நடைபெற்றதுண்டா? மகாத்மா காந்தி, வழக்கறிஞராக விருந்து ஜோஹன்ஸ்பர்க்கில் தொழில் நடத்தியபொழுது, தற்கால நவநாகரீக முறைப்படி பெரிய வீட்டில் உல்லாசமாக வாழ்ந்துவந்தார். சிறிது காலத்துள் நவநாகரீகத்தின் ஆடம்பரமெல்லாம் வீண் விருதா என அறிந்துகொண்டார். தனது ஹிந்து தர்மத்துக்கே அவை பங்கத்தைத் உண்டுபண்ணுவதாக அவர் உணர்ந்தார்.

கல்வி அறிவினால் உயர்ந்த பட்டங்களைப் பெற்றவர்களும், ஆடம்பர வாழ்க்கையையே பெரிதும் விரும்பியவர்களுமான செல்வந்தர்களும் கலப்பையில் கையை வைத்து உழுதும், மண்வெட்டியால் நிலத்தை வெட்டியும் பயிர் செய்து தங்கள் தினசரி உண்டிக்கு உழைக்க முற்பட்ட முறையே, மகாத்மா காந்தியின் முதல் ஆச்சிரம வாழ்க்கையின் சிறந்த ஒரு அற்புதமான காரியமாகும். மற்றைய ஆடம்பர வஸ்துக்களைப் போலவே அவர்கள் ரயில் வண்டியையும் வெறுத்தார்கள். ஜோஹன்ஸ்பர்க்குக்குப் போவதானால் காலை விடிவதற்கு முன் வெள்ளிகள் ஒளியைச் செய்யும் வைகறையில் எழுந்து அவ்வாச்சிரமவாசிகள் திறந்த பெரு வெளிகளூடே நடந்து செல்லுவார்கள். மகாத்மா காந்தி எல்லாருக்கும் முன்பாக நடந்து சென்று

விடுகிறார். இவ்வித சம்பவங்களைப் பார்க்குமிடத்து மகாத்மா காந்திக்கு, ரயிலிலும் மோட்டாரிலும் பிரயாணஞ் செய்வதிலிருந்த துவேஷத்தை நன்கு அறிந்துகொள்ளலாம்.

## அடுத்த ஆச்சிரமம்.

நேட்டாலில் போனிக்ஸ் என்ற இடத்தில் மகாத்மா காந்தி மற்றொரு ஆச்சிரமத்தை உண்டாக்கினார். இவ் வாச்சிரமத்திலேயே நான் எனது வாழ்க்கையில் சந்தோஷகரமானதும், நினைவில் என்றும் நிலைத்திருப்பதுமான சில அரிய நாட்களைக் கழித்தேன். நேட்டால் பகுதியில் கடலைச் சார்ந்த பிரதேசத்தின் மத்தியில் அழகிய மலைத் தொடர்களுக்கு இடையே இந்த ஆச்சிரமமிருக்கின்றது. தர்பான் நகரத்திற்கு 16 மைல் தூரத்தில் இவ்வாச்சிரம மிருக்கின்றது. சாதாரணமான சிறு குடிசைகள் கட்டப்பட்டிருக்கின்றன. சுற்றி வரச் சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள் சூழ்ந்து கிடக்கின்றன. குடிசைகளின் மத்தியிலுள்ள ஒரு கட்டிடத்தில் உயர்ந்த நூல்களைக் கொண்ட ஒரு நூல் நிலையமிருக்கின்றது. இங்கேதான் பிரார்த்தனை நடைபெறுகிறது. ஓடுகின்ற நீர்ச்சுனையின் அருகே ஒரு சிறிய அச்சியந்திரமும் இருக்கிறது. போனிக்ஸ் ஆச்சிரமத்தின் வெளித் தோற்றம் இத்தகையது. நான் இவ்வாச்சிரமத்தை அதிகமாக நேசித்து வந்தேன். வாழ்க்கையின் அந்தரங்கமான அமைதி, சாந்தி நிகேதனில் இருப்பது போல இங்கேயும் உண்டு. இவ்வாச்சிரமத்தில் நடைபெற்ற மறக்கொணாத ஒரு காட்சியை நான் கூற விரும்புகிறேன். மாலை உணவு முடிந்ததும் இரவாயிற்று. எல்லாரும் மகாத்மாஜியைச் சுற்றி யிருந்துகொண்டோம். மகாத்மா தமது கையில் ஒரு இஸ்லாமியக் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டிருக்கிறார். பக்கத்தே கிறிஸ்துவ மிஷனிலிருந்து வந்த ஒரு சூலு வகுப்பைச் சேர்ந்த குழந்தை இருக்கிறாள். இந்தியக் குழந்தைகளிருவரைத் தமது மடிமீதிருத்திக்கொண்டு திரு. கலென்பர்க் இருக்கிறார். மாலை அணுகியதும் மகாத்மா காந்தி தாமாகவே மாலைப் பிரார்த்தனையைச் செய்கிறார். கடவுள் பக்தியைப்பற்றிய சில ஸ்லோகங்களைக் குஜராத்திலிருந்து அவர் வாசித்து அதன் பொருளை ஆங்கிலத்தில் கூறுகிறார். பின்னர் குழந்தைகளெல்லாருமாகக் கூடி இந்தச் சுலோகங்களைப் பாடுகிறார்கள். பின்னர் "ஒளியே வழி காட்டு" என்ற பாட்டைப் படித்துவிட்டு எல்லாரும் நித்திரைக்குச் செல்லுகிறார்கள். எங்களுடன் இருந்த சூலு வகுப்பைச் சேர்ந்த சிறுமி வெள்ளைத்தோல் படைத்தவளல்ல என்ற நியாயத்தைக்கொண்டு அவளை அனுமதிக்க மறுக்கும் கிறிஸ்தவ கோயில்களுக்கு நான் சென்றிருக்கிறேன். ஆனால் இங்கே அன்பும் அமைதியும் தாண்டவம் புரிந்துகொண்டிருந்தன. மனித சமூகம் ஒன்று என்ற எண்ணம்



தலைசிறந்து காணப்பட்டது ஒற்றுமை என்ற ஒளியில், ஜாதி சமய வேற்றுமைகளெல்லாம் அமிழ்ந்துவிட்டன. இங்கே அமைதி காணப்பட்டது

## சபர்மதி ஆசிரமம்.

சபர்மதியிலுள்ள ஆசிரமத்தைப் பற்றி நான் கூற விரும்புகிறேன். தொழிற்சாலையும், புகையும், குறுகிய வளர்ச்சியையுடைய தொழிலாளரும் வசிக்கும் ஆமதபாத் என்ற பாரிய நகரத்துக்குச் சிறிது தூரத்தில் சபர்மதி ஆசிரமமிருக்கிறது. ஒருபுறத்தில் ஆண்களும் பெண்களுமாக புகைக்கும் பெரிய தொழிற்சாலையில் மூச்சு விட முடியாமல் தொழில் பார்க்கிறார்கள். யந்திரம் ஓடிக்கொண்டிருக்கிறது. மறுப்புறத்தில் அழகிய சபர்மதி யாற்றின் கரையிலுள்ள சிறுகுடிசைகளில் உடல் நலமும் ஆத்ம நலமும் வாய்க்கப் பெற்ற பரிசுத்த ஸ்தலத்தில் கைத்தறி நின்று ஆடுகின்றது. இவ்வாசிரமத்தில் பல முறை நான் தங்கி யிருக்கிறேன். ஆனந்தமும் ஆத்ம மகிழ்ச்சியுமுள்ளவாழ்க்கையை நான் இங்கே கண்டிருக்கிறேன். டால்ஸ்டாய் ஆசிரமத்தில் மகாத்மா காந்தி துவங்கிய வாழ்க்கை இங்கே அதிக உரம் பெற்றுவிட்டது. விவசாயம் புறக்கணிக்கப்படவில்லை. ஆனால் கைநெசவு ஆசிரமத்தின் முக்கியமான வேலையாய் வந்துவிட்டது. கல்வி கற்பதில் தாய் பாஷையும் ஹிந்தியும் கற்பதற்கு அதிக நேரம் செலவு செய்யப்படுகிறது. தினமும் கீதாபாராயணம் நடைபெற்று வருகிறது. சர்வ பிராணிகள் மீதும் ஒரேவிதமான அன்பு காட்டப்படுகிறது. தொழிலின் மகத்துவம் எளிய வாழ்க்கையின் பெருமை யொன்றும் மறக்கப்படவில்லை. வீண் ஆடம்பரங்களைப் புறக்கணித்துவிட்டு, இயற்கையோடியைந்த வாழ்வை நடத்துவதே லக்ஷியமாயிருந்து வருகிறது. மனிதன் செயற்கை வாழ்வில் இறங்கி உண்மையான சகோதரத்துவத்தைக் குலைத்துக்கொள்ளுகிறான்.

.எல்லா உயிர்கள் மீதும் அன்பு காட்ட வேண்டுமென்ற பெரிய லக்ஷியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு எளிய வாழ்க்கை வன மிருகங்களின் வாழ்க்கை போன்றதென யாராவது கூறமுடியுமா? அமைதியும், சுதந்திரமும், எளிமையுள்ள வாழ்க்கை இயற்கையோடியைந்த வாழ்வல்லவா? இந்த வாழ்வை, காட்டில் வாழும் கடும் புலி வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் கூறுவது பொருந்துமா? இந்த ஆச்சிரமத்தில் மகாத்மா காந்தியுடன் நான் பங்குபற்றி வந்த வாழ்க்கை காட்டு வாழ்க்கையன்று. இந்தியாவில் இன்று வாழ்ந்து வரும் பெரு மக்களுடைய வாழ்க்கை இம்மாதிரியான உயர்ந்த நாகரீக

வாழ்க்கையே என்று நான் கூறுகிறேன். மகாத்மா காந்தியின் வாழ்க்கை ரிஷி வாழ்க்கையன்று. துறவிகளின் வாழ்க்கையன்று. மனிதனுக்கு ஆத்ம மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய சாந்த வாழ்க்கையேயாகும். வயது முதிர்ந்தவர்களிடத்தில் குழந்தைகளின் குணங்கள் காணப்பட்டால், அதனைக் குழந்தைகளே அறிந்து அவர்களைச் சூழ்ந்துகொள்ளுவார்கள். மகாத்மா போனிக்ஸ் ஆச்சிரமத்திலும் சபர்மதியிலும் குழந்தைகளுடனேயே சல்லாபமாக நேரத்தைக் கழித்து வந்தது இதில் குறிப்பிடத் தக்கது. மகாத்மா ஆச்சிரமத்துக்கு வந்ததும், குழந்தைகள் மகிழ்ச்சியினால் வாய்விட்டு மழலைப் பேச்சுக்கள் பேசிச் சிரித்து சத்தமிடுகிறார்கள். இருதயத்தில் ஆனந்தம் வெள்ளமாகப் பாய்கின்றது. இவ்விதமான வாழ்க்கையையா துறவிகள் வாழ்க்கை என்று கூறுவது? ராஜீய சூனிய வாதமென்று இதைக் கூறலாமா? அழுக்கடைந்த மக்களின் மனதில் இவ் வாழ்க்கையைக் குறை கூறுவதற்கு வேறென்ன வார்த்தைகள் கைகூடுமோ? பிரமச்சரியத்தைப் பற்றியும், விவாகஞ் செய்யாது வாழவேண்டுமென்று மகாத்மா கூறுவதைப் பற்றியும் நான் அவருடன் அதிக நேரமாக விவாதம் நடத்தியிருக்கிறேன். அவருடைய கருத்தை நான் முற்றாய் உணர்ந்துவிடவில்லை என்று அவர் எனக்கு கூறுவதுண்டு. அவர் கூறும் விஷயங்களையெல்லாம் கண்மூடித்தனமாக நான் பின்பற்றவில்லை. ஆலோசனையுடனேயே எல்லாவற்றையும் அனுசரித்து அவருடைய முறைகள் கண்டிக்கத் தகுந்தனவானால், அவ்வப்பொழுதே கண்டிப்பதுண்டு. எனவே மகாத்மா காந்தியின் வாழ்க்கை முடிவு ஆனந்தத்தையே தேடுகிறதன்றித் துக்கத்தைத் தேடவில்லை. அவருடைய வாழ்க்கை நிர்மாண சக்தியையே அடிப்படையாகக் கொண்டது. ஆனால் அந்த வாழ்க்கையின் மர்மத்தை அறிய வேண்டுமானால், எளிய அவ் வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க வேண்டும். தியாகம் செய்ய மனதுடையவரே அதைச் செய்ய முடியும். வேறு வழி கிடையாது.

---

சிலோனில் கீழ் குறிப்பிட்டவரிடம்
நமது பத்திரிகையும் பிரசுரங்களும் கிடைக்கும்.

**K. N. Sankaran Pillai,**
**No. 281, 2nd Division,**
**Maradana,**
**COLOMBO.**

---

# கலியாணம் காதலுக்கா—கலகத்துக்கா?

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.

இரு கைகள் சேர்ந்தால் கும்பிடவும் கும்பிடலாம்; அடிக்கவும் அடிக்கலாம். எல்லாப் பொருள்களிலும் சக்தி நிறைந்து நிற்கிறது. சக்தியில்லாப் பொருளே உலகில் இல்லை. மறைந்து கிடக்கும் சக்தியை உணர இயலாதவர்களே சில பொருள்களுக்குச் சக்தி இல்லை என்று எண்ணத் துணிவார்கள். "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்ற பழமொழியுண்டு. இதன் பொருள் என்ன? வல்லவன் புல்லினுடைய முழு சக்தியையும் உணர்ந்தவனாவான். புல்லினும் அளவற்ற சக்தியைக் காண்பவனே வல்லவனாவான் என்பதும் பொருளாகும்.

மணம் உலக விருத்திக்கு அடிப்படையாகும். அப்படியிருக்க மனிதர்கள் அதாவது தற்காலத்து இந்தியர்கள் இந்தச் சங்கதியில் ஏன் ஏற்ற கவனம் செலுத்துவதில்லை? வாழ்க்கையில் சிரத்தையுடன் ஊக்கங் கொண்டவன் கலியாணத்தைப்பற்றிக் கவலையில்லாமலிருக்க மாட்டான். கலியாணம் இப்பொழுது சந்தை வியாபாரமாயிற்றே? ஏன்?

உணர்ச்சிக்குத் தக்கபடிதான் உறவு இருக்கும். பணம் மயமாயிருக்கும் இவ் வுலகில் இப்பொழுது எல்லா நிகழ்ச்சிகளும் வியாபார உருவம் படைத்துவிட்டன. உபயோகமுள்ள வரையிலும் உறவு என்பது அற்பர்களின் வாழ்வின் விதியாகும். பலஹீனர்களுக்கு இவ் வுலகம் இருக்க இடந் தராது என்று நல்லவர்களை வேட்டையாட ஆரம்பித்திருக்கின்றனர் பல கூட்டத்தார்கள்.

உபயோகத்தைக் கருதி உறவானால், சிற்றின்பமே கலியாணத்தின் நோக்கம் என்று கொண்டு பலர் மதி மயங்குகின்றனர். உத்தியோகச் சம்பளம் போக, மேலே வரும் வரும்படியையும் (இலஞ்சத்தையும்) சிலர் விடுவதில்லை. அதேபோல, மணத்தினால் வரும் இன்பம் நிரந்தரம். இதையும் நுகர்ந்து, மேல் வரும்படிக்கும் எல்லோரும் ஆசைகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்! இலஞ்சம் என்று எண்

ணினால் பாபமாகாதா? அதற்கே, மேல் வருப்படி என்று பெயர் கொடுத்தால் பாபம் தொலைந்துவிடுமல்லவா?

உலகத்தில் குழந்தைகள் தோன்றும் விந்தையைக் கவனிக்காதவன் மூடன். ஏதோ இன்பம், ஏதோ மயக்கம், ஏதோ துன்பம், ஏதோ தெளிவு, ஏதோ கால எல்லை. தங்கப் பொம்மையைப்போல குழந்தை தோன்றுகின்றது. முகச் சாடையில் தாய் அல்லது தகப்பனைப்போல குழந்தை இருக்கிறது. என்ன ஆச்சரியம்! இயற்கையின் கம்பீரத்தைப் பாருங்கள்! தாயின் ஆதரவுக் கைகளை நோக்குங்கள். குழந்தையின் புன்னகையையும் மழலைச் சொற்களையும் கவனியுங்கள், இவையொன்றையும் அனுபவிக்காமல், தானும் மானத்தை இழந்து, பிறரையும் அவமானத்துக்குள்ளாக்கி, வீட்டிலிருந்து விலைமாதர்களிடம் விரைந்து செல்லும் பொறுப்பற்ற ஆண் மகனையும் உங்கள் கண்களால் பார்த்து வையுங்கள்.

களிப்பு வேண்டும் ஆடவன் தன் குடும்ப வாழ்க்கையில் புளிப்பு நிறையும்படி வாழ்கின்றான். எதனாலே? காதலுக்காக அவன் மணம் முடிக்கவில்லையே? கலகத்துக்காக வல்லவா அவன் கலியாணம் செய்துகொண்டிருக்கிறான். ஏன் அவன் கலகத்தை வேண்டுகின்றான்? சக்தியில்லாப் பொருள்கள் சிதறும் தன்மை கொண்டவை. உயர்ந்த வெண்கலம் நல்ல நாதத்தைப் படைக்க வல்லமை கொண்டது. காற்றைக் கண்ட கவி, பாடுகிறான், ஆடுகிறான், ஆனந்தமடைகிறான். நோயாளியோ காற்றைக் கண்டு கதவை மூடுகின்றான். மனோ விருத்திக்குத் தக்க நிகழ்ச்சிதான் இவ் வுலகிலுண்டு.

வேண்டுமென்றே கலகத்துக்காகத்தான் கலியாணம் நடத்துகின்றது என்று நான் சொல்ல வரவில்லை. எல்லா நிகழ்ச்சிகளும் சில மாற்றக்கூடாத விதிகளுக்குக் கட்டுப்பட்டவை. அற்பர்களுக்குள் நிலைத்த உறவு இருக்க முடியாது. இது அசைய முடியாத பொது விதியாகும். குடித்தனம் செய்யும் நபர்கள் அற்பர்களாயின் அங்கேதான் கலகம் ஏராளமாய்ச் சாகுபடியாகும்.

சலிப்பு சக்தியற்றவர்களின் மனோவிருத்திகளிலொன்று. ஓட்டமில்லாத தண்ணீர் தேக்கம் அடைந்து துர்நாற்றம் வீசும். சக்தி என்பது ஓட்டம் கொண்டது. அதைப் படைக்காதவனுடைய உள்ளமும் தேக்கம் கொண்டு சலிப்பு அடையும். சலிப்பு வந்தவுடன் சந்தேகமும் கூட வரும். சந்தேகம் கலகத்தை உண்டாக்கும். சந்தேகம் சலிப்பை உண்டாக்காது. சக்தியற்றவன் நொய்யரிசி. அவன் கோதி பொறுக்கமாட்டான். மனதுகள் ஒன்றையொன்று நெருங்கிப் பழகும்பொழுது கோதிகள் ஏற்படாமல் இருக்காது. பலஹீனங் கொண்ட மனது துள்ளிவிழும், பாயும்.

# ஓர் கீழ் நாட்டு சர்வகலாசாலை.

(கவிச் சக்கிரவர்த்தி ரவீந்திரநாத் தாகூர் எழுதியது.)

மொழிபெயர்ப்பாளர்: திரு. E. பரமசிவம் அவர்கள், B. A.

உற்சாகமற்ற தற்கால உலக நிலையில் நம்பிக்கை யளிக்கக்கூடிய ஒரு அறிகுறி புலனாகிறது. ஆசியா விழித்தெழுந்துகொண் டிருக்கிறது. அதன் சக்தி சரியான வழியில் உபயோகிக்கப்படின், அதுதான் மாத்திரமின்றி உலகமும் பெரிதும் க்ஷேமமடையும்.

சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக மேனாடுகளுக்கும் கீழ் நாடுகளுக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டும் நற்பயனென்றும் விளையாது, பகையே உண்டாயிருக்கிறது. இச் சம்பந்தத்தால் கீழ் நாடுகளில் குழப்பம் ஏற்பட்டு விட்டதால், அவை மேனாடுகளை வெறுக்கின்றன.

---

ஒரே தன்மை கொண்ட மனதுகள் சக்தியில்லாமலிருப்பினும், ஒத்து வாழும் தன்மை கொண்டவை. எவ்வாறு? இரண்டு கொலையாளிகளும், கொள்ளைக்காரர்களுங்கூட ஒத்துப் போய்விடுவார்கள். ஏன்? அவர்களை ஒதுக்கின உலகம் அவர்களுக்குப் பகையல்லவா? அதற்காகவென்றே அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ்வார்கள். இதைப் பார்த்துமிருக்கிறோம்.

கலியாணத்துக்குக் காதலே அவசியம். அதாவது ஒரே வகை இயல்பு கொண்ட மனதுகளே வேண்டும். மணத்தின் இயல்பு இளம் பிராயத்தில் தெரியாது. குழந்தைப் பருவத்தில் மணத்தின் தனி இயற்கையைக் காணமுடியாது. எனவே தக்க வயதிலேதான் மணம் முடிக்க வேண்டும். குழந்தைகளுக்குப் பொம்மைக் கலியாணமும் பொய்க் கலியாணமும் செய்யும் கொடிய வழக்கம் தொலையவேண்டும். கலக வாழ்க்கை வேண்டாம்.

மேற்கும் கிழக்கும் சுயநலமற்றுச் சந்திக்காமையால் அவை இரண்டறக் கலக்கவில்லை. மேனாட்டார் சுயநலங்கொண்டு கீழத் தேசங்களில் தங்கள் ராஜ்யங்களை ஸ்தாபித்தும், வியாபாரத்தைப் பெருக்கியும் வருவதால், இரு நாட்டார் மத்தியிலும் பெரும் பிளவு தோன்றியிருக்கிறது. இதனால் இரண்டிற்கும் ஆபத்துண்டு. அன்பற்ற இச் சம்பந்தத்தால் கெடுதியுண்டென மேனாடுகள் அறிந்தும் அலக்ஷிய புத்தியுடன் இருக்கின்றன. இவ்விதம் தங்கள் மிருக பலத்தில் நம்பிக்கை கொண்டிருந்த ராஜ்யங்கள் அழிந்து போயினவென சரித்திரம் கூறுகிறது.

இதனால் ஏதாவது ஓர் சாராருக்கு ஆபத்தோ நஷ்டமோ ஏற்படுவதைப் பற்றி அவ்வளவு கவலைப்பட வேண்டியதில்லை. மேனாட்டார் கீழ்நாட்டாரை சமத்துவமாக நடத்தாததால், மேனாட்டார்களிடம் கர்வம், பேராசை, பொய்மை ஆகிய தூர்க்குணங்களும், கீழ் நாட்டாரிடம் பயம், சந்தேகம், முகஸ்துதி செய்தல் ஆகிய கெட்ட குணங்களும் வளர்ந்துகொண்டு வருவதால், மனிதன் தன் ஆத்மீகத் தன்மையை இழந்துவிடுவானோ என பயப்பட வேண்டியிருக்கிறது.

தற்கால உலக நிலைமையை உள்ளபடி அறிந்து, மிருக பலத்தைவிட ஆத்ம பலத்தில் அதிக நம்பிக்கை கொண்டு முன்னேற வேண்டிய காலம் வந்திருக்கிறது.

மனிதனது ஆரம்பகாலச் சரித்திரத்தை நோக்குவோமானால், அவன் தன் வளர்ச்சியைக் கருதி சமூகத்தை உண்டாக்கியிருப்பது புலனாகும். அக் காலத்தில் மனிதர் போக்கு வரவு சாதனமின்றி ஒரு இடத்திலேயே கட்டுண்டு கிடந்தனர். தற்காலத்திலோ போக்குவரவு சாதன வசதியால் பல தேச மக்களும் ஒருவரையொருவர் சந்திக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் நன்மையோ தீமையோ உண்டாகலாம். உலகமே ஒரு தேசமாய் விட்டதால், சகல தேச மக்களும் தங்கள் தங்கள் சுய தர்மத்தை விடாது, ஓரே சமூகமாக எவ்விதம் வாழ்வது என்பதே தற்போதைய உலகப்பிரச்சனை. மனித சமூகம் இப்போது ஒற்றுமைக் கயிரால் உரமாகக் கட்டப்படல் வேண்டும். இந்தப் பிரச்சினை மகத்தானதாயிருப்பதால், இதைத் தீர்க்க மக்களின் தெய்வீகத் தன்மையில் நம்பிக்கை வைத்துப் பெரும் முயற்சி செய்ய வேண்டும்.

பல தேசவாசிகளும் ஒருவரையொருவர் அறிந்துகொள்வதற்கு சந்தர்ப்பங்கள் உண்டுபண்ணுவதே இதற்கு முதற்படி. ஒருவரையொருவர் அடக்கி ஆளும் ராஜீயத் துறையிலும், லாபங் கருதும் வியாபாரத் துறையிலும் ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரை நன்கு அறிந்துகொள்ள முடியாது. போட்டியின்றி சகலரும் சந்திக்கும்



இடமொன்று கண்டுபிடிக்க வேண்டும். சர்வகலாசாலை அப்படிப்பட்ட இடமாகும். இங்குதான் யாவருக்கும் பொதுவான உண்மையைக் கண்டுபிடிக்க முயற்சித்துக் கலைஞர்கள் அழகிய உருவங்கள் சிருஷ்டித்து இருப்பதும், விஞ்ஞான சாஸ்திரிகள் ஜெகத் உண்மைகளைக் கண்டுபிடித்திருப்பதும், தத்துவ சாஸ்திரிகள் வாழ்வின் தத்துவத்தைக் கண்டுபிடித்திருப்பதும், ரிஷிகள் ஆத்மீக உண்மையை உணர்ந்து, தங்கள் வாழ்வில் காட்டியிருப்பதும், உலகம் முழுவதும் க்ஷேமமடைய வேண்டுமென்னும் நோக்கங் கொண்டிருப்பதையும் காணலாம். ஆகாய மண்டலம் இடத்திற்குத் தக்கபடி மாறுபட்டிருப்பினும், அகிலமெல்லாம் ஒன்றாயிருப்பது போல மானிடரின் மனமும் தேசத்திற்குத் தக்கபடி சற்று மாறுபட்டிருப்பினும், ஆகாயம் ஒன்றே என்ற உண்மையை உணர வேண்டும். இவ் வுண்மையை நடு நிலைமையிலிருந்து நோக்கின், ஒற்றுமை உணர்ச்சிக்குப் பங்கம் வராமல் வேற்றுமையை மதித்து வாழ வேண்டுமென்றும், எல்லோரும் ஒன்றுபோலாய்விடுவது ஒற்றுமையில்லையென்றும் சகலரும் சமாதானமாய் வாழ்வதே ஒற்றுமை என்றும் தெரிந்துகொள்ளலாம்.

இதுவே இந்த நூற்றாண்டின் பிரச்சினை. தனக்கும் உலகத்திற்கும் க்ஷேமமுண்டாகும்படி கீழ் நாடு தன் சுயரூபத்தைக் காட்ட வேண்டும். உலகில் பெருங் கஷ்ட நஷ்டங்கள் உண்டானதற்குக் காரணம் ஒருவரையொருவர் நன்கு தெரிந்துகொள்ளாதது என்பது சரித்திர உண்மை. ஏனெனில் ஒருவரையொருவர் தெரிந்துகொள்ளாத பொழுது நியாயமாக நடந்துகொள்ள முடியாது.

உலக மக்கள் ஒருவரையொருவர் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து, அகில உலக சர்வகலாசாலையொன்று இந்தியாவில் ஸ்தாபித்திருக்கிறேன். மேனாட்டு மாணவரும் இந்தியாவிற்குக் கிழக்கேயுள்ள தேச மாணவர்களும் இந்திய தத்துவ சாஸ்திரம், இலக்கியம், கலை, சங்கீதம் முதலியவைகளை அவைகள் பிறந்த இடத்தில் உள்ளபடி கற்க வேண்டுமென்பதும், இவைகளைப்பற்றி ஆராய்ச்சி புரிவாரோடு மாணவர்களும் சேர்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்பதும் இந்த ஸ்தாபனத்தின் நோக்கம்.

இந்தியா உயிர் பெற்றுக்கொண்டிருக்கிறது. உலக முன்னேற்றத்திற்கு ஆக்கம் அளிக்க தன்னைத் தயார் செய்துகொண்டிருக்கிறது. பண்டைக் காலத்தில் பாரத மாதா தன் அருங் கலைகளை உற்பத்தி செய்தாள். பழைய உலகம் அழிந்து புது உலகு எழும் இக் காலத்திலும் தன் கலைகளால் உலகிற்குத் தொண்டு புரியக் காத்துக்கொண்டிருக்கிறாள். இந்திய சரித்திரத்தில் இது ஒரு முக்கியமான காலம். இச் சமயம் எம் மேனாடாவது பிரதிப் பிரயோஜனத்தை எதிர்

பாராது உதவி செய்ய முன்வரின் "காலத்திற் செய்த உதவி ஞாலத்தில் மாணப் பெரிது" என எக் காலத்திலும் இந் நன்றியை இந்தியா மறவாது போற்றும்.

மேனாட்டுச் சர்வகலாசாலைகள் தங்கள் மாணவர்களுக்கு ஐரோப்பாவில் உற்பத்தியான கலைகளை யெல்லாம் அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கின்றன. ஆகையால் மேனாட்டுக் கலைகளைத் தெளிவாக உலகம் அறிந்து கொள்ளுகிறது. கிழ்நாடும் உலக அறிவைப் பெருக்கச் சிதறுண்டு கிடக்கும் தன் கலைகளை ஒன்று திரட்டிக் கற்பிக்க முன்வரல் வேண்டும்.

முற்காலத்தில் ஆசிய நாடுகள் தனித்து நின்று, தங்கள் நாகரீகத்தை வளர்க்க வேண்டிய அவசியமிருந்தது. இப்பொழுது ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டிய காலம் வந்திருக்கிறது. ஒவ்வொரு தேசத்திலும் தனித் தனியாக வளர்க்கப்பட்ட நாகரீக நாற்றுக்களைப் பிடுங்கிப் பரந்த உலகமாகிய வயலில் நடவேண்டும். ஒவ்வொரு தேச நாகரீகத்தினால் பயனுண்டாக வேண்டுமானால், உலகம் அதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

கலைவளர்ச்சிக்கு ஆசியா, ஐரோப்பாவோடு ஒத்துழைக்கு முன் தன் கலைகளை யெல்லாம் ஒன்று சேர்க்க வேண்டும். இவ்விதம் தன் கலைகளைக் கற்ற பின் சுய நம்பிக்கையுடன் தானறிந்த உண்மையை உலகிற்கு உணர்த்திப் புதிய நினைப்புலகத்தை உண்டுபண்ண வேண்டும். கீழ்த் தேசங்கள் தன் ஒப்பற்ற கலைகளை மறந்து மேனாட்டுக் கலைகளைப் பின்பற்ற முயன்றால், உபயோகமற்று இழிநிலை யடையும். ஆசியா தன் சுயத் தன்மையை இழந்துவிடின், இவ் வையகத்திற்கு உபயோகமாகும்படி வாழ முடியாது. கீழ்நாடு தன் சுய கலைகளை விடின், மேனாட்டின் அறிவு வளர்ச்சியும் ஸ்தம்பித்துப் போகும். இவ்வுலக முழுதும் மேனாடு மயமாய் விடின், உலகம் முன்னேற்ற மடையாமல் அழிந்துவிடும்.

காலக்கிரமத்தில் ஆரிய, செமிடிக், மங்கோலிய முதலிய கீழ் நாட்டுக் கலைகளை யெல்லாம் அகில உலக சர்வகலாசாலையில் கற்பிக்க வேண்டுமென்பதே எனது ஆசை. அதன் மூலம் கீழ் நாட்டார் மனதை மேனாட்டார் அறிந்துகொள்ள வேண்டுமென்பதே எனது உள்ளக் கிடக்கை.

கிழக்கித்திய சாஸ்திரங்கள், கலைகள் முதலானவைகளை அறிந்து அதனால் புதிய உற்சாகத்தை அடைய மேனாட்டார் விரும்புகின்றனர். ஒரு காலத்தில் கீழ் நாட்டில் செல்வமிருந்ததால், மேனாட்டார் திரவியந் தேட இங்கு போந்தனர். இப்போது செல்வம் மேனாடு சென்றுவிட்டது. ஆனால் கீழ்நாடு தன் முன்னோரின் ஆத்மீக முயற்சியால்



தேடிய அறிவுப் பொக்கிஷத்தை இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறது. மக்கள் செல்வத்திலும் செல்வாக்குப் பெருக்கிலும் பூரண திருப்தி யடைவது கிடையாது. எனவே தற்காலத்தில் இவைகளில் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டு ஆத்ம தாகம் உண்டாயிருக்கிறது. இத் தாகத்தைத் தணிக்க தன் ஆத்மீகக் கலையை உலகிற்கு அளிக்க அரும் சந்தர்ப்பம் கீழ்நாட்டிற்கு வந்திருக்கிறது. ஒரு காலத்தில் இந்தியாவிற்குச் சுயபுத்தி இருந்தது. அப்போது உயிரோடிருந்தது; நினைத்தது; உணர்ந்தது; பேசினது. புதியன ஏற்றலுக்கும் சிருஷ்டிப்பதற்கும் சக்தி யிருந்தது. தற்காலக் கல்வி நம் புத்தியை அபிவிருத்தி செய்யும் முறையில் அமைக்கப்படவில்லை. கல்விச்சாலைக் கட்டிடங்களும் புஸ்தகங்களும் நம் அறிவு வளர்ச்சியைத் தடுத்துக் கொண்டிருக்கின்றன. நம் மனம் புத்தகசாலையாகப் பாவிக்கப்பட்டு உபயோகமற்ற புத்தகங்களை (மனனம் செய்தல்) கடம் போடும்படி செய்யப்பட்டிருக்கிறோம். ஆகையால் நம் மனம் பகட்டில் மயங்கிச் சுயப்பிரகாசத்தை இழந்துவிட்டது. ஏராளமான பொருட் செலவில் நமக்குக் கல்வி அளிக்கப்பட்ட போதிலும், அது நமது புத்தியை மழுங்கச் செய்துவிட்டது. உண்மையைக் கூறமிடத்து கண்களைக் கொடுத்துக் கண்ணாடிகளைப் போட்டுக்கொண்டிருக்கிறோம்.

இந்தியாவில் கலைக்குத் தெய்வம் சரஸ்வதி. அவளுடைய நிறம் வெண்மை எனக் கேட்டு, மேனாட்டார் சந்தோஷிப்பார்; அவள் உயிருள்ள ஒரு பெண்; அவளுடைய வாசஸ்தலம் தாமரை மலர். கலைவாணியே வாழ்விற்கு உயிர்நாடி என்பது இதன் பொருள்.

மேனாட்டுக் கல்வி மானஷீகத் தன்மை யற்றது. சுண்ணாம்பு பூசிய வகுப்புச் சுவர்களின் நிறத்தையுடையது. அஃது புத்தகங்களிலும் உபாத்தியாயர்களின் மனதிலும் வசிக்கிறது. நான் பள்ளியில் பயில அனுப்பப்பட்ட போது, இக் கல்வி என் மனதில் எழுப்பிய உணர்ச்சியைப் பற்றி இன்னோரிடத்தில் விஸ்தரித்திருக்கிறேன். ஒரு மரத்தை பூரண வளர்ச்சி யடைய விடாமல் பெட்டிகள் செய்ய வெட்டினால், அம் மரம் எவ்வாறு வெறுக்குமோ அவ்வாறே நானும் இக் கல்வியை வெறுத்தேன்.

ஏனெனில் மேனாட்டாரும் கீழ்நாட்டாரும் ஒருவரை யொருவர் நன்கு அறிந்துகொள்ளும் நோக்கத்துடன் நம் தற்காலக் கல்வி முறை வகுக்கப்படவில்லை. வெள்ளையருக்கு அடிமைகளாக்கும் நோக்கத்துடனேயே கல்வி யளிக்கப்பட்டது. நம் சர்வகலாசாலைகளுக்கு உன்னத நோக்கங்கள் இல்லாத குறை இன்னும் இருந்துகொண்டுதானிருக்கிறது. சமீபத்தில் பாடங்களைச் சர்வகலாசாலைகள் அதிகப்

படுத்தின. இதனால் என்ன பிரயோஜனம்? இஃது பொதி மாட்டின் பாரத்தை அதிகப்படுத்தி அதற்குக் கஷ்டம் விளைவிப்பதே யாகும்.

புத்திக்கு உண்மையைக் கண்டறியும் சாதனமும், வளர்ச்சிக்குரிய சுதந்திரமும் அழியாதபோது, அஃது வெற்றி விருப்பத்தில் வீழ்கிறது. நம் நாட்டு மாணவர்களுக்கு பரீக்ஷையில் தேறும் பைத்தியம் பிடித்திருக்கிறது. கொஞ்ச அறிவைக் கொண்டு அதிக மார்க்குகள் எடுப்பதே அவர்களின் நோக்கம். இதனால் மாணவர்களிடம் உண்மையைக் கண்டறியும் ஆவல் குறைந்து அறிவு வளர்ச்சி குன்றிவிடுகிறது. அறிவை வளர்ப்பதை மறந்து பரீக்ஷையில் தேருவதிலேயே நம் முழுக் கவனமும் சென்றிருக்கிறது. பரீக்ஷையில் வெற்றி பெற்று உயிரற்ற குமஸ்தாக்களாகவும் வக்கீல்களாகவும் போலீஸ் இன்ஸ்பெக்டர்களாகவும் ஆகி இளமையில் மடிகிறோம்.

சர்வகலாசாலைகள் சலைகளைத் திரட்டிப் பிரித்துக்கொடுக்கும் உயிரற்ற ஸ்தாபனங்களா யிருத்தல் கூடாது. ஒரு நாட்டார் தங்கள் சர்வகலாசாலைகளின் மூலம் பிற நாட்டாருக்கு அறிவு விருந்தளித்து, அவைகள் திரும்பக் கொடுக்கும் விருந்தைக் கௌரவத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். தற்சமயம் அகில இந்தியாவிலும் இந்தியாவின் அருங் கலைகள் யாவையும் கற்பிக்கும் சர்வகலாசாலை யொன்றுமில்லை. இந்தியக் கலைகளைக் கற்கக் கடல் கடந்து, பிரான்சு, ஜெர்மனி முதலிய தேசங்களுக்குச் செல்ல வேண்டி யிருக்கிறது. இந்தியாவிலிருக்கும் கல்விச்சாலைகள் கேவலம் அறிவுப் பிச்சை எடுக்கும் திருவோடுகளா யிருக்கின்றன. இவை இந்தியாவின் சுயமரியாதைக்குப் பங்கம் விளைவித்து, இரவல் ஆபாணத்தை யணிந்து பெருமை கொள்ளும் மூட்டாள்களாக நம்மை ஆக்குகின்றன.

இக் காரணத்தாலேயே பல கஷ்டங்களுக்கிடையில் வங்காளத்தில் ஒரு பள்ளிக்கூடம் நிறுவினேன். நான் ஒரு புலவனாயிருந்தும் ஆசிரியத் தொழிலையும் ஏற்றேன். நான் ஆசிரியனென்பதை மறந்த போதுதான் கவியூற்றுப் பொங்கும் என்பதையும் அறிவேன். இப் பள்ளிக்கூடத்திலிருந்தே சுதேச சர்வ கலாசாலை வளர்ந்து வருகிறதென்பது எனது அபிப்பிராயம். இந்தியா தன்னை யறியவும், உண்மையை யுணர்ந்து அதை எங்கு கண்டாலும் தன்னதாக்கவும், பிறவற்றை தன் கலைகளோடு ஒத்துப் பார்த்துத் தன் சிருஷ்டி சக்தியை வளர்க்கவும், பிற நாட்டாருக்கு அறிவு விருந்தளிக்கவும், இந்தியர் மனத்தை ஏகாக்கிரகப் படுத்தவும் இச் சர்வகலாசாலை முயன்று வருகிறது.

மனிதன் தன் புத்தியின் உயர்வில் பெருமை கொள்வது இயல்பு. கல்வி புத்தியை வளர்ச்சியடையச் செய்யக்கூடியது; வெறும் வெற்



றியை மாத்திரம் தருவதல்ல. அவசியத்தாலோ பொருளாசையாலோ அறிவாளி தன் புத்தியில் பெருமை கொள்ளாவிடின், சுயமரியாதையை இழக்கிறான். தற்காலக் கல்வி முறையால் இந்தியாவிற்கு இழிவு ஏற்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் பரத கண்டத்தில் சுதேசக் கலைகளே கற்பிக்கப்பட்டன. அக் கல்வியை மறந்து, ஆங்கில பாஷையில் நடைபெறும் அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதற்குப் பரீக்ஷை தேறும் நோக்கத்துடன், இப்போது நாம் கல்வி கற்கிறோம். நம்மில் படித்தவர்களை உத்தியோகம் பெற யோக்கியதை யுடையவர்கள் எனச் சொல்லலாமே யொழிய, அறிவாளிகளெனக் கருத முடியாது. படித்தவர்களின் தொகை பெருகி உத்தியோகங் கிடையாததால், அவர்களுக்குள்ளும் இப்போது அதிருப்தி யேற்பட்டிருக்கிறது. அவர்களை உண்டாக்கிய அரசாங்கம் இப்போது அவர்களையே குற்றம் கூறுகிறது. சீர்கெட்ட கல்வி முறையில் அவர்களின் வாழ்வைப் பாழ்படுத்திய அரசாங்கம் அவர்களை வெறுப்பது மனிதத் தன்மையாகாது.

ஒருவகைப் பறவைகளைக் கொன்று, அவைகளின் இறகுகளால் தங்களை அலங்கரித்துக்கொள்ளும் வழக்கமுடைய ஓர் அநாகரீக ஜாதியார் அப் பறவை இனம் அழிந்த பின் அப் பறவைகளைக் குற்றம் சாட்டுவதைப் போல் மேற்கூறிய விஷயம் இருக்கிறதல்லவா? அதிகார வர்க்கத்தார் சர்டிபிகேட்டைக் குறிகொள்ளும் பழைய கல்வி முறையையே பின்பற்றிக் கொண்டு, நாம் அறிவு வளர்ச்சிக்கெனவே கல்வி பயில வேண்டுமெனப் போதனை செய்வது பொருத்தமற்றதாகும். கட்டிப்போட்டிருக்கும் பறவையிடம் அதன் சிறகுகள் பறப்பதற்கென ஞாபகப்படுத்துவதைப் பார்க்கிலும் கட்டியிருக்கும் சங்கிலியை வெட்டிவிடுவது மேல். ஆங்கில பாஷையில் மோகங் கொண்டு அப் பறவை, சங்கிலியை ஆபரணமாகக் கருதிக் கொண்டிருப்பது மிகவும் விசனிக்கத்தக்க விஷயம்.

“எழுதப் படிக்கத் தெரிகிறவன் சாரட்டு வாகனத்தில் சவாரி செய்யலாம்” என வங்காள பாஷையில் ஒரு பழமொழி யிருக்கிறது. “அறிவே பலம்” என ஆங்கிலத்திலும் ஓர் முதுமொழி யுண்டு. இம் முதுமொழிகள் பயனைக் காட்டி மாணவர்களைப் படிக்கத் தூண்டுவதா யிருக்கிறதே யொழிய, அறிவுத் தாகத்தை உண்டாக்குவதா யில்லை. உலக வாழ்வில் முன்னேற்றமடைவதற்கு “நாணயமே நல்ல வழி” எனப் படுவது போல இவை யாவும் அப்படியே ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மைகளல்ல. துரதிஷ்ட வசமாக, காரியத்தைக் குறி கொண்டு, பயனைக் கருதி அளிக்கப்படும் கல்வி செல்வ வாழ்விற்கு இட்டுச் செல்வது உண்மையே. மேனாட்டுக் கல்விமுறை லௌகீக வாழ்வை அளிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறதென அறிகிறேன்.

ஜனசமூகம் சாதாரண நிலைமையில் இருக்கும் போது, கல்வி முறை வாழ்க்கைக்குத் தக்கபடி அமைவது இலகுவில் தெரியும். இப்போது அழிந்துகொண்டிருக்கும் நம் சுதேசக் கல்வி முறை மக்களின் வாழ்க்கைக்கு பொருத்தமானது. அது சகலருக்கும் கல்வியறிவைப் புகட்டக்கூடியதாய் இருக்கிறது. அக் கல்வி முறைப்படி ஆசிரியர்கள் கிராமந்தோறும் சென்று, ஜனங்களுக்கு உயரிய கருத்துக்களையும் தேசிய லக்ஷியங்களையும் போதித்தல் வேண்டும். மேலும் அவர்கள் காவியங்களை வியாக்யானம் செய்தும் சரித்திர நிகழ்ச்சிகளைக் கொண்டிருக்கும் புராணங்களை வாசித்தும், பழங் கதைகளிலிருந்து எழுதப்பட்ட நாடகங்களை நடித்தும், காலக்ஷேபம் செய்தும், பக்தியை எழுப்பும் கீர்த்தனங்களைப் பாடியும் நாட்டில் கல்வியைப் பரப்புகின்றனர். உயர்ந்த லக்ஷியமும் வாக்கு வன்மையும் ஆண்மையுமுள்ள மனிதனை உண்டாக்குவதே நம் பண்டைக் கல்வியின் நோக்கம். கல்வி வாசனையற்ற பாரத மக்கள் அறத்தைப் போற்றி, ஜனசமூக சட்டதிட்டங்களுக்கு அவசியமான தன்னடக்கம், தியாகம் ஆகிய இவைகளைக் கைக்கொண்டு வந்திருப்பதற்குக் காரணம் கல்வி முறையின் உயர்வேயாகும்.

இக் கல்வி முறை தற்கால சிக்கலான வாழ்விற்குப் பொருத்தமற்றதாகத் தோன்றலாம். ஆனால் வாழ்வின் லக்ஷியம் எக் காலத்திலும் மாறுதலடைவது கிடையாது. வாழ்வு சிக்கனமாகத் தோன்றினும், ஒரே மாதிரியாக இருப்பது உண்மை வாழ்வு ஒரே லக்ஷியத்தைக் கொண்டிராவிட்டால் உலகில் சமாதானம் நிலைக்காது. தற்கால நாகரீகத்தில் அநேக அனாவசியமான விஷயங்கள் இருக்கின்றன. நவீன நாகரீகத்தின் அச் சுமைகளைத் தாங்குவதில் சக்தியுடையவனாகயிருப்பினும், சாமர்த்தியமற்றவனாகயிருப்பதை மறுக்க முடியாது. வானத்திலிருந்து இதைக் கண்ணுறும் தேவதைகளுக்கு நீந்தத் தெரியாத ராக்ஷதன் ஒருவன் ஆழமான தண்ணீரில் சென்றுவிட்டுத் தவிப்பதைப் போல் தோன்றும்.

அடிமைத்தனத்திற்கு மூலகாரணம் ஆக்கத்தில் ஆசையேயாகும். தற்கால நாகரீகத்தில் பேராசை யென்றும் கறைபடிந்திருப்பதால், அதைப் போக்குவது மகா கடினம். இதற்குச் சான்று என் மாணாக்கரே யாவர். சிறு பையன்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து சில வருஷங்கள் நன்கு படிக்கிறார்கள். மேல் வகுப்புகளுக்கு வந்தவுடன் முதியோர்களை ஆட்டும் லௌகிகப் பற்று அவர்கள் மனதில் தோன்றிவிடுகிறது. அதன் பின் அறிவு விருத்திக்குக் கற்பதை மறந்து, பரீக்ஷையில் தேறுவதற்குப் படிப்பதில் கவனம் செலுத்துகிறார்கள். தற்காலத்தில் தொழில்கள் அதிகமாகவும், பெரும் வருவாய் தரக்கூடியவையாகவும் இருக்கின்றன. மேலும் அவைகளுக்கெனப் பிரத்தி



யேகமாய்ப் படிக்க வேண்டியிருக்கிறது. கல்வி பயில்வதைத் தொழிலாகக் கொள்வதால், ஆன்ம சுதந்திரம் அடைய முடியாமல் போய் விடுகிறது. இதனால் ஆன்மா திருப்தி யடைவதில்லை; மூச்சுத் திணறும் காமாந்திர செல்வ வாழ்வின் பந்தங்களினின்றும் விடுபட விழைகிறது. ஆகையால் உலகமெங்கும் தற்காலக் கல்வி முறையில் அதிருப்தி யேற்பட்டிருக்கிறது. ஏனெனில் இக் கல்வி முறை அறிவை வளர்ப்பதைத் தன் நோக்கமாகக் கொள்ளாது லௌகிக வாழ்வை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

இந்தியாவிலும் விவரிக்க முடியாத ஒருவித அதிருப்தி தோன்றியிருக்கிறது. இதனால் தேசீய பள்ளிகளும் கலாசாலைகளும் ஏற்படுத்தும் முயற்சி தோன்றியிருக்கிறது. ஆனால் துரதிஷ்ட வசமாக பெருங் கல்வி நமது சுய சிந்தனா சக்தியையும் சுய முயற்சியையும் அழித்துவிட்டது. நாம் எதையும் சிருஷ்டிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் கடன் வாங்கினால் போதுமென்றும் பாடசாலைகளில் பயிற்சி யளிக்கப்படுகிறோம். அதன் பயனாய் ஐரோப்பிய சர்வகலாசாலைகளிடமிருந்து நமது கல்வித் திட்டங்களைக் கடன் வாங்க முயற்சிக்கிறோம். மிதிக்கப்பட்ட இந்திய, நெற்பயிர் அறுவடை காலத்தில் அண்டை வயலிலிருந்து நெல்லைப் பெறலாம் எனப் பகற்கனவு காண்கிறது. இந்த அணியை மாற்றிக் கூறின், நன்கு நடக்க அந்நிய நாட்டு மரக்கால்களை உபயோகிப்பதைப் பார்க்கிலும், தசை நார்களை பழக்குவது நலமென்பதை மறந்துவிடுகிறோம். ஏனெனில் அம் மரக்கால்கள் இடும் சத்தத்தில் மயங்கி, அவைகளை உபயோகிக்கும் சாமர்த்தியத்தில் பெருமை கொள்ளுகிறோம்.

அன்னியரிடம் கடன் வாங்கச் செல்லும்போது, உண்மையில் உதவி வரும் இடத்தை அலக்ஷியம் செய்வது இயல்பு. ஆழ்கடல் மீன்களில், ஒரு விஞ்ஞான சாஸ்திரி தோன்றி, குரங்கு தாவுதலை ஆராய்ச்சி செய்யின் அச் செய்கைக்கு மரக் கிளைகளே காரணமென்றும், குரங்குக்கு இயற்கையில் தாவும் சக்தி கிடையாதென்றும் முடிவுக்கு வரும். அன்னிய நாட்டு சர்வகலாசாலையின் கட்டிடங்கள், தட்டுமுட்டு சாமான்கள், சட்டதிட்டங்கள், பாட ஜாபிதா இவைகளில் மயங்கி அவைகளின் ஊடே மறைந்து நிற்கும் கல்வி முறையைக் கவனியாமல் விடுவது சகஜம். ஐரோப்பாவில் மக்கள் சர்வகலாசாலையில் மாத்திரமன்றி பல துறைகளாகிய பாராளு மன்றம், இலக்கியம் ஆகிய இவற்றினின்றும் கற்றுக்கொள்ளுகிறார்கள். சிருஷ்டி சக்தியும், தியாக சக்தியும் வாய்ந்த நாட்டின் பெரு மக்களோடு மாணவர்கள் உறவாட அங்கு சந்தர்ப்பம் இருக்கிறது. சாஸ்திரங்கள் கண்மூடித்தனமாய் ஒப்புக்கொள்ளப்படாமல், அவைகளிலுள்ள கருத்துக்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டு போதிக்கப்படுகின்றன.

எனவே அவர்களின் சர்வகலாசாலைகளிலுள்ள சில குறைகளும் இவ்விதம் நீக்கப்படுகின்றன. தேங்கிக் கிடக்கும் நீர்த்துறை மழையால் சுத்தமடைவது போல, மேனாட்டுக் கல்வி முறையும் சற்று சீர்படுகிறது. ஆனால் துரதிஷ்டவசமாக இந்தியாவில் நல்லாசிரியர்களைத் தவிர ஐரோப்பிய சர்வகலாசாலைக்குரிய தட்டுமுட்டு சாமான்கள் யாவுமுண்டு. இந்திய சர்வகலாசாலை ஆசிரியர்கள் யாவரும் சுய சிந்தனா சக்தியின்றி வெறும் புத்தகப் படிப்பாளிகளா யிருக்கின்றனர்.


ஒரு ஆசிரியர் போதனா சக்தி வாய்ந்தவராக விளங்க வேண்டுமானால், தானும் சதா படித்துக்கொண்டே யிருக்க வேண்டும். எரிந்துகொண்டிருக்கிற விளக்குத்தான் இன்னொரு விளக்கைப் பொருத்த முடியும். தான் போதிக்கும் விஷயத்தின் உண்மையை உணராது, நெட்டுருப் போட்டு வைத்ததை மாணவர்களுக்குப் போதிப்பதால் அவர்கள் மனம் பளுவடையுமே யொழிய, அறிவு வளர்ச்சி யடையாது. விஷயங்களைப் போதிப்பதுமன்றி ஆதர்ஸமும் அளிக்க வேண்டும். ஆதர்ஸம் (Inspiration) நீங்கி, விஷயங்கள் விரியின் உண்மை தன் பெருமிதத்தை இழக்கிறது. நம் பள்ளிக்கூடங்களில் படிக்கப்படும் கல்வி உபயோகமற்றதா யிருப்பதற்குக் காரணம் உபாத்தியாயர்கள் தாங்கள் போதிக்கும் விஷயத்தைப்பற்றிச் சிந்தனையின்றிப் புத்தகத்தில் படித்தவற்றைக் கற்பிப்பதே யாகும்.

உண்மையைக் கண்டறிந்து அதைப் போதிப்பதே நான் ஸ்தாபித்திருக்கும் கல்விச்சாலையின் நோக்கம். புத்தி வளர்ச்சி யடைந்துகொண்டிருக்கும் பையன்களுக்கு கல்விச்சாலை செயற்கை முறையில் தயாரித்த ஆகாரத்தைக் கொடுக்கும் உயிரற்ற கூடாக இருத்தல் கூடாது. பையன்களும் ஆசிரியர்களும் ஒன்றாக வசிக்கும்படி இஃது திறந்த வீடாகயிருக்க வேண்டும். மாணவர்களும் ஆசிரியர்களும் உண்மையை அறிவதின் ஆசையிலும், கலாஞான இன்பத்தை அனுபவிப்பதின் அவசியத்திலும் கட்டுண்டு பூரண வாழ்வு வாழ வேண்டும். முற்காலத்தில் தொழிற் கல்வியை ஆசிரியர்கள் தங்கள் தொழிற்சாலைகளில் மாணவர்களோடு சாமான்களைச் செய்து காட்டியே போதித்து வந்தனர். அக் கல்வி உயிர்பெற்றிருந்தது. ஏனெனில் வாழ்வில் பயன்படுத்திக் காட்டும் தொழிற் கல்வி மாணவர்களிடை ஆக்கல் சக்தியை எழுப்பும் சக்தி வாய்ந்தது. உண்மையைத் தேடும் மனிதனிடம் உற்சாகம், தைரியம், நாணயம், சாமர்த்தியம் ஆகியவைகள் தோன்றுவதால், கலாஞானத்திற்குச் சிருஷ்டி சக்தி யுண்டென்பது வெளிப்படை. ஆசிரியர், மறைந்திருந்த விஷயங்களை மாத்திரம் போதிப்பதால் கலாசாலைக் கல்வி பயனற்றதாக முடிகிறது.

சர்வகலாசாலைகளுக்கு வேண்டியது உண்மை யடங்கியிருக்கும் பெட்டிகளும் அதைப் பிரித்துக் கொடுக்கும் ஏஜண்டுகளும் அல்ல.

# பெண் கல்வி.

திரு. செல்லப்ப நாயனார் அவர்கள்.



பாரததேசத்துப் பெண்கள் கல்வி இல்லாமையினால், அஞ்ஞான இருளில் ஆழ்ந்திருக்கிறார்களென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமாகும். பெண்களுக்குக் கல்வி அவசியமென்பதைச் சிலர் ஒப்புக்கொண்டாலும், அநேகர் பெண்கள் படிப்பதினால், என்ன பிரயோஜனம், கப்பலேறிச் சம்பாதிக்கப் போகிறார்களா? என்றும், அவர்கள் படித்தால் புருஷர்களுக்கடங்கி நடக்க மாட்டார்களென்றும், யாவரையும் மதிக்க மாட்டார்களென்றும் பலவித மூடத்தனமான எண்ணங்களைக் கொண்டு பெண்களின் பேராற்றலை அடக்கி விடுகின்றார்கள். தெய்வ பக்தியும், விவேகமும், நற்குணங்களும் உண்டாவதற்காகக் கல்வி கற்பதே யல்லாது, உத்தியோகம் செய்வதற்கோ அல்லது கப்பலேறுவதற்காகவோ அல்லவே அல்ல. நெல்லுக் கிறைக்கிற தண்ணீர், புல் முதலிய பூண்டுகளுக்கும் உபயோகமாவது போலவும், பழத்திற்காக வைக்கும் விருக்ஷம் நிழல் முதலியவற்றிற்கும் உபயோகமாவது போலவும், புத்தியின் அபிவிருத்திக்காகப் படிக்கப்படும் கல்வி உத்தியோகம் முதலியவற்றிற்கும் சாதனமாகிறதே தவிர படிப்பதற்கு உத்தியோக மட்டுங் காரணமென்று சொல்வது குல்லாவுக்காகத் தலையே யல்லாமல் தலைக்காக குல்லா அல்லவென்று சொல்வதற்குச் சமானமா யிருக்கின்றது.

பெண்கள் கல்வி கற்பதினால் அவர்களுக்குப் பதிவிரதா தர்மம் என்னும் வழியை நீதி தவறாது முன்னோர்கள் நடந்துகொண்டதைக் கேட்டும் வாசித்தும் அதன் வழியை பின்பற்றுவதற்கும்,

---

உண்மையும், அதை ஆசிப்பவர்களும், தேடுபவர்களும், கண்டுபிடிப்பவர்களும் வேண்டும். நாட்டில் சிதறிக்கிடக்கும் மனோசக்திகளை ஒன்றுசேர்த்து, ஜீவாணுவின் மத்தியில் நியூக்ளியஸ் இருப்பது போல சர்வகலாசாலை வாழ்வின் நடுநாயகமாய் விளங்க வேண்டியதென்பதை உணர வேண்டும்,

(தொடரும்.)

புருஷ பக்தியும், நல்ல தியாக புத்தியும், தெய்வ பக்தியும் உண்டாகுமே தவிர, அவர்கள் ஒருநாளும் துர்க்குணமான எண்ணங்களுக்குப் பாத்திரமாக மாட்டார்களென்பது உலகம் ஒப்பும் உண்மையே.

பெண்ணுலகமென்றால் அது ஆடவர்களால் ஒரு சாதாரணப் பொருளாகவும் இன்பமளிக்கும் இயந்திரமாகவும் கருதப்படும் வரை தேச முன்னேற்றம் அடைதல் பகற் கனவன்றோ? நாகரீக வாழ்க்கையில் பெண்கள் அடிமை வாழ்க்கையில் வீழ்த்தப்பட்டுத் திறமையற்றுப் பேசும் பதுமைகளாக இருக்கின்றார்களே அன்றி, முற்காலத்தில் அவர்கள் புத்தி பலமும், தேக பலமும், கல்வியறிவும், சுயத் தீர்மானமும், தேசப் பற்றும் கொண்டு சிறப்புடன் வாழ்ந்தார்கள் என்பது நினைக்குங்கால் நமது முன்னோர்களின் சீரிய ஒழுக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அத் தாய்மார்களின் கல்வியறிவு மூலகாரணமாயிருந்து வந்ததென்பதை நன்கறியலாம்.

ஜீவோற்பத்தி காலத்தில் தாயின் மூலமாக ஏற்பட வேண்டிய நல்லறிவை மனிதன் அடையப்பெறாது போயின், அச் சென்மம் உபயோகமுள்ளதாகாது. தேசமென்றும், தேச ஊழியமென்றும், தேச முன்னேற்றமென்றும், தேச விடுதலையென்றும் பெரும் கூச்சல் போட்டு கும்பல் கும்பலாய்த் திரிவதால் மட்டும் தேச முன்னேற்றமடைய முடியுமா? தாயிடத்தில் நற்புத்தி, நல்லெண்ணம், நல்ல தேசப் பற்று, நல்ல சாருண்யம், நல்ல ஒற்றுமை முதலியன பெற்றிருப்பார்களாகில், இவ்வுயர் குணங்களைப் பின்பற்றி அத் தாயின் வயிற்றில் பிறந்த மக்களும் மேன்மையுடன் வாழ்ந்து நம் தேசத்திற்கு பெரும் பயனைத் தேடுவார்களென்பது திண்ணம். பெண் கல்வியையடிப்படையாகக் கொண்டுள்ளதென்பதை நம்மவர் அறிந்துகொள்ளும் காலமே தேசத்திற்கு நற்காலமாகுமென்பதை ஞாபகமூட்டுகின்றேன்.

தற்கால கல்வியால் விளையும் தீமைகள் கணக்கிலடங்கா. தற்கால மாணவ மாணவிகளுக்குத் தாய் பாஷையில் நன்றாகப் பேசத் தெரியாது; தாய் பாஷையை அறவே மறந்து விடுகிறார்கள்; மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் அன்னிய பாஷை வெகு சிரத்தையுடன் கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஒரு இந்தியன் சுமாராக ஆங்கிலம் பேசவும் எழுதவும் தெரிய வேண்டுமானால், சுமார் 10 வருஷமாகிலும் அவசியம் படிக்க வேண்டும். ஆங்கிலப் படிப்புக்கென அவன் வயதில் பாதியைச் செலவிடுகிறான். இப் பத்து வருஷத்திற்கும் நம் தாய்நாட்டுக் கல்வியை கற்றார்களே யானால், நம் பாரத நாட்டில் பல்லாயிரக் கணக்கான புலவர்களும், புலவிகளும் தோன்றியிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நமது நாடும் வானே

# ஜட்ஜ் முத்துசாமி அய்யர்.

ஜனாப் M. K. M. மீரான் அவர்கள்.

நம் தென்னாட்டில் திருவாரூர் ஸர். முத்துசாமி அய்யரவர்களைப் பற்றிக் கேள்விப்படாதார் யார்? முதன் முதல் சென்னை ஹைகோர்ட்டு நீதிபதி ஸ்தானத்தை யடைந்து, பிரிட்டிஷ் இராஜாங்கத்தின் உயர்ந்த உத்தியோகங்கட்கு இந்தியரும் தகுதியுடையாரென்பதை இற்றைக்குச் சற்றேறக்குறைய அறுபது வருடங்கட்கு முன்னமேயே எடுத்துக் காட்டிய இந்தியப் பெரியார் இவரே. இவர் தரித்திர மிக்கதோர் ஏழைப் பிராமண குடும்

---

ரும் மெச்சத்தக்க சீரும் சிறப்பும் பெற்றிருக்குமென்பதில் ஐயமுண்டோ?

ராஜிய விஷயத்திலாகட்டும், சமூக விஷயத்திலாகட்டும் அவர்களது உதவியின்றி எவ்வித முன்னேற்ற மேற்படாதென்பது உண்மையான விஷயமாகும். ஒரு சமூகம் தேச பக்தியிலோ, தெய்வ பக்தியிலோ, வீரத்திலோ, வேறெந்த விஷயத்திலோ முன்னேற்றமடைய வேண்டுமாகில், அந்தச் சமூகத்தைச் சேர்ந்த சகோதரிகளின் உதவிதான் பிரதானமானது. அவர்களது ஊக்கத்தினால்தான் ஒரு சமூகத்தைப் பல விதங்களிலும் முற்போக்கில் கொண்டுவரலாம். அவர்களது உபதேசத்தினால்தான் தேசத்திலுள்ள வாலிபர்களை வீரர்களாக்கலாம்; அவர்களது முயற்சியினால்தான் அடிமைப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் இப் பாரத தேசத்தை சுதந்திர நாடாகச் செய்யலாம். அவர்களுடைய சக்தி அபாரமானது. அதற்கு ஒரு எல்லை இல்லை. ஆகவே பெரியோர்களே! பெண்களிடையே அவர்களை மேம்படுத்தக்கூடிய கல்வியைப் பரவச் செய்தாலன்றி தேசத்தில் சமத்துவம் சகோதரத்வம் நிலை பெறாது; ஊக்கமும் உற்சாகமும் வளரா; ஒற்றுமை பெருகா; வேற்றுமை நீங்கா எனவே இவ்வித உண்மையைச் சிறுவர் முதல் பெரியார் வரை அறிந்து அக் காரியத்தில் ஈடுபட்டால், அக் கல்வியை பரவச் செய்தால், மறுக் கணத்தில் தேசம் கண்விழிக்குமென்பதில் ஏதாவது சந்தேக முண்டோ?

பத்தில் பிறந்தவர்; ஆரம்பத்தில் கிராமக் கணக்கப்பிள்ளை யொருவரிடம் ஒரு ரூபாய் மாதச் சம்பளத்தில் வேலை பார்த்தவர்; சொந்தத்தில் விளக்கு வைத்துக்கொண்டு படிப்பதற்குப் போதிய பணமில்லாது கோயில் விளக்கில் படித்தவர். இவ்வாறு வாழ்க்கையின் ஆரம்பத்தில் கஷ்டப்பட்ட சாதாரண முத்துசாமி வாழ்க்கை யிறுதியில் ஸர். முத்துசாமி அய்யராய் ஆனதுடன் சென்னை ஹைகோர்ட் பிரதம நீதிபதி ஸ்தானத்தை யடைந்து, அதனைச் சிறப்புடன் நிர்வகித்துப் பொது மக்களாலும் கவர்ன்மெண்டாராலும் நன்கு மதிக்கப்பெற்று விளங்கினார். இதற்கெல்லாம் இவரது புத்தி நுட்பமும் விடாமுயற்சியும் உழைப்புமே காரணம் எனச் சொல்லவும் வேண்டுமோ!

அய்யரவர்களது காலத்திற்கும் இக் காலத்திற்கும் மிக்க வித்தியாசம் உள்ளது. அய்யரவர்களுக்கிருந்த கஷ்டமெல்லாம் பொருளின்மையே. இக் காலத்தில் பணக் கஷ்டம் ஒருபுறமிருக்கப் பல துறைகளிலும் கல்வி கற்ற தேர்ச்சியாளர் நம் நாட்டில் கணக்கற்று மலிந்துகிடக்கின்றனர். இவர்கட்கிடையில் அய்யரவர்களைப் போல் முன்னேறுவது மிகக் கஷ்டமே யெனினும், இவரது உயரிய வாழ்க்கை நம் நாட்டு இளைஞர்க்கு ஒரு வழிகாட்டியாய் இருப்பதுடன் அவர்கட்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஊட்டுமென்பதிற் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. எனவே, இப் பெரியாரது சரித்திரத்தை நம் தமிழ் நாட்டு இளைஞர் யாவரும் உணருதல் அத்தியாவசியம். இவண், இவர்தம் பிறப்பு வளர்ப்பை (ஆரம்ப வாழ்க்கையை) மட்டும் குறிப்பிடுவாம்.

“தென்னாட்டு நெற் களஞ்சியம்” எனப் பெயர்பெற்றிலங்குவதும், நீர்வளம் நிலவளம் மிக்கதுமான தஞ்சாவூர் ஜில்லாவில், திருவாரூருக்கு அருகாமையில் இரண்டு மைல் தூரத்தில் உச்சுவாடி என்றொரு கிராமம் உள்ளது. அவண், அந்தண மரபைச் சார்ந்தோர் ஏழைப் பழங்குடியில், 1832-ஆ ஜனவரிமீ 28உ முத்துசாமி அவதரித்தார். இவரது பிதா வெங்கிட்டராம சாஸ்திரிகள் ஆவர். அவர் நற்குடியாளர்; நற்குணாளர்; ஆயின், பரம ஏழை. நிற்க, அவருக்குக் கண் பார்வை குன்றியிருந்தது. ஆதலின், ஏதாவதொரு தொழிலில் ஈடுபட்டுப் பொருளீட்ட வியலாது, அவர் மிகக் கஷ்டத்துடன் அண்டை வீட்டார் இரக்கப்பட்டு உவந்தளித்து வந்த உதவியின் பேரில் தனது குடும்பத்தைப் போஷித்து வந்தார். இவரது மனைவியாரோ, ஒப்பற்ற உத்தமி; ஹிந்துக் குடும்பப் பெண்களுக்கு வேண்டிய நற்குண நற்செய்கைகள் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற பெண் சிரோன்மணி. இவளது அரும் பெருங் குணங்களே, முத்துசாமி அய்யரது முன்னேற்றத்திற்கு



மூலகாரணம் எனக் கூறினும் மிகையாகாது. முத்துவைக் கட்டாயம் கஷ்டப்பட்டாவது படிக்கவைக்க வேண்டுமென்பது இவளது அபிலாஷை. அப்பொழுது உச்சுவாடி என்னும் கிராமத்தில் பள்ளிக்கூடம் கிடையாது. திருவாரூரில்தான் பள்ளிக்கூடம் இருந்தது. எனவே, முத்துவைப் படிக்கவைக்க வேண்டுமென்னும் எண்ணத்தால், தனது மனைவியின் கட்டாயத்தின் பேரில் வெங்கிட்டராம சாஸ்திரிகள் ஒருவாறு மனந் துணிந்து உச்சுவாடியினின்றும் நீங்கித் தனது குடும்பத்துடன் திருவாரூரிற் குடியேறினார்.

அப்பொழுது, ஆங்கிலக் கல்வி, ஆங்கில நாகரீகம் நம் தென்னாட்டில் பரவாத காலம். இக் காலத்தில் உயர்ந்த கட்டிடங்களில் பெஞ்சு, நாற்காலிகள் போட்டுப் பள்ளிக்கூடங்கள் நடைபெறுவதைப் போல் அந் நாளில் பள்ளிக்கூடங்கள் நடைபெறவில்லை; சாதாரண திண்ணைகள், தாழ்வாரங்களிலேயே நடத்தப்பெற்று வந்தன. இவ்வித திண்ணைப் பள்ளிக்கூட மொன்றினில் சேர்ந்து சம்பளமில்லாமல் முத்து படித்து வந்தார். இந் நாளில் சில சமயங்களில் இவருக்கு ஒருவேளைச் சோறு மட்டுமே கிடைக்கும் எனினும், படிப்பில் ஊக்கம் சிறிதும் குன்றாமல் முத்து தன் பாடங்களைச் செவ்வனேயாய்ப் பயின்று சின்னாட்களில் தமிழில் நன்றாய் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார். “விளையும் பயிர் முளையிலே தெரியும்” என்னும் மூதுரை வெற்றுரையாமோ!

குடும்பத்தில் நாளுக்கு நாள் பணக் கஷ்டம் அதிகரிக்கவே, முத்து வெகு நாள் பள்ளியில் இருக்க முடியாது, 1840-ம் வருடம் படிப்பை நிறுத்தி அவ்வூர்க் கிராமக் கணக்கப்பிள்ளை யிடம் ஒரு ரூபாய் மாதச் சம்பளத்தில் வேலையில் அமர்ந்தார். வேலை பழகுவதே முத்துசாமியது நோக்கமாதலின், சம்பளக் குறைவை பொருட்படுத்தாது அவர் அதை மனத் திருப்தியுடன் பெற்று மகிழ்ந்தார். இக் காலத்தில் இவர் தன் எஜமானராகிய கணக்குப்பிள்ளை யவர்களிடம் மிகக்கீழ்படிந்து அவர் இட்ட வேலைகளைச் செவ்வனே செய்து வந்தார். தன் எஜமானரது வேலைகளே யன்றி எஜமானர் வீட்டுப் பெண்கள் இவரைச் செய்யும்படி ஏவிய ‘எடு’ ‘பிடி’ வேலைகளையும் மனக் கசப்பு சிறிதுமின்றிச் செய்து வந்தார். கூடிய சீக்கிரம் தனது விடா முயற்சியாலும் புத்திக்கூர்மையாலும் கணக்கு வேலைகள் யாவையும் நன்றாய்ப் பழகிக்கொண்டதுமன்றி தன் எஜமானர் வேலை யனைத்தும் தானே பார்த்து வந்தார்.

இஃதிவ்வாறாகக் கணக்குப்பிள்ளை முத்துவை அடிக்கடித் தாலுகாக் கச்சேரிக்குக் கூட்டிக்கொண்டு போவது வழக்கம். ஆங்குத் தனது எஜமானர் இட்ட கணக்கு வேலைகளைச் செய்வதுடனில்லாமல் மற்றைய கிராம உத்தியோகஸ்தரது கணக்குகளையும்

ஆராய்ந்து அவர்கட்கு வேண்டிய உதவியையும் செய்து, அவர்தம் நன்மதிப்பைப் பெற்று வந்தார். இவ்வாறு முத்து இடைவிடாது சதா உழைத்து வந்தார். தாலுகாக் கச்சேரியில் இவரது உழைப்பின் திண்மையைப் போற்றிப் புகழாதாரிலர். இவரது உழைப்பின் வன்மையே இவர் உயரிய நிலையை அடைதற்குப் பெரிதும் உதவியாய் இருந்தது. உழைப்பில்லாமல், ஒருவன் சிறந்த அறிவாளியாகவோ அல்லது உலகத்தில் எத்துறையிலுஞ் சிறந்தவனாகவோ, முற்போக்கடையவோ இயலாதன்றோ?

அக் காலத்தில், திருவாரூர் தாசில்தாராய் இருந்தவர் முத்துசாமி நாயக்கர் ஆவர். அவர் உயர் குடிப் பிறப்பாளர்; நற்குணர்; ஈகைக் குணமுடைய பெரியார். அவரே, முத்துசாமி அய்யரது கல்வி அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் மூலகாரணம்.

நிற்க, ஒருநாட் காலை, தாசில்தார் தனது வீட்டில் இருக்கும் பொழுது கிராம உத்தியோகஸ்தரொருவரிடமிருந்து, அக் கிராமத்திற் கருகாமையில் ஓடும் ஆற்றின் கரை வெள்ளப் பெருக்கால் அறுபட்டு உடைந்து போனதாக ஒரு ரிப்போர்ட்டு வந்தது. உடனே தாசில்தார் தனது சேவகனை விளித்து தாலுகாக் கச்சேரிக்குச் சென்று குமஸ்தா ஒருவரைக் கூட்டி வரும்படி கட்டளையிட்டார். சேவகன் ஓடிப்போய்க் கச்சேரியிற் பார்த்தான்; குமஸ்தா ஒருவரையும் காணோம். முத்துசாமி மாத்திரம் ஒரு மூலையில் கணக்கெழுதிக்கொண்டிருந்தார். சேவகன் முத்துசாமியிடம் சங்கதியைத் தெரிவித்து அவரைத் தாசில்தாரிடம் அழைத்துச் சென்றான். முத்துவைப் பார்த்ததும் தாசில்தாருக்குண்டான கோபத்திற்கோர் அளவில்லை. "இந்தப் பையல் வந்தென்ன" எனத் தாசில்தார் சேவகனைக் கடிந்து பேசினார். ஆனால் முத்துவோ தைரியத்தை விடாது இட்ட கட்டளை எதுவானாலுஞ் செய்து முடிக்கிறேன் எனத் தாசில்தார் முன் வணங்கிக் கூறி நின்றார். முத்துவின் தைரிய வார்த்தைகளைக் கேட்டுத் தாசில்தார் திடுக்கிட்டுப் போனார். முத்துவிடம் ரிப்போர்ட்டைக் கொடுத்து அதைக் கொண்டுபோய் தாலுகாக் கச்சேரி குமஸ்தாவிடம் காண்பித்து அதற்குச் செய்ய வேண்டியதைச் செய்யும்படி கட்டளையிட்டார். முத்துசாமி ரிப்போர்ட்டை எடுத்துக்கொண்டு குமஸ்தாவிடங் கொண்டுபோகவில்லை. தானே அதைப் பன்முறையும் படித்துப் பார்த்தார்; முக்கியமான இடங்களில் பென்ஸிலால் மார்க்குச் செய்து கொண்டார். பின்னர் முத்து வெளியில் வந்து அந்த ரிப்போர்ட் கொண்டுவந்த தண்டக்காரனிடம் வெள்ள உடைப்பின் சமாச்சாரம் முழுவதையும் அதற்கென்ன செய்ய வேண்டுமென்பதையும் விசாரித்துத் தெரிந்துகொண்டதன் பின், ஆற்றின் கரை



உடைப்பை எவ்வாறு மராமத்துச் செய்ய வேண்டுமென்பதையும், மராமத்துச் செய்வதற்குரிய சாமான்கள் எங்குக் கிடைக்குமென்பதையும், அவற்றின் கிரய விபரத்தையும் விளக்கமாய்த் தெரிவிக்கும் உத்தரவொன்றை கிராம அதிகாரிக்கு எழுதிக் கையெழுத்திற்குத் தாசில்தார் முன் வைத்து நின்றார். பையன் என்ன எழுதியிருக்கப் போகிறானென அலட்சியமாய் நினைத்துத் தாசில்தார் முத்துவைப் பார்த்து உத்தரவை மேஜையின் மேல் வைத்துச் செல்லும்படி சொன்னார். ஆனால், முத்துவோ தாசில்தாரை வணங்கி அது மிக அவசரமான காரியம் என்றும் காலதாமத மன்னியில் உடனே அந்த உத்தரவை அனுப்பி வைக்க வேண்டுமென்றும் வணங்கிக் கூறுதலும், தாசில்தார் அதைச் சிறிது படித்துப் பார்த்தார். உத்தரவு மிகச் சரியாக எழுதப்பட்டிருக்கவே, தாசில்தார் பிரமித்துப் போனார்; யாதொன்றும் பேசாமல் உத்தரவிற் கையெழுத்திட்டு அதனை அனுப்பி வைக்கும்படி முத்துவுக்குக் கட்டளையிட்டார். அவ்வண்ணமே, முத்து ஆபீஸ் காப்பிக்காக நகலொன்று தயார் செய்துகொண்டு வெளியிற் காத்திருந்த தண்டக்காரன் வசம் உத்தரவைக் கொடுத்தனுப்பி வைத்தார். யாதொன்றும் திருத்தாமல் தானெழுதிய உத்தரவில் தாசில்தார் கையெழுத்திட்டதால் முத்து அளவற்ற மகிழ்ச்சியடையினும், தானெழுதியதில் எதாவது தவறுதல்களிருக்கலாமென நினைத்து, அதனை ஹெட் குமஸ்தாவிடங் காண்பிக்க வேண்டுமென்றும் நோக்கத்தால் முத்து தாசில்தாரிடம் விடை பெற்றதும் வீட்டுக்குப் போகாமல், கச்சேரிக்குச் சென்றார். ஹெட் குமஸ்தாவோ, முத்து எழுதிய உத்தரவைப் பார்த்து மிகச் சரியாய் இருக்கிறதென்று முத்துவைப் பாராட்டிப் புகழ்ந்து பேசினார்; ஆபீஸ் காப்பியையும் தாக்கல் செய்துகொண்டார். இதற்குள் தாசில்தார் கூப்பிடுவதாகச் சொல்லிச் சேவகன் ஹெட் குமஸ்தாவைக் கூட்டிக்கொண்டு சென்றான். குமஸ்தா போனதும் தாசில்தார் அவரிடம் அன்று காலை வந்த ரிப்போர்ட்டையும் அது விஷயமாய் உத்தரவு அனுப்பியாய் விட்டதாயும் ஆபீஸ் காப்பி நகல் முத்துவிடம் இருப்பதாயும் கூறினார். அதைக் கேட்டு குமஸ்தா தான் அந்த உத்தரவைப் படித்ததாகவும் அது மிகச் சரியாயிருப்பதாகவும் தான் ஆபீஸ் காப்பியைத் தாக்கல் செய்தாய்விட்டதாகவுங் கூறினார். குமஸ்தா சொல்லியதைக் கேள்வியுற்றதும் தாசில்தாருக்கு முத்துவின் மேல் உண்டான அன்பு சொல்லத் தரமன்று.

இஃதிவ்வாறாக, மற்றொரு தடவை, ஒரு பிரபல மிராசுதார் தாலுகாக் கச்சேரிக்கு வந்து தாசில்தாரிடம் தான் கட்ட வேண்டிய நிலத் தீர்வையின் பாக்கித் தொகை என்ன என வினவினார். அச் சமயம் ரிவினியூ கிளர்க் ஆபீஸில் இல்லாததால், அம் மிராசுதாரை

மறுநாள் கச்சேரிக்கு வந்து ரிவினியூ கிளர்க்கிடங் கேட்டுப் போகும்படி தாசில்தார் சொன்னார். அச் சமயம் தன் எஜமானரது பழைய கணக்குகளைப் பதிவு செய்துகொண்டிருந்த முத்து தாசில்தார் முன் வணங்கி நின்று, ரிக்கார்டு, கணக்குப் புஸ்தகம் முதலியவை யொன்றையும் பாராது அம் மிராசுதார் கட்ட வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு என்பதை நிர்ணயமாகக் கூறினார். கணக்குச் சரியாய் இருக்குமோ இருக்காதோ வென்று தாசில்தாருக்குச் சந்தேகம். எனினும் தாசில்தார் மிராசுதாரிடம் ஒன்றும் பேசாது அவரை அனுப்பிவிட்டுப் பின்னர் ரிவினியூ கிளர்க் வந்தவுடன் முத்து சொன்ன கணக்கின் விபரம் சரியா என வினவிய போது, ரிவினியூ கிளர்க் கணக்குகளைப் பார்த்து கணக்குச் சரிதான் என ஒப்புக்கொண்டார். என்னே, முத்துவின் ஞாபக சக்தி இருந்தவாறு! அன்று தொட்டு முத்துவின் மேல் தாசில்தாருக்கு அளவற்ற அன்புண்டாயிற்று; முத்துவின் நற்காலமும் உதயமாயிற்று.

முத்துவுக்கு இங்கிலீஷ் படிக்க வேண்டுமென்னும் அவா அதிகம். முத்துசாமியது வீட்டிலிருந்து கச்சேரிக்குப் போகும் வழியில் திண்ணைப் பள்ளிக்கூடமொன் றிருந்தது. அப் பள்ளியில் பையன்களுக்கு இங்கிலீஷ் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தது. தான் கச்சேரிக்குப் போகும் பொழுது, பையன்கள் இங்கிலீஷ் கற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்து முத்து தனக்கு இங்கிலீஷ் கற்றுக் கொள்வதற்குச் சாதனமில்லாமற் போய்க் கணக்கெழுதுவதிலேயே தனது காலம் வீணாகக் கழிகிறதே யென நொந்துகொள்வது வழக்கம். எனினும் அவர், நற்காலமும், துற்காலமும் ஒரு மனிதன் வாழ்க்கையிற் சகஜம்; வாழ்விலுந் தாழ்விலும் முயற்சியைக் கைவிடா துழைத்தலே அறிவாளிகளது இயற்கை எனத் தன் மனத்தைத் தேற்றிக்கொள்வார். தினந்தோறும் தான் தாலுகாக் கச்சேரிக்குச் செல்லும்போது மேற் சொன்ன திண்ணைப் பள்ளிக் கூடத்தின் வெளியில் நின்று உபாத்தியாயர் சொல்லிக் கொடுக்கும் இங்கிலீஷ் பதங்களை உற்றுக் கேட்டுப் படித்துக்கொள்வது வழக்கம். ஒருநாள் அப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் முத்துவைப் பார்த்து "நீ யார்? உனது பெற்றோர்களிடஞ் சொல்லிப் பள்ளிக் கூடத்திற் சேர்ந்து படிக்கிறதுதானே" என்று கூறினார். தனது எளிய நிலைமையைச் சொல்ல மனம் பொறாது முத்து ஒன்றும் பேசாமற் போய்விட்டார். மற்றொரு நாள் உபாத்தியாயர் முத்துவைப் பார்த்து "பள்ளிக்கு வெளியே நிற்க வேண்டாம்; உள்ளே வந்து உட்காரலாம்; அதனாற் பாதகமில்லை" என்று கூறினார். பள்ளிக் கூடத்திற் சேராமல் உள்ளே போய் உட்காருதல் முறையல்லவென்ற எண்ணத்தால் முத்து அதற்கொப்பவில்லை. எனினும்,

197894

# ஆனந்தப் பூங்காவனம்.

## அச்சமில்லை!

(கலை விநோதன்)

மெதினா நகரிலிருந்து ஒருவன் மெக்காவுக்குப் போய்க்கொண்டிருந்தான். வழியில் பிளேக் தேவதையைச் சந்தித்தான்.

"தேவியே! நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டான்.

---

தான் கச்சேரிக்குப் போகும்போதெல்லாம் பள்ளிக்கூடத்திற்கு வெளியில் நின்று பாடங்களை உற்றுக் கேட்கும் வழக்கத்தை முத்து நிறுத்தவில்லை. நிற்க, உபாத்தியாயர் ஒருநாள் தாசில்தார் வீட்டிற்குச் சென்றிருந்தார். அவ்வமயம் இங்கிருந்த முத்துவைத் தாசில்தார் உபாத்தியாயரிடங் காட்டி அவரது புத்தி நுட்பத்தைப் பற்றி எடுத்துக் கூறினார். அதைக் கேட்டு, உபாத்தியாயர் படிப்பில் முத்துவுக்குள்ள ஆர்வத்தையும் கச்சேரிக்குப் போகும்போதெல்லாம் பள்ளிக்கூடத்திற்கு வெளியில் நின்று பாடங்களை உற்றுக் கேட்டுக்கொண்டிருக்கும் வழக்கத்தையும் எடுத்துச் சொல்லத் தாசில்தாருக்கு முத்துவைப் படிக்க வைக்க வேண்டுமென்னும் எண்ணம் உதயமாயிற்று. இஃதிவ்வாறாக, இங்கிலீஷ் முதற் புத்தகம் படித்து வந்த தாசில்தார் வீட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்து முத்துவும் ஓய்வு நேரங்களில் இங்கிலீஷ் படித்து வந்தார். ஒருநாள் தாசில்தார் அப் புத்தகத்தில் ஒரு பகுதியை நிர்ணயஞ் செய்து அந்த அளவில் அவர்கள் யாவரையும் பரீக்ஷிப்பதாகக் கூறினார். குறித்த காலத்தில் அப் புத்தகத்தில் நிர்ணயஞ் செய்திருந்த அளவு கூடத் தாசில்தார் வீட்டுப் பிள்ளைகள் ஒருவராலும் படிக்க முடியவில்லை. ஆனால், முத்துவோ நிர்ணயஞ் செய்திருந்த அளவுடனில்லாமல் அப் புத்தகம் முழுவதையும் படித்து முடித்தார். இவ் விஷயம் தாசில்தாருக்கு முத்துவின் மேலிருந்த அன்பைப் பன்மடங்கதிகப்படுத்திற்று. தன் பராமரிப்பில் முத்துவைப் படிக்க வைக்க வேண்டுமெனும் பிரியம் அவருக்குப் பெரிதும் உண்டாகி முத்துவைப் படிக்கவைக்கிறார்.

(இன்னும் வரும்.)

"நான் மெதினாவில் என் திருவிளையாடல்களைச் சிறிது காட்டப் போகிறேன்" என்று தேவி பதில் சொன்னாள்.

"நீ எத்தனை பேர்களைக் கொல்லப்போகிறாய்? தயவு கூர்ந்து முன் கூட்டியே எனக்குத் தெரிவிக்கலாமா?" என்று பிரயாணி பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டான்.

தேவி "பதினாயிரம் பேர்களை மறு லோகத்திற்கு நான் அனுப்பப் போகிறேன்" என்று அருளிச் செய்தாள்.

* * * * *

நான் வாரங்கள் ஆயின; வாரங்கள் மாதங்களாயின. மெதினாவில் பிளேக் தேவியின் திருவிளையாடல் முடிவுற்றது. சுமார் முப்பதினாயிரம் பேர்வழிகள் மெதினாவிலிருந்து மறுலோகத்தில் புதுக்குடி ஏறினார்கள் என்ற செய்தி மெக்காவிலிருந்த நமது பிரயாணியின் செவிகளில் விழுந்தது. பிளேக் தேவி வாக்குத் தவறிவிட்டாள் என்று நினைத்து அவன் பெரிதும் வருந்தினான்.

* * * * *

பிரயாணி இப்பொழுது மெக்காவிலிருந்து மெதினாவுக்குத் திரும்பினான். வழியில், தன் திருவிளையாடலை முடித்து மீண்டு வந்த பிளேக் தேவியைக் கண்ணுற்றான்.

"தாயே! இப்படி வாக்குத் தவறலாமா? இப்படிப் பொய் சொல்லலாமா?" என்று மனம் புழுங்கி முறையிட்டுக் கொண்டான்.

பிளேக் தேவதை சிரித்துக்கொண்டு, "பக்தா! நான் உனக்குக் கொடுத்த வாக்கை மீறவே யில்லை. நான் பதினாயிரம் பேர்களைத் தான் கொன்றேன். பாக்கி இருபதினாயிரம் பேர்களையும் கொன்றவர்கள் என்னுடைய அக்காள் பய தேவதை என்று நீ அறிவாயாக" என்று சொல்லி மறைந்தாள்.

* * * * *

பிளேக் தேவதையைக் காட்டிலும் கொடுமை வாய்ந்த பய தேவதையைக் கண்டு அஞ்சாதவர் யார்? இவளைக் கண்டு முடி மன்னர்களும் முடிசாய்க்கிறார்கள். மதிமந்திரிகளும் மதிகலங்குகிறார்கள். பேர்பெற்ற ராஜதந்திரிகள் எல்லாம் பய தேவதையின் சந்நிதியிலே நடுநடுங்கித் தலை வணங்குகிறார்கள். வர்த்தக மன்னர்களும் பெரிய பெரிய பாம்பரைப் பிரபுக்களும் பய தேவதைக்குத் தங்கள் நெஞ்சையே காணிக்கையாகக் கொடுக்கிறார்கள்.

போர்க்களத்திலே குண்டுகளுக்கு நெஞ்சைத் திறந்து காட்டும் போர் வீரர்களும், நோய் பொருள் நஷ்டம் அன்பிற்குரியவர்களின் மாணம் முதலிய நிகழ்ச்சிகளுக்குப் பெரிதும் பயப்படுவதுண்டு.



பெரிய பெரிய கஷ்டங்களைத் தாங்கக் கூடியவர்களும் வாழ்க்கையில் விளையும் சிறிய கஷ்டங்களுக்கு அஞ்சுவதுண்டு. நண்பர்களையும் எப்படிப்பட்ட பந்துக்களையும் அன்பிற்குரிய மனைவி மக்களையும் கூட இழப்பதற்கு அஞ்சாத லோபியும் தன் பொருளை இழப்பதற்கு அஞ்சுகிறான். கடவுளுக்கும் அஞ்சாத விஞ்ஞான சாஸ்திரியும் பய தேவதைக்குச் சலாம் செய்து நிற்கிறான். உலகம் முடிந்துவிடுமென்றும், சூரியன் குளிர்ந்துவிடுமென்றும், சந்திரன் விழுந்துவிடப் போகிறதென்றும் அவன் பயந்தும் பயப்படுத்திக்கொண்டுமிருக்கிறான்! இப்படிப்பட்ட உலகத்திலே, ஒருவிதமான பயமும் இல்லாதவன் பக்தன் ஒருவனே. வானமே இடிந்து விழுந்தாலும் அவன் அஞ்சுவதில்லை. பூகம்பத்தால் உலகமெல்லாம் அழிந்துவிடும் நிலைமை ஏற்பட்டாலும் பக்தன் பயப்பட மாட்டான். பெரிய மலைகள் நிலைகுலைந்து தலை தடுமாறினாலும் இன்னும் இவற்றைக் காட்டிலும் அதி பயங்கர விபத்துக்கள் ஏற்பட்டபோதிலும், பக்தர்களுக்கு எவ்விதமான பயமும் ஏற்படுவதில்லை.

இப்படிப்பட்ட பக்தர்களைக் குறித்து,

"வானம் துளங்கிலென்? மண்கம்ப மாகிலென்?
மால் வரையும்
தானம் துளங்கித் தலைதடு மாறிலென்?
தண் கடலும்
மீனம் படிலென்? விரிசுடர் வீழிலென்?
வேலை நஞ்சுண்(டு)
ஊன மொன்றில்லா ஒருவனுக்(கு) ஆட்பட்ட
உத்தமர்க்கே!"

என்று தேவாரம் கூறுகிறது.

பக்தர் எல்லாப் பொருள்களும் கடவுளுடையன என்று உணர்ந்திருக்கிறார். அவர் தன்னையும் கடவுளுடைய பொருளாகவே கருதுகிறார். அப்படி யிருக்க, பூமியைப் பற்றியாவது, வானத்தைப் பற்றியாவது, கடலைப்பற்றியாவது சந்திர சூரியர்களைப் பற்றியாவது அவர்கள் ஏன் பயப்பட வேண்டும்? கடவுளின் அடியார்கள் பய தேவதைக்கு அடியாராவரோ? இரண்டு எஜமானருக்கு ஊழியம் செய்வது பக்தர் கொள்கையன்று.

இவ்விதமான வீர வாழ்க்கை வாழும் பக்தமணிகள்,

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்திலிடர்ப் படோம் நடலை இல்லோம்

ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை"

என்றவாறு அச்சம் துறந்த ஆனந்தத்தை என்றும் அனுபவிப்பர்.

இப்படிப்பட்ட பக்தமணிகள் முன்னாளில் நமது நாட்டின் தவப்பயனாகத் தோன்றினார்கள். சமீப காலத்திலும் இராம கிருஷ்ண பரமஹம்ஸர் தோன்றினார். பக்தர்கள் சமயத்துறை ஒன்றிலேதான் பாடுபடுவார்கள் என்பதுமில்லை. காலவகையால் இன்று வேறு துறைகளிலே அஞ்சாது இறங்கி வேலை செய்யும் காந்தி யடிகளும் ஓர் உண்மையான பக்தரே யாவர். இத்தகைய பக்தமணிகளுக்கு இன்றியமையாத தெய்வீக குணங்களில் முதன்மையான ஸ்தானம் பெறுவது அச்சமின்மை அல்லது அஞ்சாமையே என்று பகவத்கீதை கூறுகின்றது.

---

# பத்திரிகைகளை ஆதரிக்க வேண்டியவர்கள் யார்?

திரு. R. S. ஸ்ரீகண்டன் அவர்கள், M. A.

"பாரதி" இதழில், பத்திரிகைகளைப் பற்றிய வியாசத்தில், தமிழ் நாட்டுச் செல்வவந்தர்களைப் பற்றிக் குறை கூறி, அவர்கள் முன்வந்து ஆதரிக்காமையால்தான் பத்திரிகைகள் கஷ்ட தசையி லிருப்பதாக எழுதி யிருந்ததைப் படித்தோம். அந்த அபிப்பிராயந் தான் இக் கட்டுரை எழுதப்படுவதற்குக் காரணமா யிருக்கிறது.

அந்த அபிப்பிராயம் முற்றிலும் தப்பு என்று சொல்ல வரவில்லை; முற்றிலும் சரி இல்லை என்றுதான் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டுச் செல்வர்கள் தமிழ்ப் பத்திரிகைகளை ஆதரிப்பதென்று முன் வருவார்களானால், தமிழ்ப் பத்திரிகைகளுக்கு மட்டுமன்று, தாய் நாட்டுக்கும் தாய்ப் பாஷைக்குங்கூட நல்ல காலம் பிறந்து விட்டதாக நினைக்கலாம். ஹிந்திப் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால், பணக்காரர்களுடைய பேருதவி அவை சிறந்து விளங்



குவதற்கு ஒரு முக்கிய காரணமா யிருப்பதை நன்கு காணலாம். ஆனால் 'ஒரு முக்கிய காரணம்' என்பதையும் நன்றாக மனதிற் கொள்ள வேண்டும். ஒரு பத்திரிகை முன்னேற்றமடைய இன்னும் பல முக்கிய காரணங்களிருக்கின்றன. அவைகளிற் சில யாவை என்பது இப்பொழுது கவனிக்கப்படும்.

முதல் முதல் பணக்காரர்கள் என்னென்ன சகாயம் செய்ய முடியும் என்பதைக் கவனிப்போம்.

இப்பொழுது இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான பத்திரிகைகள் நஷ்டத்தில் வேலை செய்துகொண்டு வருகின்றன. பணக்காரர்கள் பெரிய மனது வைத்தால், இந்த நஷ்டம் சரிப்படுத்தப்பட்டுப் பத்திரிகைகள் முழுகிப் போகாமல் தப்பிப் பிழைக்கலாம்.

இதுதான் முதன் முதல் நம் மனதுக்குத் தோன்றக்கூடிய விஷயம். ஆனால் சற்று அனுபவமுள்ளவர்களைக் கேட்டால் பத்திரிகை என்பது ஒரு பெரிய வெள்ளை யானை என்றும், அதனாலுண்டாகும் நஷ்டம் மிகவும் அதிகமாக இருக்கலா மென்றும், அவ்வளவையும் இடைவிடாமல் ஏற்றுக்கொண்டிருப்பது கஷ்டமான காரியமென்றும் தெரியவரும். தவிர, இப்படிப் பெருவாரியாகப் பணத்தைக் கொடுப்பவர்களால் பத்திரிகையின் சுயாதீனம் குன்றிப் போகக் கூடுமென்றும் நினைக்க வேண்டி யிருக்கிறது. இதற்கும், பணக்காரர்கள் தாங்களாகவே பத்திரிகைகளை நடத்துவதற்கும் அதிக வித்தியாசமில்லை

அதாவது, நஷ்டத்தில் வேலை செய்கிற ஒரு தொழிலை ஏற்றுக் கொள்ளுமாறு பணக்காரர்களைக் கேட்டுக்கொள்வது போலாகிறது. இது அதிக காலம் நடக்காது. ஒன்று, அப் பணக்காரர்கள் வெகு சீக்கிரத்தில் ஏழைகளாய் விடுவார்கள்; அல்லது அத் தொழிலி லிருந்து விலகிக்கொள்வார்கள்.

இல்லை; 'அறி தொழிலோரை' ஆதரிக்கும் பொறுப்பு முன்பு அரசர்களிடத்தும் பிறகு பிரபுக்களிடத்தும் இருந்தது. இப்பொழுது பொது ஜனங்களைச் சேர்ந்ததாய் விட்டது. பொது ஜனங்கள்—சந்தாதாரர்களாகச் சேரும் பொது ஜனங்கள்தான்—பத்திரிகைகளை கைதூக்கி விடவேண்டியவர்களா யிருக்கிறார்கள்; அவர்களால் ஆதரிக்கப்பட்ட பத்திரிகைகள்தான் சுயேச்சையுடன், நஷ்டமில்லாமல் அறிவு புகட்டவல்லன.

இன்னும் சற்று யோசித்துப் பார்த்தால், சந்தாதாரர்கள்தான் பத்திரிகைகளுக்கு முக்கிய ஆதாரமென்பது நன்கு விளங்கும். அவர்களுக்காகத்தான் பத்திரிகைகள் சேவை செய்கின்றன என்பது யாவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயம். ஆகையால் பத்திரிகை

களை ஆதரிக்கும் பொறுப்பும் அவர்களைச் சேருவதுதான் எல்லாப் படியாலும் நியாயமாகும். இந்த நியாயத்தை அனுசரித்து நடக்கும் பத்திரிகைகள்தான் நீடூழி வாழ முடியும். எந்தப் பத்திரிகை மிகவும் அதிகமான சந்தாதாரர்களை யுடையதாக இருக்கிறதோ, அதுதான் மிகவும் அதிகமான சேவையைச் செய்கிறது; அதற்குத் தக்க ஆதரவையும் அடைகிறது.

ஆகையால், "பாரதி"யையும், "பாரதி" போன்ற உயர்தரப் பத்திரிகைகளையும் ஆதரிக்க விரும்புவோர், தாங்களும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து, மற்றவர்களையும் அப்படியே சேர்த்துக் கொடுப்பார்களாக. அவைகளில் மிகச் சிறந்த கட்டுரைகள் வெளிவரும் வழியைத் தேடுவார்களாக. அவைகளில் விளம்பரங்கள் அதிகரிக்கும் முயற்சிகளை எடுப்பார்களாக.

இந்தியாவில் வெளியாகும் பத்திரிகைகளில் ஏறக்குறைய எல்லாவற்றிலும், ஒரு தனிப் பிரதியின் விலையானது அதை அச்சிடும் செலவைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது. அதாவது, விற்பனையாகும் ஒவ்வொரு பிரதியும் பத்திரிகைக்கு லாபத்தைக் கொடுக்கிறது. பிரதிகள் அதிகமாக விற்க விற்க, பத்திரிகையின் செல்வம் பெருகுகிறது. ஆனால் மேல் நாட்டுப் பத்திரிகைகளைப் பற்றி இதைச் சொல்ல முடியாது. ஒவ்வொரு பிரதியாலும் நஷ்டமே யொழிய லாபமில்லை. இம்மாதிரி லக்ஷக் கணக்கான பிரதிகள் விற்கப்படுகின்றன. ஆகையால் சந்தாதாரர்களால் பெருவாரியான நஷ்டமேற்படுகிறதே யொழிய வேறொன்றுமில்லை ஆனால் இவ்வளவு நஷ்டத்துக்கும் ஈடு கொடுத்து, லாபத்தை யளிப்பவை விளம்பரங்களாகும். இம்மாதிரி சந்தாதாரர்களுக்கு நஷ்டத்துக்கு விற்பதற்குக் காரணம் பல பத்திரிகைகளுக்கும் ஏற்படும் போட்டிதான். இதனால், விளம்பரங்கள் செய்வோருக்கு லாபகரமா யிருக்கும் அளவுக்குப் பத்திரிகைகள் சந்தாதாரர்களுடைய பெரியதொரு ஜாப்தா வைத்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது; ஆனால் தங்களுடைய நஷ்டத்துக்கும் ஓரெல்லை இருப்பதற்காக, அந்த ஜாப்தாவை ஓரளவுக்கு மேல் பெருக விடாமற் குறுக்க வேண்டி யிருக்கிறது. இந்தியாவிலுள்ள பத்திரிகைகளுக்கும், மேல் நாட்டுப் பத்திரிகைகளுக்கும் என்ன வித்தியாசம்! நாம் சந்தாதாரர்கள் சேரவில்லையே என்று ஏங்குகிறோம். அவர்கள், 'போதும் போதும்! இனிச் சந்தாதாரர்கள் வேண்டாம்!' என்று நிறுத்திக்கொள்ள வேண்டி யிருக்கிறது.

எனவே, மேல்நாட்டுப் பத்திரிகைகள் தலைதூக்கி நிற்பதற்குக் காரணம் விளம்பரங்கள் என்று ஏற்படுகிறது. ஆனால் விளம்பரங்கள் செய்யம் வியாபாரிகளுக்கு முக்கிய ஆதாரம் எது? சந்தாதாரர்கள்



அவ் விளம்பரங்களைப் படித்துச் சாமான்களை வாங்குகிறார்கள். அப்படி வாங்குவதற்காக அவர்கள் படிக்கும் பத்திரிகைகளில் விளம்பரங்கள் செய்து, அவைகளை வியாபாரிகள் ஆதரிக்கிறார்கள். எனவே, ஆழ்ந்து யோசித்தால், அங்கும் பத்திரிகைகளுக்கு ஆதரவு சந்தாதாரர்களே யொழிய வேறொன்றுமில்லை என்று ஏற்படுகிறது. அவர்களுக்காகத்தான் பத்திரிகைகள் இருக்கின்றன என்பது வேறு பேச்சு.

எனவே, சந்தாதாரர்கள் அநேகர் சேர்ந்தால்தான் பத்திரிகைகள் நஷ்டமில்லாமல், சுயேச்சையுடன் நன்றாக வேலை செய்யமுடியும். வரும் லாபத்தில் ஒரு பங்கைப் பத்திரிகைகள் இன்னும் சிறப்பாக ஒதுக்கி வைத்து, நல்ல சேவை செய்ய வேண்டுமானால், சந்தாதாரர்கள் பெருவாரியாகச் சேர்ந்தால்தான் முடியும். பொதுஜன சகாயம் இல்லாவிட்டால் என்னதானாகும்?

அச் சகாயம் ஒன்று மட்டும் இருந்துவிட்டால், முடியாத காரியந்தானேது? பணம் இல்லாமற் போனால் கூட, பொது ஜனங்கள் ஒன்று சேர்ந்து பங்குகள் போட்டுப் பத்திரிகைகளை நன்றாக நடத்த முடியுமல்லவா?

எனவே, பொதுக் காரியஞ் செய்யும் பத்திரிகைகளுக்குப் பொது ஜனங்கள் பூரண ஆதரவளிப்பார்களாக!

---

"பாரதி"ப் பத்திரிகையும்,

நமது வெளியீடுகளான புஸ்தகங்களும் மலேயா நாடுகளில்

கீழ் குறிப்பிட்டுள்ளவர்களிடம் கிடைக்கும்.

**Messrs. T. Subramanyam & Co.,**
**7, Batu Road,**
**KUALA LUMPUR,** F. M. S.

---

**The Manager, "India Novel Depot,"**
**71, Serangoon Road,**
**SINGAPORE,** S. S.

---

# ஜஹாங்கீரின் முதல் காதல். *

திரு. வ. வே. சு. ஐயர் அவர்கள்.

ஓர் சிறு கதை.

இன்று நவரோஜ பண்டிகை. அரண்மனையெல்லாம் கோலாகலமா யிருக்கிறது. மொகலாய பிரபுக்களும் வீரர்களும் தில்லிக்குப் பணிந்து விட்ட ராஜபுத்திரரும் அரச பேட்டிக்காக வந்திருக்கிறார்கள். எத்தனை விதமான உடைகள், எத்தனை விதமான தலைப்பாகைகள், எத்தனை விலை பெற்ற ஆபரணங்கள்! உலமாக்களும் பண்டிதர்களும் ஓர் புறம் தர்மத்தைப் பற்றியும் கடவுளின் தன்மையைப் பற்றியும் விவகரித்துக்கொண்டிருக்கிறார்கள். தூரத்தில் அரண்மனையைச் சார்ந்த ஓர் பரந்த வெளியில் ராஜபுத்திர வாலிபரும் மொகலாய மைந்தரும் குதிரைகள் மீதேறிப் போலோப் பந்து விளையாடிக்கொண்டிருக்கிற சத்தம் ஆஸ்தான மண்டபத்துக்குக்கூட எட்டுகிறது. மற்றொரு புறம் மல்யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. வீரர்கள் பலத்தையும் லாகவத்தையும் சாமர்த்தியத்தையும் காட்டும் போதெல்லாம், மொகலாயர், பட்டாணியர், ராஜபுத்திரர், ஆந்திரர், மறவர் என்கிற வேற்றுமை பாராட்டாமல் அனைவரும் தங்கள் சந்தோஷத்தைக் காட்டி அவர்களை உற்சாகப்படுத்துகிறார்கள் சித்திரசாலையில் பாபர் முடிசூடும் படமும், சிங்காதனத்தை இழந்து அமரக் கோட்டையில் வசித்து வந்த உமாயூன் தனக்கு மகன் பிறந்தான் என்று சொல்ல வந்த தாதிக்கு இனாம் அளிப்பது போல எழுதியிருக்கும் சித்திரமும், பதினாறு வயதாக இருக்கையில் அக்பர் ஹேமுவைக் கொல்லுவது போல வரைந்துள்ள சித்திரமும், சித்தூர் பிடிபட்டதைக் காட்டும் படமும், இவை தவிர, லைலி மஜ்னூன் என்ன, உமர் கையாமின் ருபையாத் என்ன, கெமராஜமான் பதூரா, குல்-வ-

* காலஞ் சென்ற திரு. வ. வெ. சுப்ரமண்ய அய்யரவர்களால் எழுதப் பெற்று இது "பால பாரதி"ப் பத்திரிகையில் வெளிவந்தது. இந்த உண்மைச் சிறு கதையின் உயர்வைக் கருதியும் நடையின் இலகுவைக் கவனித்தும் இதை இங்கு வெளியிட்டிருக்கிறோம். ஆசிரியர், "பாரதி."



பகாவலி முதலிய கதைகள் என்ன, இவற்றின் சுவையுள்ள கட்டங்களைச் சித்தரித்து எழுதிய ஓவியங்களும் பார்ப்போர் கண்ணையும் மனத்தையும் பறிக்கின்றன. சபா மண்டபத்தில் பிரதான சாமந்தர்களுடன் கொலு இருந்துகொண்டு அக்பர் தனசேனனுடைய தெய்விகமான கானத்தில் லயித்துப் பரவசமாய்ப் போய்விட்டான்.

அரண்மனையைச் சார்ந்திருக்கிற, இந்திரனுடைய நந்தவனம் போன்ற, இந்தப் பூஞ்சோலையில் நமது கண்களை இன்னொரு காட்சி ஆகருஷிக்கிறது. சாயங்கால வேளை யாகிவிட்டது. செடிகளெல்லாம் புதிய மலர்களைத் தரித்துக்கொண்டு விளங்குகின்றன. சோலை முழுவதும் நறுமணம் கமழ்ந்துகொண்டிருக்கிறது. புறாக்களும், மைனாக்களும், கிளிகளும், குயில்களும், மயில்களும் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இருக்கின்றன. இத்தனை கூட்டமா யிருந்தும் அவைகளுக்குக் கொஞ்சமேனும் பயமில்லை; எதேச்சையாய் உலவுகின்றன.

நந்தவனத்தில் புருஷர்கள் ஒருவரும் இல்லை. ஸ்திரீகளும் குழந்தைகளுமே நிரம்பி யிருக்கிறார்கள். அங்கங்கே கடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளிலும் ஸ்திரீகளேதாம் வியாபாரம் செய்கிறார்கள். மஸ்லின் துணிகள், பட்டுப் பட்டாடைகள், சிகிணா வேலை செய்த ரவிக்கைகள், பொன் இணித்த தட்டங்கள், வைர நகைகள், தந்தத்தால் செய்த பதுமைகள், தந்தத்தில் வர்ணம் சேர்த்தெழுதிய சிறிய ரமணீயமான சித்திரங்கள் இவைகளையெல்லாம் மாதர்கள் தங்கள் குழந்தைகளுக்கும், தங்களுக்கும், தங்கள் காதலர்களுக்கும் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். பார்ஸியிலும் துருக்கியிலும், ஹிந்தியிலும் அம் மாதர்கள் பேசும் பேச்சு மிருதுவாயும் காதுக்கு இனிதாயுமிருக்கின்றது. புருஷர் யாரும்இல்லாததால் மாதர்களில் ஒருவரும் முகத்தை மூடிக்கொள்ளவில்லை. "மான் இனம் வருவபோன்றும், மயில் இனம் திரிவ போன்றும், மீன் இனம் மிளிர்வ போன்றும், மின் இனம் மிடைவ போன்றும்" இருக்கிற அக்பர்ஷாவின் அந்தப்புர ஸ்திரீகளின் அழகையும் ஒயிலையும் நம்மால் வர்ணிக்க முடியுமா? ஒவ்வொருத்தியும் அழகுக்கு வரம்பு இதுதான் என்று சொல்லும்படி யிருக்கிறாள். அவர்களுள் சிலர் கிளிப் பிள்ளைகளுக்குப் பேச்சுக் கற்றுக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சில யுவதிகள் கண்ணாம்பூச்சி ஆடிக்கொண்டும் ஓடிப் பிடித்துக்கொண்டும், ஒழிந்துகொண்டு தோழிகளைக் கண்டுபிடிக்கச் சொல்லியும விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். சிலர் சாரங்கிகளை மீட்டிக்கொண்டு அதற்கேற்பக் கஜல்கள் பாடிக்கொண்டிருக்கிறார்கள். சிலர் சோலையிலுள்ள ஏரியின்மீது படகுகளைச் செலுத்திக்கொண்டு அன்னங்களைப் போலத் தாமரை மலர்கள் நிறைந்திருக்கு மிடத்

துக்குச் சென்று தங்கள் கைகளைப் போலவும் முகத்தைப் போலவுமிருக்கிற அம் மலர்களைக் கொய்கிறார்கள். ஒருத்தி இளமான் கன்று ஒன்றுக்குப் பசும்புல் ஊட்டிக்கொண்டு நிற்கிறாள். ஒருத்தி மேற்கு நோக்கி நின்றுகொண்டு சாயங்கால வேளையில் தோன்றும் வர்ண விஸ்தாரங்களைப் பார்த்து லயித்துப் போய்விட்டாள்.

இவ்வித மிருக்கையில் ராஜகுமாரன் வருகிறான் என்று யாரோ சிறு குரலில் சொன்னார்கள். உடனே அங்கிருந்தவர்க ளெல்லாம் ரவைச்சல்லாவால் செய்யப்பட்ட தங்கள் முக மூடிகளை இழுத்து முகங்களை மூடிக்கொண்டு விட்டார்கள். அவன் நடந்துச் செல்லச் செல்ல வழியிலுள்ள சிறுமியர்கள்கூட மரியாதையாலும் நாணத்தாலும் முகங்களை மூடிக்கொண்டு ஒதுங்கி நிற்கிறார்கள். ஸலீம் தன் தோழர்களோடு கூட ஒய்யாரமாக நடந்துகொண்டு வந்து கடைகளில் சாமான்கள் வாங்கிக் கொண்டும் சகோதரிகளோடும் தாய்மார்களோடும் அங்கங்கே நின்று பேசிக்கொண்டும வருகிறான்.

சந்திரோதயமாயிற்று. ஏக காலத்தில் சோலையிலுள்ள எல்லா விளக்குகளும் ஏற்றப்பட்டுச் சோலையைப் பூலோக சுவர்க்கம் போல் ஆக்கிவிட்டன. ஸலீம் தன் தோழர்களை விட்டு நீங்கி இப்பொழுது தனியே செல்கிறான். சென்றவன் ஏதோ மந்திரத்தால் கட்டுண்டவன் போலத் திடீரென நின்றுவிட்டான். பிறகு சற்றுத் தெளிந்துகொண்டு நடந்து சென்று ஒரு மா நிழலில் நின்று ஒரு திசையில் பார்த்தான்.

அங்கே ஒரு இள மங்கை புஷ்பங்கள் விற்றுக்கொண்டிருந்தாள். அவள் விலை கூறிக்கொண்டிருந்த மலர்கள் அவளுடைய சரீரத்தை விட மிருதுவான மலரும் இருந்ததோ? அப்பொழுதுதான் பறிக்கப்பட்டதாயிருந்தும், அங்கிருந்த தாமரைக்கு அவள் முகத்தின் ஒளியில்லை. அவள் கண்ணில் இருந்த நீலமும் எழிலும் தெளிவும் அங்கே வைத்திருந்த கருநெய்தல் மலரில் இல்லை. கறுத்துச் செழித்து நீண்டிருக்கும் கூந்தலில் ரோஜா மலரைத் தரித்துக்கொண்டு, மலர் விரும்புவோருக்கெல்லாம் அவள் மலர்களை எடுத்துக் கொடுத்துக்கொண்டிருந்ததால், அவளைத் தூரத்திலிருந்து பார்த்த அரசிளங் குமாரனுக்கு அவள் பூங்கொத்துகள் பூத்துத் தொங்கும், ஒசிந்தாடும் நறும் பூஞ்செடி போலத் தோன்றினாள்.

அதற்குள்ளும் கூட்டம் கலையலாயிற்று. எல்லோரும் தத்தம் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். இனிமேல் தன் வியாபாரம் நடக்காது என்று நமது மங்கையும் தன் கூடையிலுள்ள மிகுதியான மலர்களைக் கூடையில் எடுத்து வைத்துக்கொண்டு புறப்படலானாள். அவளோடு கூட ஒரு துணையும் வரவில்லை.



யமுனைக் கரையோரமாகவே நடந்துகொண்டு அரண்மனையின் தெற்குக் கோடியை நோக்கிச் செல்கிறாள். அந்தச் . சந்திரிகைக்கும் வெள்ளித் தகடுகள் அடுக்கின மரகதமேடை போல விளங்கும் யமுனை ஆற்றுக்கும், வீசும் இளந் தென்றலுக்கும், அவள் கையில் கொண்டு போகும் மலர்களின் மணத்திற்கும், அவளுடைய கொடி போன்ற மேனிக்கும் அவளைப் பார்த்தால் மனிதப் பெண் போலவே இல்லை; அவள் கந்தர்வ ஸ்திரீ போலவும் மோகினி போலவும் தான் விளங்கினாள்.

அந்தப்புரத்திலுள்ள அவளுடைய இருப்பிடத்திற்குப் போக இன்னும் கால் மைல்தானிருக்கிறது. இப்பொழுது "அனார்கலி!" என்று ஒரு மிருதுவான சப்தம் அவள் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தாள். உடனே தன் முகத்தைச் சல்லாவால் மூடிக்கொண்டாள். அங்கே அவளிடம் வந்து நின்றது நமது அரசிளங் குமாரனான ஸலீமே.

அனார்கலி ஒரு ஏழைப் பெண். ஆனால் அவளுடைய தூரத்துப் பந்து ஒருத்தி அரண்மனையில் தாதியாக இருந்தாள். அவள் தகப்பன் பெரிய குடும்பியாதலால் அவளைச் சிறு வயதிலேயே அந்தத் தாதியிடம் அனுப்பிவைத்து விட்டிருந்தான். அவளும் இச் சிறுமியை மிக்க அன்போடும் ஆதரவோடும் வளர்த்து வந்தாள். இப்படியிருக்கும் போது தாதிக்கு ஒரு பெரிய அதிர்ஷ்டம் வந்துவிட்டது. பட்டத்தரசி மகனான ஸலீமுக்கு அக்பர் அவளையே பால்தாதியாக நியமித்தான். அவளுக்கு இனி ஒரு குறைவுமில்லை. இக் குழந்தை தன்னிடம் வந்த நிமித்தமே தனக்கு இந்தப் பாக்கியம் கிடைத்தது என்று தாதி, சிறுமியை முன்னிலும் அதிக ஆதரவோடு நடத்துவாளாயினாள். விளையாடும் பிராயம் வந்ததும் ஸலீமும் சிறுமியும் தோழர்களாகி இணைபிரியா திருப்பார்கள். அக் காலத்தில்தான் ஸலீம் அவளுக்கு அனார்கலி—மாதுளை மொக்கு—என்று பேர் வைத்திருந்தான்.

ஸலீமுக்கு வயதானதும் அக்பர் அவனை வித்தியாப்பியாசத்துக்கும் அஸ்திரப் பயிற்சிக்கும் அனுப்பிவிட்டான். ஒரு பத்து வருஷ வரையில் ஸலீம் அரசன் கற்கும் கல்வியிலும், ஆயுதப் பயிற்சியிலும், போர்த் தொழில் கற்பதிலும் கவனம் செலுத்தி வந்து அவற்றில் மிகவும் தேர்ந்துவிட்டான். கல்வியெல்லாம் முடிந்த பிறகுதான் அக்பர் ஸலீமை ஆக்ராவுக்கு வருவித்துக் கொண்டான்.

ஸலீம் ஆக்ராவுக்குத் திரும்பி வந்து ஒரு மாதம்தான் ஆயிற்று. ஆகையால் இந்த வருஷத்து நவரோஜ் பண்டிகை வழக்கமாய்

நடப்பதைவிட அதிக விமரிசையாய் நடந்தது. மல்லருடைய மற்போரைப் பார்த்துவிட்டும், எத்தனை தடவை பார்த்தாலும் தெவிட்டாத சித்திரங்களை அனுபவித்துவிட்டும், ஸலீம் அரசவை சென்றான். அங்கே தனசேனன் நாம் ஏற்கெனவே சொல்லியபடி கானமழை வருஷித்துக்கொண்டிருந்தான். லைலியைப் பார்த்து அவள் மீது மனங்கொள்ளாத காதல் ஏற்பட்டவுடன் மஜனூன் பாடியது போல் செய்யப்பட்ட ஒரு கஜலை மோகன ராகத்தில் பாடிக் கேட்போருடைய இதயத்தைப் பூரிக்கச் செய்துவிட்டு உடனே லைலியை அவளுடைய தந்தை வேறொருவனுக்குக் கொடுக்க நிச்சயித்ததும், மஜனூன் துடித்துக்கொண்டு பாடுவது போலச் செய்த மற்றொரு கஜலைப் பைரவி ராகத்தில் தனசேனன் பாடியதும் அவையிலுள்ளோரெல்லாம் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகிவிட்டார்கள். ஸலீம் இள வாலிபன். இந்தக் கஜல்கள் அவன் மனதில் ஒரு புதிய உணர்ச்சியைக் கிளப்பிவிட்டன. அவற்றின் பொருள் அவனுக்குத் தெளிவாக விளங்கவில்லை ஆனால் இரண்டு இருதயங்கள் ஒன்றோடொன்று காதலுற்றுக் கலங்குங் காலத்தில் அவை பூரணத்தை யடைகின்றன; தனியாக யிருக்கும் வரையில் ஒவ்வோர் இருதயமும் குறைபுற்றதாகவே இருக்கிறது; ஓர் ஆறுபோலச் சென்றுகொண்டிருக்கிறது; தன்னுடைய ஆத்மா அனைத்தையும் அர்ப்பணம் செய்யக்கூடிய வேறு ஒரு இருதயத்தைச் சந்தித்ததும், அவ் விருதயம் தன்னோடு சம்மேளித்ததும் ஆறானது கடலில் கலந்தது போல இதுவும் சாந்தியை அடைந்துவிடுகிறது என்பன போன்ற எண்ணங்களைத் தனசேனனுடைய தெய்விகமான கானம் ஸலீமின் மனதில் எழுப்பிவிட்டது. கானத்தின் இனிமையைத் தாங்கமாட்டாமல் ஸலீம் தன் தோழரோடு சோலையில் புகுந்தான். ஆனால் அவர்களுடைய விளையாட்டுப் பேச்சுகளுக்கும் அவன் மனதில் எழுந்த உணர்ச்சிகளுக்கும் ஒவ்வாது போகவே அவர்கள் ஒவ்வொருவரையும் விடை கொடுத்தனுப்பிவிட்டு ஸலீம் தனியே சுவப்பனத்தில் நடப்பவன் போல நடந்துகொண்டு சென்றான். அப்படிச் செல்லுகையில் தன்னுடைய 'மாதுளை மொக்கை'க் கண்டதும் அவனுக்குப் பழைய நினைவுகளெல்லாம் கடல் மடை திறந்தது போல் வந்துவிட்டன. தான் சிறுவனாக இருந்தபோது தானும் அவளும் விளையாடிய விளையாட்டுக்களும், பேசிய பேச்சுக்களும், இருந்த அன்யோன்யமும் நினைவுக்கு வரவே அவனுக்கு அனார்கலியின் மீது காதல் பிறந்துவிட்டது.

ஆகையால் நடந்து செல்லும் பூங்கொடி போன்றிருந்த அனார்கலியின் பின் சென்று, அவன் வேற்று மனிதர் ஒருவரும் இல்லாத இடம் பார்த்து அவள் பெயர் சொல்லி அழைத்தான்.



அனார்கலி முகத்தை மூடிக்கொண்டதும் ஸலீம், "என்ன, அனார், என்னை உனக்கு அடையாளம் தெரியவில்லையா" என்றான்.

"அடையாளம் தெரிந்துதான் முகமூடியைப் போட்டுக்கொண்டேன்; என்-உம்-என் யுவராஜாவை நான் மறந்துவிட முடியுமா?" என்றாள் அனார்கலி.

"அதென்ன யுவராஜா என்று சொல்லுகிறாயே, என் பெயர் உனக்கு மறந்துவிட்டதா?"

"தாங்கள் இன்னும் குழந்தையா? அல்லது நான்தான் குழந்தையா? தங்கள் பெயரை நான் சொல்லலாமா?"

"நீ என்னுடைய அனார்கலி இல்லையா? அந்த நாளில் நாம் விளையாடியதெல்லாம் உனக்கு நினைவில்லையா? என்னை நீ தாங்கள் நீங்கள் என்றழைக்கக் கூடாது. ஸலீம் என்று கூப்பிட்டால்தான் நான் உன்னை விடுவேன்."

"என்னை இப்படி அபராதியாக்கலாமா? ஒரு நாளும் நான் தங்களைப் பெயர் சொல்லி அழைக்க மாட்டேன். நீல வானத்திலுள்ள ஜோதிகளுக்கெல்லாம் அரசனாய் விளங்கும் சந்திரனை ஒரு நாள் மலர்ந்து அன்றைக்கே வாடிப்போகும் காட்டு மல்லிகை ஏற எடுத்துப் பார்க்கலாமா?"

"வானத்தில் உயிரற்றுச் சுழன்று செல்லும் சந்திரன் அத்தனை உயர்ந்ததா? அல்லா அருள் செய்திருக்கிற ஜீவசக்தி பொங்கித் ததும்பிக்கொண்டு, பூமியின் புன்சிரிப்போ என்று சொல்லும்படி விளங்குகிற மல்லிகை மலருக்கு இச் சந்திரன் இணையாகுமா?"

"தங்களுக்கு இணையாக நான் பேச முடியுமா? அத்தை தேடுவாள் நான் போகிறேன், விடை கொடுங்கள்" என்றாள் அனார்கலி.

அவளுடைய நாணமும் பயிர்ப்பும் ஸலீமுக்கு அவள் மீது பிறந்த காதலைப் பெருக்கினவே ஒழியக் குறைக்கவில்லை.

"அனார்கலி, உனது லாவண்யத்தின் சக்தி உனக்குத் தெரியவில்லை; மலையினின்று வீழும் நீருவி போலத் தெளிவாயும் பரிசுத்தமாயுமிருக்கிற உன் சுபாவத்தின் ஆகர்ஷண சக்தி உனக்குத் தெரியவில்லை; ஆனால் நான் அவற்றை அறிகிறேன்; காந்தம் ஊசியை இழுப்பது போல அவை என்னை உன் வசப்படுத்திவிட்டன; இனிமேல் நான் ஸலீம் அல்லேன், அக்பர்ஷாவின் ஜேஷ்ட புத்திரனும் யுவராஜனும் அல்லேன், என் அனார்கலியின் குலாமாகிவிட்டேன்!" என்று சொல்லிக்கொண்டு அவள் கன்னத்தில் முத்தமிடப் போனான்.

அனார்கலி அவனை மெதுவாய் விலக்கிவிட்டு ஒதுங்கி நின்று கொண்டு,

“ஸலீம்ஜீ, தங்கள் அடிமையாகிற என் மீது தங்களுக்கு இத்துணை அருள் வந்தது என்னுடைய அதிர்ஷ்டமே! தாங்கள் அந்தப்புரத்தை விட்டுப்போன நாளாய்த் தங்கள் சிந்தனையாகவே இருந்துகொண்டிருக்கிறேன். ஆனால் தங்களை மணக்க எனக்கு அருகம் இல்லை. நான் பரம ஏழை; தாங்கள் சக்ரவர்த்தியின் ஜேஷ்ட புத்திரன்; முயற்குட்டிக்குச் சிங்கத்தை மணக்கும் பாக்கியம் வருமா? தெருவில் மிதிபடும் தும்பைப்பூ சூரியனை இச்சிக்கலாமா? ஆகையால் எனக்குத் தங்கள் மீதுள்ள காதலை இருதயத்தைவிட்டுப் பறித்துவிட்டேன்; என் அத்தையின் காரியங்களைப் பார்த்துக்கொண்டு தன்னந்தனியாகவே நான் காலங் கழிக்க நிச்சயித்துவிட்டேன்; இதோ இந்த மலர்களிருக்கின்றனவே, இவைதாம் என் தோழர்; இவைகளின் தோழமையில் என்னையே மறந்து போய்விடுகிறேன்; என் மீதுள்ள காதல் தங்களுக்குச் சில நாட்களில் மறந்து போய்விடும்; அவ்விதம் மறந்து போய்விடுவதும் நியாயமே; தங்களுக்கு இணையான மங்கையின் காதலைப் பெற்றுத் தாங்கள் சர்வபோகங்களையும் போகித்துச் சுகமே வாழ்ந்து, காலத்தில் சக்ரவர்த்தியாக வேண்டும் என்பதுதான் அடியாளுடைய கோரிக்கை!”

என்று எண்ணற்ற பெருமூச்சுகளுக்கிடையில் சொல்லி முடித்தாள்.

ஸலீமுக்குத் தாங்கவில்லை; அவளுடைய தன்மறுப்பு அவன் நெஞ்சில் முன்னைவிடத் தீவிரமான காதலை உண்டாக்கிவிட்டது.

“அனார்கலி! உன்னையும்விட எனக்கு இணையான மங்கையும் இருக்கிறாளோ! நீதான் எனக்குப் பட்டத்து ராணியாகவேண்டும்; பாதுஷாவின் உத்திரவு கிடைக்கும் வரையில் இந்த மோதிரத்தை வைத்துக்கொண்டிரு; என் நெஞ்சாகிற கடலுக்கு நீதான் பூரணச் சந்திரன்; என்னைக் கைவிட்டுவிடாதே!” என்று சொல்லிக்கொண்டு ஸலீம் அனார்கலியைக் கட்டி முத்தமிட்டுக்கொண்டான்

பக்கத்திலிருந்த ரோஜாப் புதரில் ஏதோ சிலுசிலுத்தது. அனார்கலி நடுங்கினாள். ஆனால் ஸலீம் அவளை “ஒன்றுமில்லை; ஏதோ கிளிகள் ஒன்றோடொன்று கொஞ்சிக்கொண்டிருக்கும்” என்று சொல்லித் தேற்றிவிட்டுத் தன் கையிலிருந்த வைரங்களும் பச்சையும் இழைத்த மோதிரத்தை அவள் கையில் போட்டு, அந்தக் கைக்கும் முத்தமிட்டு, அவளை நடத்திக்கொண்டு சென்று அவள் வீட்டில் விட்டுவிட்டுத் தன் இடம் போய்ச் சேர்ந்துவிட்டான்.



அன்றிரவு அனார்கலி தாங்கமுடியாத இன்பக் கடலில் மூழ்கி, விழித்துக்கொண்டும் இன்பக் கனவுகள் கண்டுகொண்டுமிருந்தாள். அக்பர்ஷா உத்திரவு கொடுத்துவிட்டதாகவும், ஸலீமும் தானும் விவாகம் செய்துகொண்டு பூஞ்சோலையில் உலவுவதாகவும், பச்சைப் பசும்புல் மேடையில் நானாவிதமான நறுமலர்கள் தூவிய ஆசனத்தில் இருவரும் உட்கார்ந்துகொண்டு, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு பேசொணாத அன்பில் லயித்துப்போயிருப்பதாகவும், தன்னுடைய ஏழையான தந்தை தாய்க்கும், தன்னை வளர்த்த அத்தைக்கும், ஏராளமான தனம் வழங்குவதாகவும், இவை போன்ற கனவுகள் அவளுக்கு உதித்தன. நடுநிசியில் நித்திரை விட்டெழுந்த அவளது அத்தை அவள் முகத்தைப் பார்க்கும் போது அதில் மலர்ந்திருந்த புன்னகையைக் கண்டு ஆனந்த பரவசையாகித் தானும் அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டே மறுபடி தூங்கச் சென்றாள்.

காலமே விடிந்தது. ஜீவவேகம் ததும்பிக்கொண்டு நிற்கும் மலரைப்போல அனார்கலி பூரண சௌந்தரியத்தோடு விளங்கினாள். நேற்று நடந்த சம்பவங்களும் அவள் கண்ட கனவுகளும் அவளுக்கு என்றுமில்லாத பூரிப்பைத் தந்தன.

விடிந்து சற்று நேரத்திற்கெல்லாம் சில ஏவலாளிகள் வந்து பாதுஷா அனார்கலியை உடனே அழைத்துவரச் சொன்னார் என்று கூப்பிட்டார்கள். அனார்கலியின் அத்தை நடுங்கிப்போய்விட்டாள். எதற்காக என்று கேட்டதற்கு ஏவலாளிகள் ஒன்றும் சொல்ல முடியாது என்றுவிட்டார்கள். ஆனால் அனார்கலியை அவள் கேட்டபோது முதல் நாள் இரவு நடந்த சங்கதிகளைச் சொல்லி, பாதுஷா தன்னைப் பார்க்கிறதற்காகத்தான் அழைத்திருப்பான் என்று சொன்னாள். அவள் அத்தையின் பயம் நீங்கவில்லை. ஆனால் அரசனுடைய ஆக்ஞையானதால் அனார்கலிக்கு நல்லுடை உடுத்திச் சிங்காரித்து மற்றொரு வைகறை என்று கண்டோர் சொல்லும்வண்ணம் அவளை ஏவலாளர் பின் அனுப்பினாள்.

அனார்கலி தனக்குக் கிட்டாது என்று நினைத்த காதல் கிட்டிவிட்டதைப்பற்றிச் சந்தோஷித்துக்கொண்டு, ஸலீம் விரும்பியுள்ள மங்கையைப் பாதுஷா அவனுக்கு விவாகம் செய்துவைக்காமல் என்ன செய்வான் என்ற தைரியத்தோடு ஏவலாளர் பின்சென்றாள்.

ஐயோ பாவம்! உலகத்தின் கல்நெஞ்சு இந்தப் பேதைக்குத் தெரியவில்லையே! அக்பர்ஷா உத்திரவுப்படி அனார்கலியைக் காவலில் வைத்துவிட்டார்கள்.

தனசேனனுடைய கானம் முடிந்ததும் ராஜ சபையும் கலைந்தது. அக்பர் வழக்கப்படி சந்திரிகையின் கண்கொள்ளாக் காட்சியை அனுபவிப்பதற்காகச் சோலையுள் புகுந்தான். பண்டிகையில் எல்லோரும் களிக்கிறார்களா என்று தானே பார்க்கவேண்டும் என்கிற ஆசையும் இவனுக்கு உண்டாயிற்று. கடைசிவரையில் சென்றுவிட்டுத் திரும்புகையில் தூரத்தில் ஒரு வாலிபனும் ஒரு சிறு பெண்ணும் யமுனைக் கரை ஓரமாகப் பேசிக்கொண்டு நிற்பதைக் கண்டு உன்னிப்பாய்ப் பார்க்கையில், வாலிபன் தன் குமாரன் என்று கண்டு அவன் ரோஜாப் புதரில் ஒளிந்துகொண்டு நின்றான். அனார்கலியும் ஸலீமும் புறப்படும்போது உண்டான சலசலப்பு அக்பருடைய உடைவாள் புதரில் மாட்டியதால் உண்டானது. தன் இளமைந்தனை இந்தச் சிறுமி மயக்கிவிட்டாளாகையால் அவளை இனி அந்தப்புரத்தில் வைக்கக்கூடாது என்று நிச்சயித்துக்கொண்டு தூரத்திலேயே நடந்துவந்து அவர்கள் செல்லும் இடத்தையும் பார்வையிட்டுவிட்டு அரண்மனை சென்றுவிட்டான். அந்த நிச்சயத்தின் பலன்தான் அனார்கலி காவலும் வைக்கப்பட்டது.

என்ன செய்வாள் பாவம்! துடித்தாள்; துன்புற்றாள்; கண்ணீர் ஆறாய்ச் சொரிந்தாள். ஐயோ, அல்லவோ என்றலறினாள்.

“இந்தக் காதலை நான் வளர்க்கவில்லையே! என்னை ஏன் அல்லா அந்தப்புரத்தில் கொண்டுவந்து சேர்த்தான் அல்லது ஏன் என் அத்தையை ராஜகுமாரனுக்குத் தாதியாகும்படி செய்தான்? ஏன் நானும் ஸலீமும் எப்பொழுதும் சந்திக்கும்படி ஏற்படுத்தினான்? மற்றவர்களைச் சந்திக்கவில்லையா அரசிளங்குமரன்? என்மீது அவனுக்குச் சிறுபோழ்திலேயே ஆசை உண்டாக வேண்டுமா? எனக்குந்தான் அவன்மீது ஏன் ஆசை உண்டாயிற்று? நாள் வளர வளர என் காதலும் வளர்ந்ததுவே! நான் அதை என் இருதயத்தை விட்டு அகற்றிவிடவும் முயன்றேனே! கடைசியில் குதா உர் ரஹீம் நமக்குத் தந்திருக்கிற வானத்தையும், நிலவையும், ஆறுகளையும், சோலைகளையும் பார்த்துப் பார்த்து, எனக்குக் கிட்டாத காதலை மனதினின்று களைந்துவிட்டு அவைகள் தரும் ஆனந்தத்துள் மூழ்கியிருந்தேனே! நேற்றுத்தான் நான் ஏன் ஸலீம் கண்ணில் பட்டிருக்க வேண்டும்? ஆனால் ஏன் பட்டிருக்கக் கூடாது? அவர் என்னைக் கண்டு பேசியிராவிடில் அவருடைய பெருங் காதல் எனக்குத் தெரிந்திருக்குமா? வானத்தில் விளங்கும் சூரியன் தும்பைப் பூவையும் பார்க்கதே! அதற்காகவும் ஒளி வீசுகிறதே!, நான் கொடுத்துவைக்காத பாவி! ஆனால் அதுதான் எப்படிச் சொல்லலாம்? சக்ரவர்த்தியின் மகன் என்னைக் காதலித்துவிட்டபோது நான் பாக்கியசாலியே! என் ஜன்மத்துக்கு இந்த ஒரு இன்ப நினைவே போதாதா?”



என்று பலவாறு சிந்தித்துக்கொண்டிருந்தாள் அனார்கலி.

இப்படி நாட்களாயின; நாட்கள் மாதங்களாயின; மாதங்கள் வருஷங்களாயின. ஸலீம் இன்று வருவான் நாளை வருவான் என்றெதிர்பார்த்துப் பார்த்து அவன் வரவே வராததால், அவள் மனம் புண்ணாகிவிட்டது; கண் ஒளி குன்றிவிட்டது; உடலின் அழகெல்லாம் போய்விட்டது.

“ஒருவேளை என்னை மறந்தே போய்விட்டானோ ஸலீம்! அவனுக்கு என்ன எத்தனையோ மங்கையர் காதல் தரக் காத்திருப்பார்கள்; என் ஒருத்தியைப்பற்றி நினைக்க வேண்டுமென்கிற கட்டாயம் அவனுக்கு என்ன? ஆனால் அவனுடைய பார்வையிலும் பேச்சிலும் கபடமே இல்லையே; என் பேரில் காதலில்லாமல் அவ்விதம் பேசியே இருக்கமாட்டான். நான் ஸலீம் அல்லேன், அக்பர்ஷாவின் ஜேஷ்ட புத்திரனும் யுவராஜனும் அல்லேன், என் அனார்கலியின் குலாமாகிவிட்டேன் என்றாரே; இந்த அன்பை மறக்க வழியும் உண்டோ? என் அன்பு இத்தனை வருஷங்களாகியும் மறக்கவே முடியவில்லையே!” என்றிவ்வாறு யோசிப்பாள்.

ஆனால் வெளி உலகத்தில் நடக்கும் ஒரு சங்கதியும் அவளுக்குத் தெரியவில்லை. அவளுடைய காவலாளிகள் அவளை ஏதும் வருத்தவில்லை. அவளுக்கு வேண்டியவை அனைத்தும் அவளுக்குக் கொடுத்துவந்தார்கள். ஆனால் அவள் கேட்கும் கேள்விகளுக்கு யாரும் பதில் சொல்வதில்லை.

வருஷங்கள் ஆக ஆக அனார்கலியின் சரீரம் மெலிந்து மனமும் விண்டுபோய்விட்டது. அன்புக்கும் மலர்களுக்கும் அவள் மனம் தவித்தது. அவ்விரண்டையும் தவிர மற்றதெல்லாம் அவளுக்குக் கிட்டிற்று. அவளுக்குத் தீராத நோய் வந்துவிட்டது.

அவளைப் பார்த்து இரங்குவாரில்லை; ஸலீம் ஸலீம் என்று ஜபித்தவண்ணமாயிருந்தாள். ஆனால் ஸலீமையுங் காணோம்; விடுதலையும் காணோம். நோய் முற்றிவிட்டது. அவளுக்கு மரணகாலம் நெருங்கிவிட்டது. ஆனால் அன்றைக்கு அவள் என்றும் போலில்லாமல் மிகச் சாந்தமாய் இருந்தாள். தன்னுடைய உடைகளில் மிகவும் உயர்ந்ததாயுள்ள உடையைத் தரித்துக்கொண்டு, ஸலீம் தந்த மோதிரத்தையும் கையில் அணிந்துகொண்டு படுத்துக்கொண்டுவிட்டாள். தூக்கத்தில் ஸலீமுடன் பேசுவதுபோலப் பேசினாள்.

பொழுது விடிந்தது. அவள் சிறையின் வெளிப்புறத்தில் பெரிய கோலாகலமாயிருந்தது. காவலாளிகளெல்லாம் வெளியில் சென்று பார்த்தார்கள். "ஜஹாங்கீர் பாதுஷாகி ஜய், ஜஹாங்கீர் பாதுஷாகி ஜய்" என்கிற சப்தம் எங்கு பார்த்தாலும் கோஷித்தது.

அக்பர் இறந்துபோய்விட்டான். ஜஹாங்கீர் சிங்காதனம் தனதாகிவிட்டவுடன் அனார்கலியை சிறைமீட்க வந்துவிட்டான்.

படுத்திருந்த அனார்கலியைப் பார்த்ததும் ஜஹாங்கீருக்குத் தூக்கி வாரிப்போட்டது. "அனார்கலி! என் காதற் கிளியே! என் செய்கிறாய்?" என்றான். ஆனால் அனார்கலியின் சித்தம் கலங்கிப் போய்விட்டது. பேதுற்றவள்போல் விழித்தாள். "நீ யார் தம்பீ? ஆ! நம் அக்பர்ஷாவின் மகனா? உன்னை மங்கையர்களை மோசம் செய்கிற வஞ்சகன் என்று எல்லோரும் சொல்லுகிறார்களே! எனக்குத் தோன்றவில்லை. நீ நல்லவன் போலத்தான் தோன்றுகிறது. அனார்கலியைப் பார்த்திருக்கிறாயா? நல்ல பெண். அவள் எங்கேயோ போய்விட்டாள். என்னை ரோஜா மலர்கள் எடுத்துக்கொண்டு வரச் சொன்னாள். நான் எடுத்துப் போகப்போகிறேன்! நீயும் வருகிறாயா?" என்று சொல்லிவிட்டு அப்படியே பிரக்ஞை தப்பிப்போய் விட்டாள்.

ஜஹாங்கீர் (இது தான் ஸலீம் அரசனானதும் வைத்துக்கொண்ட பெயர்) கண்ணால் தாரை தாரையாய் ஜலம் விட்டுக்கொண்டு அவள் கையைப் பிடித்துத் தூக்கினான். அவன் கை மேலே பட்டதும் கொஞ்சம் பிரக்ஞை வந்து, 'ஆ! ஸலீம் இன்னும் ஒரு முத்தம் கொடேன், இல்லாவிட்டால் நான் உன்னோடு சேர்த்தியில்லை போ' என்று குளறிக் குளறிப் பேசினாள் கண்ணீர்கள் கண்களை மறைக்க ஜஹாங்கீர் அவள் கன்னத்தில் மிருதுவாக ஓர் முத்தமிட்டான். அவள் முகம் மலர்ந்தது. ஆனால் அடுத்த நிமிஷத்தில் அவள் உயிர் சுவர்க்கம் சென்றுவிட்டது.

ஜஹாங்கீர் அவளுக்கு ஒரு பெரிய சமாதி கட்டுவித்தான். நவரோஜ் பண்டிகையன்று அச் சமாதியின்மீது கணக்கற்ற மலர்களை விரித்து அலங்கரிக்காமல் அவன் தர்பாருக்குப் போவதேயில்லை. அவன் இறந்தபோது அவனுடைய இடது கையில் அனார்கலி என்று எழுதியிருந்ததை அவனுடைய ஹகீம் பார்த்தார்களாம்.

# ராஜா தேசிங்கு. *

திரு. O. P. தேசிகன் அவர்கள்.

செஞ்சிக்கோட்டை ஒன்றன் பின்னொன்றாக எத்தனையோ அரசாங்கங்களையும், அரச வம்சங்களையும், இறை மாட்சியையும், ஜயாபஜயங்களையும் கண்ணுற்றிருக்கின்றதாயினும், அவர்களனைவரினும் தனது ஒப்புயர்வற்ற ஆண்மைச் செயல்களின் அருங்கீர்த்தியினால் இன்றளவும் மக்களின் நினைவிலே தலைசிறந்து—அவர்களுடைய அளவற்ற புகழ்ச்சிக்குப் பாத்திரனாக-விளங்குபவன் தேசிங்கு மன்னனேயாவான்.

## ஜுல்பிகர் கானின் முற்றுகையும் அதற்குப் பின்னும்

கி. பி. 1701-ம் ஆண்டிற்குச் சற்றேறக்குறைய டில்லி சிம்மாதனத்தினின்றும் ஏறக்குறைய இந்தியா முழுவதையும் அரசியற்றிய முகலாய பாதுஷாவான ஒளரங்கஜீப் சக்கிரவர்த்தி, வடக்கேயிருந்து வந்த பண்டேலா வம்சத்து க்ஷத்திரிய ரஜபுத்திரன் ஒருவனுக்கு செஞ்சிக்கோட்டையையும் அதன் சுற்றுப்புறங்களையும் ஜாகீராக அளித்தான். ஸரூப் ஸிங் என்பதே அவனுடைய பெயர். அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே பிரசித்திபெற்ற ஜுல்பிகர் கானுடைய விடாமுயற்சியின் காரணமாகப் பல்லாண்டுகள் வரையில் அவனால் முற்றுகையிடப்பட்ட செஞ்சிக்கோட்டை முடிவில் அவனிடம் பணிவுற்று, முகலாய வம்சத்தாரின் ஆளுகைக்குட்பட்டதெனினும்,

* அண்ணாமலை சர்வகலாசாலையில் சரித்திரப் பேராசிரியராக விருக்கும் ஸ்ரீமான் **C. S.** ஸ்ரீனிவாஸாச்சாரியார், **M. A.** அவர்களால் எழுதப்பெற்ற **"The History of Gingee"** என்னும் புத்தகத்தையும், சென்னை **"Every Mans Review"** பத்திரிகையில் பல ஆண்டுகளுக்கு முன் வெளியான **"Gingi and Raja Desing"** (செஞ்சிக்கோட்டையும் தேசிங்கு மன்னனும்) என்னும் ஷையாருடைய கட்டுரையையும் தழுவியெழுதப்பட்டது. இவ் விரு தகவல்களுக்காகவும், அவைகளை உபயோகிப்பதற்கு அனுமதியளித்ததன் பொருட்டும் ஆசிரியருக்கு எனது நன்றி யுரியதாகுக.

தென்னிந்தியாவின் பற்பல பகுதிகளிலும் அதற்குப் பின்னும் நாயக்க வமிசத்தவர்களுடையவும், பாளையக்காரர்களுடையவும் செல்வாக்கே மிகுதியும் ஓங்கி யிருந்தது. அவர்கள் ஆங்காங்கு சிறிய நிலப் பரப்புகளைக் கட்டி யாண்டு வந்ததுமன்றித் தமது ஸ்தானத்தைப் பல்வழிகளிலும் உறுதிப்படுத்திக் கொண்டும் வருவாராயினர். அன்னாரிடமிருந்து டில்லிச் சர்க்காருக்குச் சேரவேண்டிய பகுதிப் பணத்தை வசூலிப்பது முதலில் அவர்கள் எண்ணியபடி அவ்வளவு சுலபமானதாக யிருக்கவில்லை.

ஆதலின் வருஷக் கணக்காகக் கப்பம் செலுத்தப்படாமலேயே பாக்கி குவிந்தவண்ண மிருந்தது. இந்தத் தீர்வையை வசூலிப்பதில் முகலாய சர்க்காருக்குப் பேருதவியாக யிருந்து வந்ததை முன்னிட்டு ஸரூப் ஸிங் செஞ்சிக்கோட்டையை ஜாகீராகப் பெற்றது மன்றி, அவன் 2000 குதிரை வீரர்களுக்குத் தலைமை வகிக்கும் மன்ஸப்தாராகவும் பதவியில் உயர்த்தப்பட்டான். இதைத் தவிர செஞ்சிச் சீமையைச் சேர்ந்த வழுதாவூர், திண்டிவனம், திருக்கோவிலூர், வேட்டவலம், திருவாமுத்தூர், அசுப்பூர் முதலிய ஊர்களும் அவனுக்கு மானியங்களாக வழங்கப்பட்டன.

## ஸரூப் ஸிங்கின் திறமை

ஸரூப் ஸிங்கின் திறமையான நிருவாகத்தின் கீழ் செஞ்சிக் கோட்டையானது பல்வழிகளிலும் மேன்பாடுற்று சிறந்து விளங்கியது. அவன் தனதாளுகைக் குட்பட்ட பிரதேசத்தை முன்னுக்குக் கொண்டுவர அரும் பாடுபட்டான். நாளுக்கு நாள் அவனது செல்வாக்கு ஓங்கிவரவும், அவன் சமீபத்திலுள்ள ஐரோப்பியர்களைக்கூட பயமுறுத்தத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது. செஞ்சித் தலைவன் ஸெய்ண்ட் டேவிட் கோட்டையிலிருந்து இரண்டு ஐரோப்பியர்களைப் போதுமான காரணங்களின்றி அக்கிரமமாகக் கைது செய்து செஞ்சிச் சிறையிலடைத்து வைத்ததாக அக் காலத்திய ஐரோப்பிய தஸ்தவேஜுகளால் தெரியவருகிறது. அதன் பயனாக ஆங்கிலேயருக்கும், ஸரூப் ஸிங்கிற்கும் மிகுந்த மாச்சரியங்கள் ஏற்பட்டுப் பூசல்கள் பல விளைந்தன. இரு தரப்பிலும் யுத்த முஸ்தீப்புகள் செய்யப்பட்டன. செஞ்சித் தலைவன் இங்கிலீஷ்காரர்களுடைய கோட்டையை வளைத்துக்கொண்டு, அவர்களுக்கு உணவுப் பதார்த்தங்கள் கிடைக்கவொட்டாதபடி செய்து விட்டதால், கோட்டைக்குள்ளே யிருந்தவர்கள் ஆகாரமின்றி, வெளியேறவும் வழியின்றி திக்குமுக்காடினார்கள். அதற்கடுத்த வருஷம் புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சுக் கவர்னரின் தலையீட்டினாலேயே இவ்விருவருக்கும் சமாதானம் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நிகழ்ந்த சிறிது காலத்திற்குள்ளாக ஸரூப் ஸிங் மரணமடைந்



திருக்க வேண்டும். அவனுக்குப் பின் அரசுக் கட்டிலேறியவனே ராஜா தேசிங்கு. பாடல்களின் வாயிலாகத் தமிழ் நாட்டில் இன்றளவும் உயிர் பெற்று தேசிங்கு மன்னன் விளங்குகிறான்.

## ராஜா தேசிங்கும் ஆறுகாடு நவாபு சாதத் அலிகானும்

தேசிங்கு ராஜனுடைய பெயர் பற்பல நூல்களிலும், சரித்திர ஆதாரங்களிலும், பலவாறாகக் கூறப்பட்டுள்ளது. வில்ஸனுடைய மெக்கன்ஸீ தொகையில் ஜயஸிங் என்றும், டேலர் அவர்களால் தொகுப்பிக்கப்பட்ட மெகன்ஸீ கையேட்டுப் பிரதிகளின் காடலாக்கில் தேசிங்கு என்றும், ஸிவெல் துரை யவர்கள் எழுதியிருக்கும் "பூர்விக சின்னங்களின் வருணனையில்" தேஜ்ஸிங் என்றும், பர்ஹானுத்தினின் "கர்நூலும் கர்நாடகமும்" என்ற நூலில் தாஜாப்ஸிங் என்றும் அவனது பெயர் எழுதப்பட்டுள்ளது.

தேசிங்கு ராஜன் தருகணாண்மையும், தளரா வுள்ளமும் படைத்தவன். வீரமும் துணிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவன். ஆதலின் பெயரளவிலேனும் கர்நாடக சுபேதாருடைய மேன்மையை யொப்புக் கொண்டு அவனுக்குப் பணிந்து கப்பஞ் செலுத்தும் சிற்றரசனாக யிருப்பதில் அவனுக்கு அமைதி யேற்படவில்லை. அத்தகைய இழிநிலைமையைத் தனது அந்தஸ்திற்கும், பராக்கிரமத்திற்கும் ஓர் இழுக்காக அவன் கருதியதில் யாதொரு ஆச்சரியமும் இருப்பதற்கில்லை. அவனுள்ளே புகைந்துகொண்டிருந்த சுதந்திர வுணர்ச்சி வீறுகொண்டெழுந்தது. எனவே, தனது சுயேச்சையை நிலைநிறுத்துவதற்குப் பல்காலும் அவன் முயன்றவண்ணமிருந்தான். ஆதலின், சிறிது காலத்திற்குள்ளாகவே ஆறுகாடு நவாபு ஸாதத் அலிகானுக்கும் அவனுக்கும் இக் காரணம் பற்றி பகைமை யுணர்ச்சியும் மனஸ்தாபமும் மேலிட்டு வந்தது. வருஷவாரிக் கப்பம் பல்லாண்டுகளாகச் செலுத்தப்படாமலேயே பாக்கி நின்றது. நவாபு ஸாதத் அலிகானும் சும்மா யிருக்கவில்லை. அவன் கர்நாடகப் பிரதேசத்திலுள்ள ஸைந்நிய மனைத்தையும் திரட்டிக்கொண்டு, தேசிங்கு ராஜனின் எழுச்சியை யடக்குவதற்காக ஆயத்தங்களைச் செய்யலாயினன்.

பசலி 1224-க்குச் சரியான கி. பி. 1714-15 ஆம் ஆண்டில் ஸாதத் அலிகான் எண்ணிறந்த வீரர்களடங்கிய தன்னுடைய ஸைந்நியங்களுடன் தேசிங்கு ராஜனது கோட்டையை முற்றுகை யிட்டான். சரித்திரத்திலே இதுவரையிலும் காட்டப்படாத இணையற்ற வீரத்துடன் தனது கோட்டையினின்றும் பகைவரின் முற்றுகையை யெதிர்த்து நின்றான் ராஜா தேசிங்கு. அவனது ஆருயிர் நண்பனும் வழுதாவூர் கில்லேதாரனுமான மஹபத் கான் என்பவனுடைய அருந்துணையுடன் தேசிங்கு ராஜன் ஆற்றிய வீரச் செயல்களின் மாட்சியா

யுற்று டில்லிச் சிறையிலிடப்பட்டவர்களில் தேசிங்கு ராஜனின் தந்தையாம் ஸரூப் ஸிங்கும் ஒருவன்.

ஸரூப் ஸிங் சிறையிலிடப்பட்ட காலையில், தேசிங்கு ராஜன் பால் மணம் மாறாப் பாலகனாக விருந்தான். அதன்பின் ஆண்டுகள் பல சென்றன. இதன் மத்தியில் தேசிங்கு பாலப் பருவங் கடந்து கண்டவர் காமுறும் கட்டழகு வாய்ந்த காளைப் பிராயத்தை யெய்தினான். ஏற்கெனவே அவனது ஸாகசச் செயல்களாலும், பராக்கிரமத்தினாலும் அவனது புகழ் நாடெங்கும் பரவி, மக்களின் பேச்சுக்கிடமாக விருந்தது. செஞ்சிக்கு அருகிலுள்ள சிங்கவரத்தில் கோயில்கொண்டிருந்த ஸ்ரீ ரங்கநாதப் பெருமாளின் பூர்ண அனுக்ரஹ விசேஷமும் அவனுக்கு வாய்க்கப்பெற்றிருந்ததாகக் கூறப்படுகிறது. தனது தந்தையைக் கடுஞ்சிறையி லிடுவதற்குக் காரணமாகவிருந்த அந்த நீலவேணிக் குதிரையின் கொட்டத்தை யடக்கி, அதன் மூலம் தனது தந்தையை விடுவித்துத் தனக்கு அரிய புகழையும், பிரபல்யத்தையும் தேடிக்கொள்ள வேண்டுமென்ற ஆவல் அவன துள்ளத்தில் தோன்றிப் பொங்கி வளர்ச்சியடைந்து வந்தது. இவ்வுத்தேசத்தை நிறைவேற்றக் கருதி, அவன் டில்லிக்குப் பிரயாணமாகி, சக்கிரவர்த்தியின் அனுமதியைப் பெற்று, யாவரும் வியக்கும் வண்ணம் அக் குதிரையை யடக்கி, மிகவும் லாகவமாக அதன்மீ தேறிச் சவாரி செய்யவும் தொடங்கினான். ஆனால் தெய்வீக குண விசேஷம் பொருந்திய அக் குதிரை அவனைத் தன் முதுகின்மீது சுமந்தவாறே ஆகாயத்தை நோக்கி விரைந்து ஏகலாயிற்று. எனினும் அவன் குலதெய்வமாக வணங்கி வழிபட்டு வந்த ரங்கநாதக் கடவுள் ஆகாயத்தில் அவனுக் கெதிரே பிரசன்னமாகி, அவனைத் தேற்றி அப்புரவியையும் அவனுக்குக் கீழ்ப்பணியுமாறு பணித்தனராம். அதற்கப்பால் ஓர் சிறு குழவியே போன்று அக் குதிரை அவனது ஏவலைத் தட்டாமலேயே சொன்னபடி யெல்லாம் நடக்கத் தொடங்கியதாம். புரவியின் குளப்படிகள் பூமியின்மீது படிந்து, அது அவன் இஷ்டப்படி யெல்லாம் நடந்துகொள்வதைக் கண்டு வியந்த பாதுஷா அவ் வாகனத்தையே அவனுக்குப் பரிசாக அளித்து, அவனது ஒப்பிலாப் பராக்கிரமச் செய்கையைத் தானங்கீகரித்துப் பாராட்டியதன் அறிகுறியாக, அவன் அது முதலாக யாதொரு கப்பமும் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டியதில்லை என்றும் விலக்குச் செய்தார். ஆனால் அக்காலத்தில் அவருக்குக் கீழ்ப்பட்டு, கர்னாடக நவாபாகப் பதவி யேற்றிருந்தவர் தேசிங்கின் செல்வாக்கும், கீர்த்தியும் நாளுக்கு நாள் மேலோங்கி வருவதைக் கண்டு அச்சமும், அழுக்காறுங் கொண்டு ஏதேனுமோர் சாக்குப் போக்குக் காட்டி அவன் பலத்தை ஒடுக்கிவிட வேண்டுமென்று கருதினான். ஆதலின் தேசிங்கு ராஜனால் செலுத்த வேண்டிய பகுதிப் பணம் செலுத்தப் படாமலே பாக்கி நின்றிருப்பதாகவும், அதனை யுடனே செலுத்தினா



லல்லது தான் கடுமையான நடவடிக்கைகளை யெடுக்க நேரிடுமென்றும் கண்டிப்பான செய்தி யொன்றை அவனுக்கு விடுத்தான். அதைக் கேட்கவும் தேசிங்கு மன்னன் வெகுண்டெழுந்து, கடுங் கோபங் கொண்டவனாய் அச் செய்தியைக் கொணர்ந்த தூதுவனிடம் மிகவும் துச்சமான பதிற் செய்தி யொன்றைச் சொல்லி யனுப்பினான். அதுவே போர் நிகழ்ச்சிக்கு ஆதாரமாயிற்று. நவாபு தன் படைகளைச் செஞ்சிக் கோட்டையை நோக்கிச் செலுத்தி, சுற்றிலுமுள்ள ஊர்களைச் சூறையாடினான். அப்பால் செஞ்சிக்கு ஒரு மைல் தூரத்திலுள்ள சங்கராபரணி யாற்றங்கரையிலே கூடாரங்களை யமைத்தான். நவாபின் ஆட்களால் பல வழிகளிலும் அவதியுற்ற மக்கள் அச்சமும் பீதியுங் கொண்டு தேசிங்கு மன்னனிடம் முறையிட்டுக் கதறி யழுதனர். அதுவரையிலும் தேசிங்கு பகைவரைத் தாக்குவதற்காக யாதொரு விசேஷ முயற்சிகளையும் செய்திருக்கவில்லை. எனினும் அவன் சிறிதேனும் மனங் கலங்கினானில்லை. தனியாகவேனும் சத்துருவை யெதிர்த்து நிற்பதென்றே அவன் உறுதிகொண்டான். எனினும் தனக்குடனே உதவி புரிய விரைந்தேகுமாறு வழுதாவூரிலிருக்கும் தனது உயிர் நண்பனான மஹபத் கானுக்கு மட்டில் செய்தி யனுப்பினான்.

## மஹபத் கானின் வீரமும் ராஜபக்தியும்

மஹபத்கானுக்கு அப்பொழுதுதான் விவாகம் நடந்துகொண்டிருந்தது. மணப் பந்தலில் தனது இளம் மனைவியின் கரத்தைப் பற்றி மங்கள வாழ்த்துகள் ஒலிக்க பெரியோர்களுடைய ஆசியைப் பெற்றுக்கொண்டிருக்கையில் அவனுக்கு மன்னனின் அழைப்பு—போர்க்களத்தில் முன்னணியில் நின்று தொண்டாற்றும் வீரனுக்கு விடுவிக்கப்படும் அழைப்பு எட்டியது. ஆனால் மஹபத் கானின் வீரம்தான் என்னே! கடமையின்பால் அவன் கொண்டிருந்த அளவற்ற விசுவாஸம்தான் என்னே! தாய் நாட்டின் சுயேச்சையைக் காப்பாற்றுவதில் தனது உயிரைப் புல்லெனக் கருதி போர் புரியும் நெஞ்சுத் துணிவு வாய்ந்த வீரர் குழாத்தி லொருவனாக மட்டுமே மஹபத் கான் விளங்கவில்லை. அவ் வருங் கடமையைச் செய்து முடிப்பதில் அப்பொழுதுதான் மணம் புரிந்ததும் புரியாததுமா யிருக்கும் மனைவியையும் மறந்து, பந்து ஜனங்கள் எவ்வளவோ தடுத்துக் கூறியதையும் கேளாமல், கேவலம் தனதாருயிர் நண்பனுக்குத் தன்னாலாக வேண்டிய உதவி யொன்றையே அவைகளிலும் உயர்ந்ததாகக் கருதி, அந் நேசக் கடனை நிறைவேற்றுவதில் சிறிதேனும் தயக்கமின்றி, மனவருத்தமின்றி, விரைந்தேகிய அவனன்றோ கர்மயோகிகளிற் சிறந்த வீரன்!

விவாகச் சடங்குகள் இன்னும் முற்றுப் பெறவில்லை. ஆயினும் மஹபத் கான் தனது நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் வயது

சென்ற தாய் தந்தையரிடமிருந்தும், அப்பொழுதுதான் மணக் கோலம் பூண்டு, இன்பக் களஞ்சியமாக விளங்கிய அருமை மனைவி யிடமிருந்தும் விடைபெற்றுக் கொண்டான். அடுத்த க்ஷணத்தில் அவன் செஞ்சிக் கோட்டையை நோக்கித் தனது குதிரையைக் கடு வேகமாகச் செலுத்துவானாயினன். என்னே! நட்பின் திறன்!

* * * * *

ராஜா தேசிங்குப் பாடலில் அம் மன்னன் தனது மனைவியிடம் விடை பெற்றுக்கொள்ளும் காட்சியைப் பாடிக் கேட்பவருக்கே அதனுடைய அருமை தெரியும். எப்படிப்பட்ட கல் மனமும் அதைக் கேட்டவுடன் பாகாக உருகிக் கரைந்துவிடும். அரும்பு வெடித்து மலரும் நவ யௌவனத்தின் சௌந்தர்ய ரூபராசியாக விளங்கும் தன் மனைவியை அதுகாறும் கண்ணாலும் கண்டதில்லையாம் மன்னன். குறித்த காலம் வரையில் அவர்கள் ஒருவரை யொருவர் சந்திப்பது இருவருடைய நலத்திற்கும் தீமை பயக்குமென்று சோதிடர்களும், காலக் கணிதர்களும் கூறியிருந்ததே அதற்குக் காரணம். வெற்றியும், தோல்வியும், உயிர்தரிப்பதும் உயிர் பிரிவதும் நிலையற்றதாக யிருக்கும் போர்க்களத்திற்கேகு முன், கடைசி முறையாக ராணியைச் சந்தித்து அவளுடைய ஆலிங்கனத்தையும் உற்சாகமூட்டும் தைரிய மொழிகளையும் பெற்று மனவமைதியுடன் செல்ல வேண்டுமென்பது அவனது விருப்பம். படுதாவிற்குப் பின்னிருந்தே இருவரும் விடை பெற்றுக்கொண்டனர். ராணி தன்னுடைய அழகிய கரத்தை நீட்டி, மன்னனுக்குத் தாம்பூலமளித்து, ஓர் உண்மை க்ஷத்திரிய வீரனைப் போன்று, ஒன்று வெற்றியுடன் மீண்டு வரவேண்டுமென்றும், அம் முயற்சியில் தவறினால், போரிற் புறமுதுகு காட்டாமல் களத்திலேயே இறப்பதே அதினும் மேல் என்றும் வீரமொழிகளைப் புகன்று அவனை உற்சாகப்படுத்தி யனுப்பினாள். வீணாநாதம் போன்ற அவளது மொழிகள் காதுகளில் ஒலிக்க, தனது குலதெய்வமாகிய ஸ்ரீ ரங்கநாதக் கடவுளை வணங்கி வழிபட்டுத் தனக்கு இரண்டு மணி நேரமே உயிர்ப்பிச்சை யளிப்பதா யிருப்பினும் அதற்குள்ளாக பகைவர் ஒருவராலும் தடுக்க முடியாத வலிமையையும் மந்திர சக்தியையும் தன் வாளாயுதத்திற்கு அருளவேண்டுமென்று அவன் பிரார்த்தனை செய்தனனாம். அந்தப் பொழுதிற்குள் நவாபின் ஸைந்நியத்தைச் சின்னாபின்னம் செய்து விடலாமென்பது அவனது உத்தேசம் போலும். எனினும் மன்னன் யுத்தத்திற்குப் புறப்படு முன் பற்பல துர்ச் சகுனங்கள் உண்டாயின.

அரங்கன் அருளினைப் பெற்ற மன்னன் முதல் தடவையில் நவாபின் ஸைந்நியங்களை அலங்கோலமாகச் சிதறடித்துத் தனது வெற்றியினால் மகிழ்ச்சியுற்றுக் கோட்டையை நோக்கித் திரும்பலுற்



றான். இதற்குள்ளாக அவ் வாளாயுதத்தின் மந்திர சக்தி மழுங்கி விட்டதாம். மரணமடைந்ததாகக் கருதப்பட்ட நவாபானவன் பின்னும் பெரியதோர் படையுடன் செஞ்சியை நோக்கி வருவதாக மீண்டும் அவனுக்குச் செய்தி யெட்டியது. மன்னன் தன் குதிரையை மறுபடியும் களத்தை நோக்கிச் செலுத்தினான். நவாபு ஓர் யானையின் மீது போடப்பட்ட அம்பாரியின்மீ தாரோகணித் திருந்தனன். அவனிருந்த விடத்தை நோக்கி தேசிங்கு தனது புரவியை விரைந்து முடுகினான். அவ்வற்புதமான குதிரை தனது முன்னங்கால்களிரண்டையும் உயரத் தூக்கி யானையை யெதிர்ப்பதற்காக நின்று கொண்டிருந்த சமயத்தில் யானையின் கீழே ஒழிந்திருந்த ஓர் வீரன் அதன் கால்களை வெட்டி வீழ்த்தினான். எனினும் அதனாலும் மனத் தளர்ச்சியுறாமல் மன்னன் போர்புரிந்தவாறே யிருந்தான். அவன் வலது சாரியாகவும் இடது சாரியாகவும் சுழன்று கணக்கற்ற வீரர்களை இயமனுலகிற் கனுப்பியவண்ண மிருந்தான். ஆனால் எண்ணிக்கையால் பெருத்த ஸைந்நியத்தின் முன் ஓர் தனி மனிதன் எம்மாத்திரம்! தேசிங்கு மன்னன் போர்க்களத்திலே உயிர் துறந்தான்; அவனுடைய வீர வாழ்க்கை முடிவெய்தியது. அதற்குச் சுவல்ப நேரத்திற்கு முன் மஹபத் கான் யுத்த முனையின் மற்றோர் புறத்தில் தைரிய லக்ஷ்மியோடு உறவாடி வீரர்கள் போற்றும் பொன்னுலகை யெய்தினான்.

தேசிங்கு ராஜனுடைய மரணத்திற்குப் பின் வெற்றியினால் நிதானம் தவறிய முகம்மதியர்கள் செஞ்சிக் கோட்டையைத் தகர்த்தும், இடித்தும் சொல்லொணா அட்டூழியங்களைப் புரிந்தனர். சுற்றிலுமுள்ள ஊர்களைத் தீக்கும் புனலுக்கும் ஊட்டி மகிழ்ந்தனர். மக்கள் உயிர் தப்பினால் போதுமென்று உடைமைகளை யெல்லாம் போட்டது போட்டவாறாக ஓட்டம் பிடித்தனர். தேசிங்கினுடைய மரணத்தோடு செஞ்சியின் வீழ்ச்சியும் முற்றுப் பெற்றது.

## செஞ்சியின் பிற்கால சரித்திரம்

அதற்கப்பால் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குமிடையே நிகழ்ந்த பற்பல யுத்தங்களிலும் செஞ்சிக் கோட்டை மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கியது. 1750-ம் ஆண்டில் கர்னல் புஸ்ஸியும் அவரது படையைச் சேர்ந்த பிரெஞ்சு வீரர்களும் நள்ளிரவில் அதைக் காக்கித் தம் வயப்படுத்தியது சரித்திரப் பிரஸித்தமான சம்பவங்களில் ஒன்றாகும். 250 பிரெஞ்சு வீரர்களும், 1200 சிப்பாய்களும், 4 பீரங்கிகளுமே தனக்குச் சகாயமாகக் கொண்டு

கர்னல் புஸ்ஸி நாஸிர் ஜங்கின் ஸ்வாதீனத்திலிருந்த மூன்று கோட்டைகளையும் சந்திராஸ்தமனத்திற்குப் பிறகு ஏக காலத்தில் தாக்கி, பொழுது விடிவதற்குள்ளாகக் கோட்டையைக் கைப்பற்றிய அதிசயச் செய்தியின் மூலம் அவருடைய புகழ் நாடெங்கும் பரவுவதற் கேதுவாயிற்று. கடைசி முறையாக 1760-ம் ஆண்டில் தென்னாட்டில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு அடியோடு முறியடிக்கப்பட்டு அவர்களுக்குத் தோல்வி மேல் தோல்வி ஏற்படும் வரையில் செஞ்சிக் கோட்டை அவர்களுடைய சுயாதீனத்தி லிருந்ததாகவே நினைக்க வேண்டி யிருக்கிறது. அதுவரையில் பிரெஞ்சு வீரர்களும் ஹைதர் அலியின் படையைச் சேர்ந்தவர்களும் செஞ்சிக் கோட்டையையே தமக்குரிய பெரிய அரணாகக் கருதி வந்தார்கள். ஹைதர் அலியும் கூட அக் கோட்டையின் மீது நாட்டம் வைத்திருந்ததாகவே கூறப்படுகிறது. 1761-ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் முடிவெய்திய இரண்டாவது மைசூர் யுத்தத்தின் விளைவாக செஞ்சிக் கோட்டையானது ஆங்கிலேயர்களின் கைகளுக்கு மாறிற்று. அன்று முதல் அந்த ஸ்தலம் ஆங்கிலேயருக் குட்பட்டதாகவே யிருந்து வருகிறது. ஆனால் வெகு காலம்வரையில் மகம்மதியர்களின் அட்டூழியங்களாலும், யுத்தத்தின் கொடுமைகளாலும் உயிர் துறந்தவர்களைக் காட்டிலும் இப் பிரதேசத்தில் மிகவும் வியாபகமடைந்திருந்த மலேரியா ஜ்வரத்தின் வேகத்தினாலேயே மக்களுக்கு ஏராளமான உயிர்ச் சேதம் ஏற்பட்டு வந்தது. இப்பொழுது சுகாதார இலாகாவினுடையவும் அரசாங்கத்தாருடையவும் முயற்சிகளின் காரணமாக அந் நோயின் கடுமை வெகுவாகக் குறைந்துவிட்டது.

இப்பொழுது அப் பெயர்கொண்ட தாலுகாவின் தலைமை ஸ்தலமாக விளங்குகிறது. பூர்வீக சின்னப் பாதுகாப்புச் சட்டப்படி சென்னை சரித்திர ஆராய்ச்சி இலாகா அதிகாரிகள் செஞ்சிக் கோட்டையின் கிலமான பாகங்களைப் புதுப்பித்தும், ஏற்கனவேயுள்ளவைகளுக்குக் கெடுதி ஏற்படாமல் அப்போதைக்கப்போது பழுது பார்த்தும் வருகின்றனர். ஒவ்வொரு வருஷமும் திரளான ஜனங்கள் அதன் படைப் பெருமையை யுத்தேசித்து அதைப் பார்வையிட்டு மகிழ்ச்சி யடைகிறார்கள்.

* * * * *

ஆனால் காலச் சக்கரத்தின் கதியை என்னவென் றுரைப்பது! பூமியதிரும்படியாக அடிமேலடி வைத்து கம்பீரமாக அணிவகுத்துச் செல்லும் சதுரங்க சேனையின் காலடியோசையாலும், பேரிகை எக்காளம் போன்ற போர்க் கருவிகளின் முழக்கத்தாலும் பளபள வென மின்னும் ஆயுதங்கள் ஒன்றோடொன்று உராய்வதால் ஏற்படும் பேரொலியாலும், பரபரப்பாக அங்குமிங்கும் நடமாடித் திரியும்



மக்களின் பேரிரைச்சலாலும் எந்நேரமும் பெருஞ் சந்தடியே குடிகொண்டிருந்த அப் பிரதேசத்தில் இப்பொழுது எவ்வளவு கடுமையான அமைதி நிலவி வருகின்றது! ஓர்புறம் போர் வீரர்களின் உல்லாசப் பாட்டுகளாலும், மற்றோர்புறம் யுத்தகளத்தில் படுகாயமுற்றவர்களின் பரிதாபகரமான கூக்குரல் த்வனியாலும் மிகுந்த பரபரப்புக்கும், துயரக் காட்சிகளுக்கும் நிலைக்களமாக விளங்கிய அவ்விடத்தில், குள்ளநரிகளும், ஊர் நாய்களும் ஊளையிடும் சத்தமன்றோ மற்றவைகளினும் அதிகமாக இரவின் அமைதியைக் கடைந்துகொண்டு நமது காதுகளில் ஒலி செய்கின்றன! யுத்த முனையை நோக்கித் துள்ளிச் செல்லும் குதிரைகளின் குளப்படியினின்றும் எழும் தூசிப் படலம் வானத்தையும் மறைக்க முற்றிலும் போர்க்கோலம் பூண்டு, அவைகளின் மீதாரோகணித்திருக்கும் வீரர்கள் அவைகளை முடுக்கிச் செலுத்தும் போது அவர்களது அடித் தொண்டையினின்றும் கிளம்பும் முரட்டு த்வனிக்குப் பதிலாக இது போழ்து வறுமையால் மெலிந்து, அரையுடையுமின்றி மூக்காலும் நிருவாணமாகக் காட்சியளிக்கும் ஏழைக் குடியானவன், எலும்புந் தோலுமாகவுள்ள மாடுகளை ஏரில் பூட்டி அவைகளைத் தாற்றுக்கோலால் ஓட்டும் ஈன சுவரத்தையே நாம் கேட்கலாம்! மன்னாதி மன்னர்களாலும், வாகை சூடிய வீரர்களாலும் அமைதியை நிலைநிறுத்துவதற்காக எந்நேரமும் குழப்பமும், பூசலும் மலிந்து யுத்த ஆரவாரமும், ஆயுதங்களின் ஆர்ப்பாட்டமும் நிறைந்து 'யுத்த பூமி'யாகவே யிருந்து வந்த அப் பிரதேசத்தின் அமைதியைப் பாதுகாப்பதற்குத் தடிதாங்கிய சாமானியப் போலீஷ் வீரனே இன்று போதுமானவனா யிருக்கிறான். அரண்மனையின் மாட்சியும், கோலாகலக் காட்சி வைபவங்களும் எண்ணிறந்த மக்களின் கருத்தையும் கவனத்தையும் கவர்ந்தது போல இன்று அவைகளின் பண்டை நினைவன்றோ மக்களை யீர்க்கிறது? அரசர்கள் தேஜோமயமான சிம்மாதனத்தி லமர்ந்து உள்நாட்டின் நிருவாகத்தில் மட்டுமேயன்றி, தேசாந்தர விவகாரங்களிலும் சிந்தையைச் செலுத்திய அரசிருக்கை மண்டபத்தில், இந் நாளில் சிலந்திப்பூச்சியானது மிகவும் நிதானமாகத் தனது மெல்லிய வலையைச் சுற்றிச் சுற்றி பின்னிக் கொண்டிருக்கிறது! ஆனால் மக்களின் நினைவினின்றும், செஞ்சிக் கோட்டையினுடையவும் அதன் இணையற்ற வீரனான தேசிங்கு மன்னனுடையவும் ஞாபகம் மறைவதற்கு, இன்னும் பல நாட்களாகுமென்பது மட்டில் நிச்சயம்.

# ஆராய்ச்சி மேடை.

## "திருக்குறள் நாட் குறிப்பு"

## *Tirukkural Gem Diary for 1934.*

மேற்கூறிய பெயரால் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப் பெற்ற 1934-ம் ஆண்டின் புதிய டைரி யொன்றை மதிப்புரைக்காக வரப்பெற்றோம். தமிழரின் முன்னேற்றத்தை நாடியுந் தமிழ் மொழி வளர்ச்சியைக் கருதியுந் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் செய்துவரும் அரிய பல முயற்சிகளைத் தமிழ் நாடு நன்கறியும். பண்டைத் தமிழ் நூல்களைப் பிழையறப் பரிசோதித்தும், விளக்க உரைகள் கண்டும்,காலத்திற்கேற்ப நேரிய முறையில் அறிவு தருஞ் சீரிய நூல்கள் பலவற்றைத் தக்காரைக் கொண்டு தமிழ் மொழியில் எழுதுவித்தும் உயர்ந்த தாளில், அழகிய உருவில் அச்சுப் பொறியேற்றி வெளியிட்டு வருவதில் இக் கழகமே இன்று முதன்மையுற்று விளங்குகிற தென்னலாம். இவர்களின் அரிய முயற்சியின் பயனாய்த் தோன்றிய இத் "திருக்குறள் நாட் குறிப்பு" வெளியீடும் தமிழர்களுக்குத் தனிப் பரிசிலாகப் பயன்படுவ தொன்றாம். எம் மதத்தோறுஞ் சம்மதமெனக் கொள்ளுஞ் சிறப்பு வாய்ந்த திருக்குறளைத் தமிழகத்திற்கு உரிமையாக்கிச் சென்ற திருவள்ளுவரின் திருஉருவத்தை முகப்பிற் கொண்டு, நாட் குறிப்பு வெளியீட்டுக் குரிய பஞ்சாங்கம், சிறப்பு நாட்கள், விடுமுறைகள், தபாற் குறிப்புகள், வட்டி—சம்பள அட்டவணைகள் முதலியன அடங்கிய முதற் பகுதியும், ஒவ்வொரு திகதிக்கும் ஒவ்வொரு பக்கங் கொடுக்கப் பெற்றது. அதில் திதி வார நட்சத்திர யோகங்கள் பொறிக்கப் பெற்றதோடு, தமிழ் மறையாகிய திருக்குறளின் முதல் 365 குறள்களை முறையே பக்கத்திற் கொன்றாகக் கருத்துரையுடன் பதிப்பித்தும், நாட் குறிப்பெழுதுவதற்குத் தேவையான யிடமளித்தும் நல்ல கடிதத்திற் பதிப்பிக்கப்பட்ட பிற்பகுதியும் வாய்ந்து விளங்கும் அவ் வெளியீடு சிறிய (பாக்கெட்) அளவில், சிறந்த (காலிக்கோ) கட்டுடன் முன்னிடப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு முதல் நான்கு ஆண்டுகளில் 1330 குறள்களையும் முறையே ஆண்டு ஒன்றுக்கு 365 குறள்கள் வீதம் கருத்துரையுடன் இவ் வெளியீட்டில் வெளியிடப்படுமென



வறிகின்றோம். எனவே நாட் குறிப்பை (டைரி) வாங்கும் முகத்தால் நான்கு ஆண்டுகளில் திருக்குறள் முழுதுங் கருத்துரையுடன் பெறக் கூடுமாதலால், தமிழகத்தார் அனைவரும் இந்த வெளியீட்டைத் தவறாமல் வாங்கிப் பயன்பெற வேண்டுமென்று உவகையோடு குறிப்பிடுகின்றோம். வேண்டுவோர் ஷை கழகத்தின் பெயரால் திருநெல்வேலிக்கோ அல்லது '6 பவளக்காரத் தெரு, சென்னை' என்ற விலாசத்திற்கோ எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை அணா 5, பென்சில் வைத்தது அணா 6.

N. V.

---

## தனவணிகன் சங்க மலர்.

ஆசிரியர்: ஸ்ரீமான் A. RM. A. கருப்பன் செட்டியா ரவர்கள்.

கிடைக்குமிடம்: நாட்டுக்கோட்டை செட்டியார் சங்கம்,
182, பார்வீதி, ரங்கூன்.

விலை ரூ 1—0—0.

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தின் ஆதீனத்தின் கீழ் "தனவணிகன்" என்ற வாரப் பத்திரிகை சிறப்புடன் ஒழுங்காக சுமார் 9 மாத காலமாய் நடந்து வருகிறது. இக் குறுகிய காலத்திற்குள்ளாகத் **தனவணிகன் சங்க மலர்** என்ற கட்டுரைப் புஸ்தகத்தை வெளியிட்டதைப் பற்றிப் போற்றுகிறோம். தமிழ்ப் பத்திரிகைகள் தக்கபடி ஆதரவு கிடையாது தவிக்கின்ற இந் நாட்களில், தமிழருக்கு பாஷாபிமானமும் பத்திரிகாபிமானமும் இல்லாத இந் நாட்களில் ஒரு ஆண்டு மலரை உயர் தரத்தில் அநேக சிறந்த கட்டுரைகளுடனும், பற்பல படங்களுடனும் வெளியிடுவது இலகுவான காரியமல்ல வென்பதை நாம நன்கறிவோம்,

கட்டுரைகள் எழுதியவர்களின் படங்களையும் தவறாது சேகரித்து வெளியிட்டிருப்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது. தனவணிக மரபைச் சேர்ந்த முக்கியமான எழுத்தாளிகளெல்லாம் சங்க மலரில் எழுதி சமூகத்தார்களுக்கு உற்சாகமளித்திருக்கிறார்கள். நானாவிஷயங்களைப் பற்றிக் கட்டுரைகள் மிளிர்கின்றன. தமிழ் நாட்டின் பிரபல அறிஞர்களது வியாசங்களும் காணப்படுகின்றன. சமூக சீர்திருத்தம், ஆலோசனைகள், புதிய திட்டங்கள் முதலியவைகளைப் பற்றிய வியாசங்கள் அடங்கி யிருக்கின்றன. அநேக அருமை வியாசங்கள் புத்துணர்ச்சிகளைத் தருகின்றன. ஒவ்வொரு வியாசத்தைப் பற்றியும் எழுதுவது ஒவ்வொரு வியாசத்திற்கும் மதிப்புரைக் கொடுத்தாகவே முடியும்.

# ஆசிரியக் குறிப்புகள்.

## துருக்கிக் குடி அரசின் 10-வது ஆண்டு விழா

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதிகக் கேவலமா யிருந்த துருக்கி இப்பொழுது நூதன உயிர் பெற்று, உலகம் மதிக்கும்படியான சிறப்புற்று விளங்குகிறது. காரணமென்ன? ஒரே ஒரு தனி மனிதர்தான். ஒரு வாலிப வீரரின் விடா முயற்சியே, தொடர்ச்சியான அபார உழைப்பே, தன்னலமற்ற பெருந் தியாகமே துருக்கிக்கு இன்று மகத்தான மகத்துவத்தை உண்டாக்கி யிருக்கிறது. மூடப் பழக்க வழக்கங்களாலும் வறுமையாலும் அடிபட்டுக் கல்வியின்மை யென்னும் அந்தகாரத்தில் அடைபட்டுக் கிடந்து தவித்துக் கொண்டிருந்தார்கள் துருக்கியர்கள். அக் குடிகள் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தார்கள்.

1922-ம் வருடம் வரையில் சுல்தான் ஆட்சியின் கீழே யிருந்து வந்தது துருக்கி. கடந்த ஐரோப்பியப் பெரும் போருக்குப் பின் லாசேன் உடன்படிக்கையின்படி துருக்கி சுதந்திரம் பெற்றது. துருக்கியில் குடி அரசு ஏற்படுத்தப்பட்டது. அதற்குச் சர்வாதிகாரி காஜி முஸ்தபா கமால்பாட்சா. 1878-ம் வருஷத்தில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் தோன்றிச் சிறிது கல்வி கற்று, தன் முயற்சியால் முன்னேறி, சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்தில் தன் நாட்டுக்காக அரும் பாடு பட்டு ஸ்தாபித்திருக்கும் குடியரசின் 10-வது ஆண்டு விழாவிற்கு உலகின் நானாபக்கங்களிலிருந்தும் ஆசிகள் வந்து குவிந்துகொண் டிருக்கின்றன. காஜி கமால் இல்லாவிட்டால் துருக்கி என்ற பெயரே ஐரோப்பாவில் இல்லாது போய்விடும். 10 ஆண்டுகளுக்குள் அந் நாடு முன்னேற்றம் அடைந்திருப்பதைப் பற்றிக் கேளுங்கள்.

---

எவ்வளவோ சிரமத்துடன் வியாசதானிகளிடமிருந்து கட்டுரைகளைப் பெற்று, அநேக படங்களுடன் நேர்த்தியாய் அச்சிட்டு சங்க மலரை வெளியிட்ட ஆசிரியர் ஸ்ரீமான் கருப்பன் செட்டியாரவர்களது முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறோம். இவ் வாசிரியர் தம் உருவப்படம் இச் சங்க மலரில் காணப்படாமலிருப்பது இச் சங்க மலருக்கு ஒரு குறையே. இந்த ஆண்டு வெளியீடு உருவத்திலும் உள்ளுறையிலும் நன்றாகவே யிருக்கிறது.

சாமி.

---



ஒரு சிறிய கிராமமா யிருந்த அங்கோரா இப்பொழுது லட்சம் ஜனங்கள் வசிக்கும் நகரமாய் அநேக பிர்மாண்டமான கட்டிடங்களுடன் துருக்கியின் தலைநகராய் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. மூலையில் முக்காடிட்டு வாழ்ந்து வந்த சகோதரிகளை நாட்டின் எல்லாத் துறைகளிலும் ஈடுபடும்படி செய்த கௌரவம் கமால் பாட்சாவுக்கே உரியது. டாக்டர்களாகவும், வக்கீல்களாகவும், நியாயாதிபதிகளாகவும், வியாபாரிகளாகவும், குமஸ்தாக்களாகவும், உபாத்தியாயினிகளாகவும் இன்னும் பற்பல தொழில் செய்பவர்களாகவும் பெண்கள் அங்கு வேலை பார்த்து வருகிறார்கள். ஆடவர்கள் சோம்பலை அகற்றி நாட்டின் முன்னேற்றத்தில் தலையிட்டு உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். 13 வயதுவரை ஆண் பெண் அனைவருக்கும் கட்டாயக் கல்வியுண்டு. 1922-ல் 100-க்கு 90 பேருக்குக் கல்வி கிடையாது. இன்று 100-க்கு 25 பேர்தான் படியாதவர்கள். கடந்த 3 வருடங்களில் தொழிற்சாலைகள் 370 லிருந்து 2200 ஆகப் பெருகியிருக்கின்றன. ஆண்டு 1-க்கு 1 கோடிப் பவுன் விலையுள்ள பொருள்களை ஏற்றுமதி செய்கிறது. விவசாய விஷயத்திலும் அதிகமாய் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. கிராமங்கள் எவ்வளவோ முன்னேற்றமடைந் திருக்கின்றன. தொழிலாளர் எவ்வளவோ விருத்தியாகி யிருக்கிறார்கள். போக்கு வரவு சாதனங்களான ரயில்வேக்கள், ரோட்டுகள் நூதனமாகப் பற்பல விடங்களில் தோன்றி யிருக்கின்றன. பாஷை, நடை, உடை வாழ்க்கை முதலிய அநேகவைகளில் நூதன மாற்றங்கள் வேகத்தில் ஏற்பட்டிருக்கின்றன. துருக்கியின் அதி விரைவான அபார முன்னேற்றத்தைக் கண்டு உலகமே பேராச்சரியத்துடன் பெரிதும் வியந்து தனது ஆசிகளைக் கூறிநிற்கிறது.

## தமிழ் அன்பர் மஹாநாடு

தமிழ் அபிவிருத்தியைக் கருதிச் சென்னையில் 'தமிழ் அன்பர் மகாநாடு' என்ற பெயருடன் ஒரு மகாநாடு டிசம்பர்மீ 23, 24-ம் தேதிகளில் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் கூடப்போகிறது. இதன் முயற்சிகளும் வேலைகளும் பற்றித் தமிழகத்தின் சகல பத்திரிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவர்கள் முயற்சியை நாம் போற்றுகிறோம். ஸ்ரீமான்கள் சுவாமி வேதாச்சலம், சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, கா. சுப்ரமண்ய பிள்ளை, உமாமஹேஸ்வரம் பிள்ளை, பூர்ணலிங்கம் பிள்ளை, சச்சிதானந்தம் பிள்ளை, உ. சா. வெங்கட்டராமய்யர், வெங்கிடசாமி நாட்டார், சுவாமி உருத்திர கோடீஸ்வரர், C. K. சுப்ரமண்ய முதலியார், திருமதி அசலாம்பிகை அம்மாள் முதலிய தமிழ்ப் பேரறிஞர்களின் கூட்டுறவின்றியும்,

இன்னும் ஏனைய உயரிய தமிழ் வித்வான்களின் ஒத்துழைப்பின்றியும் நடத்தும் மகாநாட்டைப் பற்றி நாம் குறை கூறாமலிருக்க முடியவில்லை. தமிழ்ப் பாஷாபி விருத்தியில் கட்சி, ஜாதி, மதப் பிணக்குகள் இல்லவே இல்லை. அப்படியிருந்தும் எல்லாத் தமிழ்ப் பெரியார்களையும் இதில் கலந்து கொள்ளும்படி இந்த நிர்வாகிகள் ஏன் செய்திருக்கக் கூடாது? இக் குறையை இம் மகாநாட்டார்கள் போக்குவது அவர்கள் தம் முதற் கடமையாகும் என்று சொல்லத் தேவையில்லை.

## வித்வான் மயில்சாமி நாயுடு அவர்கள்

இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களில் தபால் மூலமாகவும் கல்வி கற்பிக்கிறார்கள். வயது வந்தவர்களுக்கும் தொழிற்சாலையில் அமர்ந்திருப்போர்களுக்கும் இந்தத் தபால் முறையில் பயிற்சி மிகவும் உபயோகமானது. சிகாகோ சர்வகலாசாலையும் இன்னும் சில சர்வகலாசாலைகளும் தபால் மூலமாக அநேக பாடங்களையும் போதிக்கின்றன. அமெரிக்காவில் ஹோம் கரஸ்பாண்டென்ஸ் ஸ்கூல் (Home Correspondence School). லாசால் செட்டு யூனிவர்சிடி, லீலண்டு யூனிவர்சிடி முதலிய ஸ்தாபனங்கள் இதில் முக்கியமானவைகள். ஐ. ஸி. பள்ளிக்கூடம் (International Correspondence School), பென்னட் காலேஜ் (Bennett College)), யூனிவர்சிடி கரஸ்பாண்டன்ஸ் காலேஜ் (University Correspondence College), நார்மல் கரஸ்பாண்டன்ஸ் காலேஜ் (Normal Correspondence College) முதலியவைகள் இங்கிலாந்தில் முக்கியமானவைகள். இவைகளின் மூலமாய் அறிவைப் பெருக்கிக்கொண்டோர் பலர்; தொழிற் கல்வியில் பயிற்சி பெற்றோர் அநேகர்; கலாஞானத்தை அபிவிருத்தி செய்து கொண்டோர் பற்பலர்; சிறிய உத்தியோகங்களி லிருந்துகொண்டே பெரிய உத்தியோகங்களுக்காகப் படித்து உன்னதம் பெற்றோர் பலப்பலர். சிறு வயதில் இழந்த கல்வியை உழைப்பால் பெறுவதற்கு தபால் மூலம் போதிப்பு ஒரு சிறந்த சாதனமாகும்.

இம்முறை இந்தியாவில் விருத்தியாகவில்லை. புனா, கல்கத்தா, டெல்லி, பம்பாய் முதலிய விடங்களில் இம்மாதிரியான பள்ளிகள் சில இருக்கின்றன. தமிழகத்தில் தமிழ்ப் பயிற்றுவிப்பதற்கு ஒன்றுமே இல்லையென்று சொல்லலாம். ஆனால் தமிழ்த் தாயின் தவப் பயனாய் சுவாமி உருத்திர கோடீஸ்வரரவர்கள் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் கலாநிலையம் என்ற பெயருடன் ஒரு ஸ்தாபனத்தை நிறுவி அதில் தமிழ்ப் போதிப்பதுடன் தமிழைத் தபால் மூலமாகவும் போதிக்கிற விஷயத்தைப் பற்றி "பாரதி"யில் நாம் குறிப்



பொன்று எழுதி யிருந்தோம். இவ் வித்துத் தமிழகத்தில் முளைத்துக்கொண்டிருக்கிறது. தமிழர் தம் ஆதரவால் இது உண்டாக வேண்டி யிருக்கிறது. நீலகிரி உதகமண்டலம் முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் வித்வான் ஸ்ரீமான் மயில்சாமி அவர்கள் தபால் மூலமாய்ச் சென்னைச் சர்வகலாசாலையால் நடத்தப்படும் தமிழ் வித்வான் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்கு முன்வரப் போகிறார். இவர் செய்யும் புதிய நன் முயற்சியை நாம் பெரிதும் வியந்து போற்றுகிறோம். தமிழ் நாடு இவரது புதிய முயற்சிக்கு உற்சாகம் அளிக்குமானால், பல கலைகளையும் தபால் மூலமாய்ப் போதிக்க இவர் ஏற்பாடு செய்வாரென்று பெரிதும் நம்புகிறோம்.

## விவசாய இந்தியா

நிலவளம், நீர்வளம், மலைவளம் முதலியவற்றால் சிறப்புற்று இந்தியா உலக மாதாவுக்குத் திலகமென் பிரகாசித்தது. நாடு அடிமைப் பெற்றுச் சகல ஐஸ்வர்யங்களும் மங்கிவிட்டாலும் இன்னும் விவசாய நாடாகவே உலகில் முதன்மையாக விளங்குகின்றது. உலகத்தின் சாகுபடிக்கு லாயக்கான நீர்ப்பாசன வசதியுள்ள பூமியின் விஸ்தீரணத்தில் 100-க்கு 40 பாகம் இந்தியாவில் மட்டும் இருக்கிறது. மற்ற நாடுகளின் விஸ்தீரணங்களையும் கீழே தருகின்றோம் கவனியுங்கள்.

| | | பாசனமாகும் ஏக்கர்கள். | | | பாசனமாகும் ஏக்கர்கள். |
|---|---|---|---|---|---|
| 1. | இந்தியா | 5,00,00,000 | 12. | அர்ஜெண்டைனா | 20.00,000 |
| 2. | அமெரிக்கா | 2,00,00,000 | 13. | சையாம் | 17,50,000 |
| 3. | ருஷியா | 80,00,000 | 14. | ஈராக் | 15,00,000 |
| 4. | ஜப்பான் | 70,00,000 | 15. | மொராக்கோ | 15,00,000 |
| 5. | எகிப்து | 60,00,000 | 16. | ஆஸ்திரேலியா | 10,00,000 |
| 6. | மெக்ஸிகோ | 57,00,000 | 17. | சைனா | 10,00,000 |
| 7. | இத்தாலி | 45,00,000 | 18. | தென்னாப்பிரிக்கா | 8,00,000 |
| 8. | ஸ்பெயின் | 35,00,000 | 19. | பெரு | 8,00,000 |
| 9. | பிரான்ஸ் | 31,50,000 | 20. | அல்ஜீரியா | 4,00,000 |
| 10. | சில்லி | 30,00,000 | 21. | கானடா | 4,00,000 |
| 11. | ஜாவா | 30,00,000 | 22. | பிலிப்பைன் | 2,50,000 |

இவ்வளவு நீர்ப்பாசனமாகும் விஸ்தாரமான நிலமிருந்தும் நம் நாடு வறுமையால் வாட்டப்படுகிறது ஏன் என்று கவனிக்கிறீர்களா? நாட்டில் சுயாட்சி யில்லை. நம்மை நாமே கவனிக்க வேண்டும். சுய முயற்சியே சிறந்த முயற்சி.

## இலங்கைக்குப் போகப் புதிய வழி

தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து கப்பல் மூலமாக இலங்கைக்கு இந்தியப் பிரயாணிகள் சென்றுகொண்டிருந்தார்கள். பாம்பனில் பாலம் அமைத்து, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இரயில்வே சம்பந்தம் ஏற்படவே தனுஷ்கோடி வழியாகப் பிரயாணிகள் செல்ல ஆரம்பித்து விட்டார்கள். பாம்பன் பாலம் ரெயில்வே அதிகாரிகளுக்குக் கவலையை உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. ஆகையால் இலங்கைக்குப் புதிய வழியைப் பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். வேதாரண்யம் மூலம் புதிய வழியை ஏற்படுத்த யோசனை. வேதாரண்யம்—அகஸ்தியம் பள்ளி ரயில் வழியை கலிமியர் முனை வரை (Point Calimere) நீடிப்பதைக் குறித்துச் சர்க்கார் கவனித்து வருகின்றார்கள். கலிமியர் முனையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கப்பல் போக்கு வரவு நடக்கும். சென்னையிலிருந்து இலங்கைக்குப் பிரயாணம் செய்வோருக்கு இப் புதிய வழியால் 200 மைல் தூரம் குறையும்.

யாழ்ப்பாணத்திற்கும் வேதாரண்யத்திற்கும் சமீப காலத்திற்கு முன்பு கூடக் கப்பல் போக்கு வரவு நடந்தது. சில இலங்கைத் தமிழர்கள் வேதாரண்யம் பக்கங்களில் வசிப்பதை நாம் இன்றும் பார்க்கலாம். சர்க்கார் இந்தத் துறைமுகத்தை ஏனோ அடைத்து விட்டார்கள். இவர்கள் அடைத்துவிட்ட துறைமுகத்தை மறுபடியும் பொது ஜனங்களுக்குச் சௌகரியங்கள் உண்டாக்குமாறு திறப்பார்கள். வெகு விரைவில் இந்த புதிய திட்டத்தை நிறைவேற்றுவார்களாக. நாம் இதைப்பற்றி 1929-ம் வருஷத்தில் "பாரதி"யின் முதல் மாலை, 4-வது மணியில் எழுதியிருக்கிறோம்.

## கலப்பு மணங்கள்

இலங்கைத் தமிழராகிய ஸ்ரீமான் அரியநாயகம் அவர்கள் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் கல்வி கற்றுப் பட்டங்கள் பெற்றுத் திரும்பியவர். இப்பொழுது பங்காளம் சாந்திநிகேதனத்தில் ஆசிரியரா யிருக்கிறார். காசிமாதர் கல்லூரிக்குத் தலைவியான ஸ்ரீமதி அஷாதேவி, எம். ஏ. அவர்களைக் கவிச் சக்கிரவர்த்தி தாகூர் அவர்கள் முன்னிலையில் காதல் கலப்புமணம் சுமார் 6 மாதங்களுக்கு முன்பு செய்துகொண்டார். இத் தம்பதிகள் நீடூழி வாழ்க! வாழ்க! 25—11—1933ல் இரங்கூனில் பங்காள மாகாணத்தைச் சேர்ந்த திருவாளர் ஹரிதாஸ் குண்டுக்கும் சென்னை ராஜதானியைச் சேர்ந்த ஸ்ரீமான் கிருஷ்ணசாமி பிள்ளையின் புதல்வி ஸ்ரீமதி புவனேஸ்வரி அம்மைக்கும் கலப்பு மணம் நடைபெற்றது. இம் மணமக்கள் நெடுங்காலம் சிறப்புக்களுடனிருக்க! திரு. அரியநாயகம் அவர்கள் வங்க மாதை மணந்தார். திரு. ஹரிதாஸ் குண்டு அவர்கள் தமிழப் பெண்ணை விவாஹம் செய்துகொண்டார். இதன் மூலம் தமிழர்களுக்கும் பங்காளிகளுக்கும் எவ்வளவு தூரம் சம்பந்தம் ஏற்படப் போகிறதென்பதைப் பாருங்கள்.



ஜாதி மத பேதங்களை மறந்து இந்தியர் என்ற உணர்ச்சி இந்தியர்களுக்குத் தோன்றும் வரையில் இந்தியர்களுக்கு விமோசனமில்லை. வாலிபர்களிடையில் ஒற்றுமை உணர்ச்சி மிகு வேகமாய் வளர்ந்துகொண்டு வருகிறது. தேச விடுதலையும் வாலிபர் கைகளில்தானிருக்கிறது.

## யூதரைப் பாருங்கள்!

ஜெர்மனியில் சர்வாதிகாரியான ஹிட்லர் யூதர்களுக்குச் செய்யும் கொடுமைகளைச் சொல்லி முடியாது. ஜெர்மனியில் யூத மக்கள் அதிகமா யிருப்பினும், ஜெர்மன் அரசாங்கம் யூதர்களுக்குச் சம உரிமை அளிக்காததுடன் அவர்களை நாட்டை விட்டுத் துரத்தவும் முற்பட்டுவிட்டது. மாபெரும் அறிஞர்களின் உயர்வுகளையும் உபயோகங்களையும் கூடக் கவனிக்காது, அவர்களையும் அகற்றிய ஜெர்மன் சர்க்காரின் அடாத செயலைக் கண்டு உலகமே வருந்துகிறது. ஜெர்மனியில் யூதர்களின் வேரறுக்கும் பரியந்தம் தனக்கு மனச்சான்று இல்லையென்று தலைவர் ஹிட்லர் கர்ஜித்துக்கொண்டிருக்கிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள யூத மக்களுக்கு ஜெர்மெனித் தலைவரின் போக்கும் செய்கையும் பிடிக்கவில்லை. இவர்கள் லண்டன் மாநகரில் மகாநாடு கூடினார்கள். ஜெர்மனியிலுள்ள யூதர்களுக்குச் சம உரிமை கொடுக்கப்படும் பரியந்தம் ஜெர்மன் சாமான்களை யூதர்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். தங்களுக்கென ஒரு தாய் நாடில்லாத யூதர்களும் இக் காலத்தில் பழிக்குப் பழி வாங்கத் தைரியத்துடன் முன்வந்து விட்டார்கள்.

தென்னாப்பிரிக்கா, பீஜி, கானடா, மலேயா, இலங்கை, டிரினிடாட் முதலிய தேசங்களில் நமது இந்தியச் சகோதரர்களின் நிலையைப் பற்றி நினைக்க நினைக்க நமக்கு எல்லையற்ற வருத்தம் உண்டாகிறது. வெள்ளையர்கள் ஆள்வோராம்; நாம் ஆளப்படுவோராம். இக் காரணம் பற்றியே அயல் நாடுகளுக்குச் சென்று அங்கு வசிக்கும் இந்தியர்களுக்குச் சமத்துவம் அளிக்கப்படுவதில்லை. இந்தியா விடுதலை பெறும் வரையில், உலகின் வேறு தேசங்களில் இந்தியர்களுக்குச் சமத்துவம் கிடைக்குமென்பது பகற் கனவே யாகும். இந் நாட்டில் எத்தனையோ அயல் நாட்டினர்கள் வசிக்கிறார்கள்! அவர்களுக்கு இங்கு எவ்வளவோ மரியாதை கொடுக்கப்படுகிறது! இந்திய நாடு உரிமைபெற இயலாதிருக்கும் பொழுது எத்தனை சாஸ்திரிகள், எத்

தனை ரெட்டிகள், எத்தனை ராஜாக்கள் ஏஜண்டு ஜெனரல்களாக தென்னாப்பிரிக்காவிற்குச் சென்றும் பயனில்லை. இலங்கையிலும் மலேயாவிலும் இந்திய சர்க்காரின் ஏஜண்டுகள் சென்றும நன்மை யில்லை. இந்தியா சுதந்திரம் பெற்றால் இந்தியாவின் சகல துன்பங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகி ஓடிப் போய்விடும்.

## "தமிழ் நாடு"ப் பத்திரங்கள்

"தமிழ் நாடு" தினசரிப் பத்திரிகை நாட்டுக்கு நல்ல தொண்டு செய்து வருவதைத் தமிழ் மக்கள் அனைவரும் அறிந்த விஷயமாகும். "தமிழ் நாடு" கம்பெனியார் சாப்பாட்டு விடுதி வைத்து நடத்திப் பொது ஜனங்களுக்கு வசதிகளைக் கொடுக்கிறார்கள். படித்தவர்களிடையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும் விஷயத்தைக் குறித்து ஆலோசனை செய்து பத்திரங்கள் (பாண்டுகள்) வெளியிட வேண்டுமெனக் கனம் டாக்டர். வரதராஜுலு நாயுடு அவர்கள் கூறியதைப் பின்பற்றி "தமிழ் நாடு"க் கம்பெனியார்கள் ஒரு லட்சம், 5 ரூ. பத்திரங்களை இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்கள். புதிய முறையில் லாபகரமான தொழில்களை அமைத்து வேலை யில்லாமல் கஷ்டப்படும் படித்தவர்களுக்கு வேலைகளைத் தேடிக் கொடுப்பதே தங்கள் நோக்கமாகு மென்று அக் கம்பெனியார் அறிவித்திருக்கிறார்களென்று இங்கு குறிப்பிடுகிறோம்.

ஒரு பாண்டின் விலை ரூ. 5. ஆறாவது வருடத்தில் பாண்டுக்கு 6 ரூ. கிடைக்கும் அல்லது இடைக்காலத்தில் கம்பெனியார் இஷ்டப்பட்டால் 6 ரூ. கொடுத்துப் பத்திரங்களை ரத்து செய்து விடலாம். 5 ரூபாய்க்கு 6 ரூபாய் கிடைப்பதுடன் வருடந்தோறும் பத்தாயிரம் ரூபாய் வீதம் 5 ஆண்டுகளில் 50,000 ரூபாய் ஒதுக்கி வைத்து 6 மாதங்களுக்கொரு முறை சீட்டுக் குலுக்கிச் சீட்டு விழுந்தவர்களுக்குள் இத் தொகைப் பகிர்ந்து கொடுக்கப்படும். வேலை யில்லாது திண்டாடிக் கஷ்டப்படும் நமது சகோதரர்களின் நன்மையைக் கருதி இந்திய மக்கள் முக்கியமாகத் தமிழர்கள் இந்தப்பத்திரங்களை வாங்கி, பொதுஜன சேவையில் முற்பட்டிருக்கும் "தமிழ் நாடு"க் கம்பெனியை ஆதரிப்பார்களாக. இதைப்பற்றி அதிகமான விஷயங்கள் வேண்டியவர்கள், சென்னை "தமிழ் நாடு" லிமிடெட் என்ற விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளட்டும்.

## மலேயாவிற்கு இந்தியத் தொழிலாளர்கள்

மலேயா தேசம் குபேர நாடு என்று எண்ணி அநேக இந்தியத் தொழிலாளர்கள் அங்கு சென்றிருந்தார்கள். 1931-ஆம் ஏப்ரலில் எடுத்தக் கணக்குப்படி 3,79,996 பேர் இந்தியர் இருக்கின்றனர். இவர்களில் தென்னிந்தியர் 3,56,868 பேர். இவர்களில் தமிழர் மாத்திரம் 3,17,883 பேர் இருக்கின்றார்கள். அவர்கள் எவ்வளவு எதிர்பார்த்தார்களோ அவ்வளவு கிடைக்கவில்லை. மலாய் நாட்டில் ரப்பர் விலை விழுந்ததின் காரணமாக ரப்பர்த் தோட்ட முதலாளிகள் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைத்து விட்டார்கள். குறைபட்ட சம்பளம் இந்தியத் தொழிலாளர்களின் ஜீவனத்திற்குப் போதவில்லை. ஆகையால் அவர்கள் ஆயிரக் கணக்காய் இந்தியாவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. இவ்வாறு திரும்பி வந்தவர்கள் இங்கு வேலை கிடைக்காது பெருங் கஷ்டத்திற்கு ஆளானார்கள்.



இப்பொழுது அங்கு ரப்பர் விலை தூக்க ஆரம்பித்து விட்டது. இதைக் கண்டு இந்தியத் தொழிலாளர் ஆயிரம் ஆயிரமாக அங்கு செல்வதாகத் தெரிய வருகிறது. இந்தியா இப்பொழுது கவனிக்க வேண்டியதென்ன? குறிப்பிட்ட வேலை நேரம், அதிகச் சம்பளம், தாய்நாடு செல்ல நேரிடின் பிரயாணச் செலவு, கல்வி வசதி, சுகாதார வசதி முதலிய சௌகர்யங்கள் இந்தியத் தொழிலாளிகளுக்குச் செய்து கொடுக்கப்படும் என்று மலாய் நாட்டு அரசாங்கம் உறுதி கூற வேண்டும். இல்லையேல், இவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படும்.

காடாய்க் கிடந்த மலாய் நாட்டை இந்தியர் தங்கள் உழைப்பால் தங்க மயமாகப் பிரகாசிக்கச் செய்தார்கள். இப்படி இருப்பினும், இந்தியத் தொழிலாளர்களைச் சரியாய் மலாய்தேசத்தில் நடத்தப்படுவதில்லை. தொழிலாளர்களின் பல ஆயிரக்கணக்கான தமிழ்க் குழந்தைகளுக்குத் தாங்கள் செலவு செய்து கல்வி கற்பிக்க முடியாதென்று மலாய்ச் சர்க்கார் மறுத்து விட்டார்கள். இதைத் தமிழர் நினைவில் வைத்திருப்பார்கள். இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் அரிசிக்கு மலாய் நாட்டுச் சர்க்கார் வரி விதித்திருக்கின்றது. இந்தியத் தொழிலாளர் மீது இந்த அரசாங்கம் எவ்வளவு கருணை! இதனால் இந்தியத் தொழிலாளர் தக்க பாதுகாப்புகளுடன் அங்கு செல்ல வேண்டும். இவர்களின் பாதுகாப்புகளைத் தக்க முறையில் இந்திய அரசாங்கம் கவனிக்க வேண்டும். முன்னிருந்த போலவே குறைக்கப்பட்ட கூலி விகிதமே இந்தியத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதென்றும், அவர்களின் உழைப்புத் தேவையில்லாத பொழுது அவர்களை அவர்களின் தாயகத்திற்கு அனுப்பி விடுவதென்றும் அந்த அரசாங்கம் தீர்மானித்திருப்பதாய்த் தெரிய வருகின்றது. குறைந்த சம்பளத்தால் இந்தியர்கள் அந் நாட்டில் வாழ்வு நடத்துவதென்பது கஷ்டமான காரியமே. இந்தியத் தொழிலாளர்கள் அந் நாட்டில் மரியாதையுடன் வாழுமாறு அவர்களுக்குத் தக்க வசதிகள் செய்து கொடுக்கும்படி மலாய் அரசாங்கத்துடன் இந்தியச் சர்க்கார் வேண்டுவன செய்வார்களாக!

## "பாரதி" ஆபீசிலிருந்து விலக்கம்

"பாரதி"யின் காரியாலயத்தில் இங்கு வேலை செய்து வந்த திரு. தினகரன் நமது தொடர்பிலிருந்து விலகிக் கொண்டபடியால், அன்னாருக்கும் "பாரதி"க்கும் எவ்வித சம்பந்தமில்லையெனத் அறிவித்துக் கொள்கிறோம்.

## காந்தி அடிகளது சுற்றுப் பிரயாணம்

இந்து மதத்தைப் புனிதமாக்கவும் ஹரிஜனங்களுக்கு நீதி வழங்கவும் தீண்டாமை விலக்கு வேலையில் ஈடுபட்டுக் காந்தி அடிகள் மத்திய மாகாணத்தில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார். அவர் செல்லுமிடங்களிலெல்லாம் அவருக்குச் சிறப்புடன் வரவேற்புகள் நடக்கின்றன; பண முடிப்புகள் கிடைக்கின்றன; ஹரிஜனங்கள் மீது அனுதாபம் உண்டாகிறது. காட்டிற்குச் சென்ற ராமச்சந்திரமூர்த்தியைக் குகன் அன்புடன் வரவேற்றது போல, ஒரு ஆற்றங் கரையில் படகோட்டிகள் மஹாத்மா காந்தி அவர்களின் பாதபத்மங்களுக்குப் பூசை செய்து அவரை மரியாதை செய்தது குறிப்பிடத் தக்கது. அவரது இப் பிரச்சாரம் அரசியல் கலவாதபடியால், எல்லாக் கட்சிக்காரர்களும் அவருக்கு ஆதரவு அளித்து வருகின்றார்கள்.

## தமிழ் நாட்டிற்கு அடிகள் விஜயம்

காந்தி அடிகளுக்குத் தமிழர்களின் மீது மிக மிக அதிகமான ஆசை. தென்னாப்பிரிக்காவில் அவர் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு உற்ற துணைவர்களாயிருந்தவர்கள் முக்கியமாய்த் தமிழர்களே. தமிழப் பெண் வள்ளியம்மை செய்த தியாகம் அவரது ஹிருதயத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறது. தமிழர்களிடத்தில் ஆழ்ந்த அன்புகொண்டல்லவா அவர் தனது குமாரனுக்குத் தமிழ்ப் பெண்ணை மணம் செய்து வைத்தார். அவருடைய தூய தரிசனம் நமக்குப் பரம சந்தோஷத்தைக் கொடுக்கிறது. அவரது வருகையால் தமிழ் நாடு தீண்டாமை என்னும் மகா பாதகத்திலிருந்து புனிதமடைய வேண்டும்; தேச பக்தியும் தெய்வ பக்தியும் முன்னினும் அதிகமாகத் தமிழ் மக்களிடைப் பிரகாசிக்க வேண்டும்.

பிரிய தமிழர்களே, இதுவே அவரது தமிழ் நாட்டுக் கடைசிப் பிரயாணமாயிருந்தாலும் ஒருக்கால் இருக்கலாம். அவர் நெடுங் காலம் வாழ்வாராக! ஒவ்வொருவரும் தத்தம்மாலான அளவு அடிகளது தீண்டாமை விலக்கு நிதிக்கு உதவி செய்ய வேண்டுகிறோம். கேவலம் தீண்டாமை என்னும் தொத்து நோயை நமது மனத்திலிருந்து அகற்ற வேண்டுகிறோம். தீண்டாமையை அகற்றுவதே நாம் அடிகளாருக்கு செய்யும் மரியாதையாகும்.



## சைகோன் சர்க்கார் உத்திரவு ரத்து

1932-ம் வருஷத்தில் சைகோனிலிருந்து நாடு கடத்திய செட்டியார்களை மறுபடியும் பிரன்ச் கொச்சின் சைனாவுக்கு வரலாம் என்று அந்த அரசாங்கம் உத்திரவு செய்திருக்கிறது. சைகோன் அரசாங்கம் தனது தவறுதலை அறிந்து முதலில் பிறப்பித்த உத்திரவை வாபஸ் வாங்கிக் கொண்டதைப்பற்றி நாம் வெகுவாகச் சிலாகிக்கிறோம். இப்படிப்பட்ட காரியங்களை இனிமேலேனும் திடீர் திடீரென்று இந்த அரசாங்கம் செய்யாதிருக்குமாக. தாய் நாட்டை விட்டுக் கடல் கடந்து அயல் நாட்டில் தங்கித் தொழில் நடத்தும் நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்கு இந்தச் சர்க்கார் எவ்வளவோ உதவியாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அங்கிருக்கும் செட்டியார்கள் அனைவரும் ஒன்று கூடித் தங்களுக்காக ஒரு சங்கம் ஏற்படுத்தி தங்கள் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டிய வழிகளை அனுஷ்டிக்க வேண்டுகிறோம்.

## தலைவர் படேலின் நன்கொடை

தலைவர் படேல் அவர்கள் உயிருள்ளளவும் உழைத்து உழைத்து உயிர் விட்டதை உலகமறியும். தான் மரணமடைந்த பிறகும் தனது தாய் நாட்டுக்குத் தான் உபயோகப்படும்படி செய்துவிட்டுச் சென்றது அவரது முன் யோசனையைக் காட்டுகிறது. பொருள் திரட்டுவதைச் சற்றும் எண்ணாத திருமிகு படேல் அவர்கள் தன்னிடம் கடைசியாக மிஞ்சியிருந்த ஒரு லட்சம் ரூபாயையும் தன் தவத்தாய் நாட்டின் பணிக்காக-அயல் நாட்டில் இந்தியாவைப் பற்றிப் பிரச்சாரத்திற்காகக் கொடுத்துவிடுமாறு ஏற்பாடு செய்திருக்கிறார் என்று அறிகிறோம். அவரது இப் பணம் எவ்வாறு செலவு செய்யப்பட வேண்டுமென்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். அவர் குறித்திருக்கும் வழி போற்றற்குரியது. நாகரீக உலகின் நன்மதிப்பையும் அனுதாபத்தையும் இந்தியா அடைந்துகொள்ள வேண்டியது அவசியம். இந்தியர் அநாகரீகர் எனவும் பொறுப்பாட்சிக்குத் தகுதியற்றவர்களென்றும் பிரிட்டன் தேசத்திலும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் ஆங்கிலத் தலைவர்கள் விரோதப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இந்தியர்களது சுதந்திரக் கிளர்ச்சியை மறைத்தும் திரித்தும் பேசி இந்தியாது அந்தஸ்தைக் குறையும்படி செய்கிறார்கள். இவர்கள் இப்படிச் செய்வதற்குக் காரணமென்ன? இந்தியாவில் இவர்கள் செய்யும் அட்டூழியங்களை மறைப்பதற்காகவும் உலக மதிப்பை இழந்துவிடாதிருப்பதற்காகவும் இவர்கள் அயல் நாடுகளில் கட்டுப்பாடுடன் இந்தியாவைப் பற்றி விஷமப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இதைத் தடுப்பதற்காகவல்லவா தலைவர் படேல் அவர்கள் தனது சுகவீனத்தையும் கவனியாமல் அமெரிக்கா சென்று அநேக பிரசங்கங்கள் மூலம் பிரச்சாரம் செய்து திரும்பினர் என்பது எல்லாருக்கும் தெரியும்.

இப்படிப்பட்ட விரோதப் பிரச்சாரத்தைத் தடுத்து, இந்தியாவின் கௌரவத்தையும் நன்மதிப்பையும் காக்க வேண்டியது ஒவ்வொரு இந்தியனுடைய கடமையாகும். பல தேசங்களுக்குச் சென்று அந்தத் தேசத்தார்கள் இந்தியாவைப் பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயங்களை உண்மையாய் அறிந்தே இவ்வகைப் பிரச்சாரத்திற்குத் தன்னாலாக வேண்டிய ஏற்பாட்டைச் செய்து சென்றிருக்கிறார். தலைவர் படேல் அவர்களது திட்டத்தை நாம் உல்லங்கனம் செய்யாது, நாவன்மையும் கௌரவமுமிக்க அறிஞர்களை அயல் நாடுகளுக்கனுப்பிப் பண்டை இந்திய நாகரீகத்தைப் பற்றிப் பல வழிகளில் அங்கு பிரச்சாரம் செய்ய வேண்டும். அயல் நாடுகளில் இந்திய விளம்பர ஆபீஸ்களை ஏற்படுத்தி அடிக்கடி கணக்கற்ற துண்டுப் பிரசுரங்களை வெளியிட வேண்டும்; இந்திய அனுதாபிகளின் கூட்டங்களைக் கூட்டிப் பெருக்க வேண்டும்.

## நில வரியைக் குறைக்க வேண்டும்

உலகப் பொருளாதார கஷ்டத்தைப் பற்றித் தெரியாதவர்கள் உலகத்தில் ஒருவருமே இல்லை யெனலாம். இந்தியாவின் நிலையோ மிகக் கேவலமா யிருக்கிறது. காரணம் என்ன? இந்தியா விவசாய நாடு; 100-க்கு 90 பேர் விவசாயிகளா யிருப்பதாலும், நெல் முதலிய தானியங்கள் விலை குறைவாகவும், அதற்குக் கூட வாங்குவோர் இல்லாமலிருப்பதாலும், கடன் கொடுத்து உதவுவோர் இல்லாமலிருப்பதாலும் தங்கள் ஜீவனத்திற்கு வழியின்றி மிராசுதார்கள் படுங் கஷ்டத்தைச் சொல்லி முடியாது. அவர்களை அண்டிப் பிழைக்கும் விவசாயிகள் தங்கள் எஜமானர்களிடத்திலும் வேலை கிடைக்காது வெளியில் சென்றாலும் வேலை அகப்படாது படும் துன்பங்களை விவரிக்க முடியாது. வழக்கமாக ஏற்பட்டு வரும் செலவுகளைத் திடீரென்று குறைப்பது முடியாத காரியமா யிருக்கிறது. தஞ்சை ஜில்லா விவசாயிகள் படும் பாடு எழுதி முடியாது. அயல் நாடுகளில் விவசாயிகளுக்கு எவ்வளவோ வசதிகளிருக்கின்றன. அங்கு அரசாங்கங்களும் அதிகமாய் உதவுகின்றன. இங்கு அரசாங்கம் விவசாயிகளைப் பிழிந்து சாறு எடுத்துக்கொண் டிருக்கிறது.

விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமானால் சர்க்கார் இப்பொழுதிருக்கும் நிலத் தீர்வையில் 100-க்கு 50 வீதம் குறைக்க வேண்டும். அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் தானியங்களையும் அரிசி முதலியவைகளையும் நிறுத்த வேண்டும். விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் பணம் கடன் கொடுக்க வேண்டும்.

---

பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

# Cardamom Sale Company, Limited.

## (ஏலக்காய் விற்பனைக்-
## -கம்பெனி, லிமிடெட்,)

### தேவாரம்.

1913-ம் வருத்திய 7-வது இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி
ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

மூலதனம் ரூ. 2,10,000.

ஏல விவசாயிகளையே அங்கத்தினராகக் கொண்டது. அங்கத்தினர்கள் ஏலத் தோட்டத்தில் விளையும் சரக்குகளை வட இந்தியாவிலிருக்கும் பல முக்கிய பட்டணங்களுக்கு அனுப்பியும், ஐரோப்பா அமெரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு அனுப்பியும் விற்றுக் கொடுக்கிறோம்.

தங்கள் ஏல மகசூலை நல்ல விலைக்கு விற்க வேண்டுமானால், ஏல விவசாயிகள் தங்கள் சரக்குகளை எங்கள் மூலமாய் விற்க வேண்டுகிறோம்.

**O. R. கோண்டுலு செட்டியார்,**
மானேஜிங் டைரக்டர்,
**ஏலக் காய் விற்பனைக் கம்பெனி, லிமிடெட்,**
**தேவாரம்,**
மதுரை ஜில்லா.